- திரு.எஸ்சீ.ஜகத் அவர்கள் - அவதானிப்பாளர் (அமைச்சு)
- திருமதி.ரீ.ஜீ.ஐ.பத்மினி அவர்கள் - அவதானிப்பாளர் (அரச கணக்காய்வு)

ii. **2018 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவானது கீழ்வரும் அங்கத்தவர்களை கொண்டிருந்தது.**

- திரு.ஹேமால் கஸ்தூரி ஆராய்ச்சி அவர்கள் - குழு தலைவர்
- கலாநிதி ராணி ஜயமஹ அவர்கள் - குழு உறுப்பினர
- திரு.எஸ்சீ.ஜகத் அவர்கள் - அவதானிப்பாளர் (அமைச்சு)

4.10 சட்டம் சார்ந்த அலுவல்கள்

சட்டத்தைச் திருத்தம் செய்வதன் முன்னேற்றம்

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டத்தில் 1990 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவகங்கள் பதிவுகளை மேற்கொள்ளவதனை நெறிப்படுத்துவதற்கு அவசியமான வகையிலான சட்டரீதியான ஏற்பாடுகள் தொடர்பான சட்டமூலத்தினை சேர்த்துக்கொள்வதன் முக்கியத்துவமானது அடையாளம் காணப்பட்ட பின்னர் உரிய சட்டமூலத்தினை மேலும் வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சட்ட வரைவு திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட வரைவினை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மேலதிக நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மேலும், 2017 யூலை மாதம் புதிய ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்ட பின்னர் அவ் வரைவு மீண்டும் திருத்தங்களுடன் அமைச்சிடம் கையளிக்கப்பட்டதுடன் அவ் வரைவானது அமைச்சினால் சட்ட வரைவு திணைக்களத்திடம் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது

சட்ட வரைவினை மேலும் ஆராய்வதற்காக அதாவது இச் சட்டமூலத்தில் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க சட்டமூலமானது உள்ளடங்கியிருக்கும் காரணத்தினால் சட்டமூலத்தினை திருத்துவதில் நிறுவக நோக்கங்கள் மற்றும் அதிகாரங்கள் ஆகியவை தொடர்பாக காணப்படும் குழப்பமான நிலைமையினை தீர்ப்பதற்கு இரு நிறுவகத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் குழு ஒன்றினை ஆணைக்குழு நியமித்துள்ளது. மேலும், முன்மொழிவு வரைவு மற்றும் அவை தொடர்பான தகவல்கள் ஆகியவை மேலதிக நடவடிக்கைகளின் பொருட்டு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேலும், முழு சட்டமூலத்தினையும் ஒரே தடவையில் பரிசீலித்து திருத்தம் மேற்கொள்வதில் ஏற்படும் தாமதத்தினை விலக்குவதற்கு அத்தியவசிய விடயங்கள் தொடர்பான ஒழுங்குமுறையினை தயாரிப்பதற்கு அமைச்சின் மூலம் 2018.11.21 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஒழுங்குமுறை வரைவினை மேலதிக நடவடிக்கைகளின் பொருட்டு அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்படாத மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவுசெய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

ஆணைக்குழுவில் பதிவினை மேற்கொள்ளாமல் பயிற்சிகளை நடாத்திவரும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவகங்களை பதிவுசெய்வதற்கு ஆணைக்குழுவானது சட்டரீதியான அனுமதியின் கீழ் மேற்கொள்ளும் பொருட்டு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. அதற்கிணங்க, பத்திரிகை வாயிலாக விளம்பரங்களை பிரசுரிப்பதன் மூலமும் பதிவினை மேற்கொள்ளாத பயிற்சி நிறுவகங்களிற்கு தெளிவூட்டும் கடிதங்களை அனுப்பிவைப்பதன் மூலமும் அந்தந்த நிறுவகங்களிற்கு பதிவினை மேற்கொள்வதற்கான சூழ்நிலையினை ஏற்படுத்தியதுடன் இதுவரையில் 2018 ஆம் ஆண்டில் இவ்வாறான 25 கடிதங்கள் வரையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. 15 நிறுவகங்கள் வரையில் இது தொடர்பான நல்ல பதில்களை காட்டியுள்ளன.

நிதியுதவியை முறையாக பயன்படுத்தாத நிறுவகங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் பிரிவு 04 (ஈ) மற்றும் 04 (ஊ) சரத்துக்களின் கீழ் தனியார் பிரிவு.. அரச சார்பற்ற துறை நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவிகளை சரியான முறையில் பயன்படுத்தாமை மற்றும் பாடநெறிகளை தராதர அங்கீகாரம் செய்யாமல் பாடநெறிகளை நடாத்திவரும் பயிற்சி நிறுவகங்களிடமிருந்து அந்நிதியுதவித் தொகையினை மீளப்பெறுவதற்கு உரிய சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இங்கு, கீழே தரப்பட்டுள்ள நிறுவகங்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நீதிபதி திணைக்களத்திடம் அவசிய ஆவண நடவடிக்கைகளின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சமாதிபிரஜா அபிவிருத்தி மன்றம் ஸ்ரீ சோபித தொழிற்பயிற்சி நிறுவகம் ஆகியவற்றினை இணக்கசபையிற்கு அழைத்த போது அவர்கள் சமூகமளிக்கவில்லை. அவ்வாறே, இதுவரையில் இணக்கமின்மை தொடர்பான சான்றிதழானது வழங்கப்பட்டுள்ளதுடன் வழக்கினை தொடர்வதற்கு நீதிபதி திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ சோபித தொழிற்பயிற்சி நிறுவகத்திடம் கோரிக்கைப்பத்திரமானது கையளிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் மேற்கொண்ட கோரிக்கையினை கருத்திற் கொண்டு வழக்கு தொடர்பாக இணக்கப்பாடு எட்டப்பட்டதன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள பொருட்களை மீண்டும் ஆணைக்குழுவிடம் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விசாரணைகளை நடாத்துதல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு இவ் விடயம் தொடர்பாக ஒழுங்குபடுத்தும் நிறுவகமாக விளங்குவதால் பல்வேறு விடயங்கள் சார்ந்தாக பயிற்சி மத்திய நிலையங்களில் இடம்பெறும் பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு உரிய நிறுவகம், பயிலுநர் மற்றும் கணிப்பீட்டு அலுவலர்கள் ஆகியோர் முன்வருகின்றனர். இங்கு பக்கச்சார்பற்ற தலையீட்டாளர் என்ற வகையில் இப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவசிய விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் உரிய 06 நிறுவகங்கள் தொடர்பாக விசாரணைகளை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆணைக்குழு கூட்டங்களை நடாத்துதல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் உதவி பணிப்பாளர் (சட்டம்) அவர்கள் ஆணைக்குழுவின் செயலாளராக கடமையாற்றுவதுடன் 2018 ஆம் ஆண்டில் 06 பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

5.0 திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு

இவ்வாணைக்குழுவின் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் பிரதான தொழிற்பாடானது 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டத்தில் குறிப்பிடப்பட்ட முதலாவது குறிக்கோளானது இலங்கையின் பொருளாதார மற்றும் மனிதவள அபிவிருத்தித் தேவைகளுக்கேற்ப மூன்றாம் நிலைக்கல்வி, வாழ்க்கைத்தொழிற் கல்வி திட்டங்களை தயாரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் போன்ற இலக்குகளை நிறைவேற்றுவதற்காக உயிர்பான பங்களிப்புகளை வழங்குவதாகும். திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு பின்வரும் பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பாகவுள்ளது.

- தகுதியான தொழிற்பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவிகளை விருதளித்தல் மற்றும் வழங்கப்பட்ட நிதியுதவி தொடர்பாக விசாரணை செய்தல்
- தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல் மற்றும் செயற்படுத்துவதற்கான ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளல்
- இலங்கையில் மாகாண அடிப்படையில் தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துதல்
- தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக் கொள்கைகளை தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல்
- தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறைசார் ஆராய்ச்சிக் கற்கைகள் தொடர்பான ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளல்
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணைத்திட்டத்தினை நாளதுவரையாக்கல் மற்றும் அதற்கமைய ஆணைக்குழுவின் வருடாந்த செயலாக்கத் திட்டத்தைத் தயாரித்தல்
- ஆணைக்குழு மாதாந்த, காலாண்டு மற்றும் ஆண்டுத் தேர்ச்சி அறிக்கைகளைத் தயாரித்தல்

மேற்கூறிய பணிகளை நிறைவேற்றுவதற்காக திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவில் ஆறு (06) பேர் கொண்ட பதவியணியொன்று காணப்படுகின்றது. இப்பிரிவில் பணிப்பாளர் ஒருவர் (01), உதவிப் பணிப்பாளர்கள் இருவர் (02), அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் (01), கணனி பிரயோக உதவியாளர் ஒருவர் (01) மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவர் கடமைபுரிகின்றனர்.

அதற்கிணங்க, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவால் 2018 ஆம் ஆண்டில் பின்வரும் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

5.1 அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு நிதியுதவிகளை விருதளித்தல் மற்றும் விசாரித்தல்

அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சிப் பாடநெறிகளின் தரத்தையும் மற்றும் தொழிலாளர் சந்தை சார்பகத்தன்மையையும் முன்னேற்றுவதற்கு அவசியமான பயிற்றுவிப்பு உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக ஆணைக்குழு இவ்வேலைத்திட்டத்தைசெய ற்படுத்தியுள்ளது. இதனூடாக அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்படும் பாடநெறிகள் தேசிய தேர்ச்சி தரங்களுக்கமைய தராதர அங்கீகாரம் செய்யப்பட்டு அதன் மூலம் தேசிய தொழிற் திறன் தகுதிச் (ஏஞ) சான்றிதழ்களை விருதளிப்பதற்கான வாய்ப்பும் கிடைக்கின்றது.

2018 ஆம் ஆண்டு நிதியுதவி வேலைத்திட்டத்திற்காக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள பயிற்சி நிறுவகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்கமைய, பெறப்பட்ட விண்ணங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி நிறுவகங்கள் கணிப்பீடுகளிற்கு உட்படுத்தப்பட்டு நிதியுதவிகளை விருதளிப்பதற்கான அலுவல்கள் மேற்காள்ளப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் தனியார் துறை பயிற்சி நிறுவகங்களுக்கு விருதளிக்கப்பட்ட நிதியுதவி பற்றிய துறைசார்பான விபரங்கள் கீழே அட்டவணை 5.1 இல் காட்டப்பட்டுள்ளது..

அட்டவணை 5.1: 2018 ஆம் ஆண்டில் துறைரீதியாக விருதளிக்கப்பட்ட நிதியுதவி

பிரிவு	2018 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள (ரூபா மில்லியன்)	நிதியுதவி விருதளிப்பிற்கு அனுமதிக்கப்பட்ட பாடநெறிகளின் எண்ணிக்கை	நிறுவகங்களின் எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட நிதி (ரூபா மில்லியன்)
	ஆரம்பம்			
தனியார் மற்றும் அரசசார்பற்ற அமைப்பு பிரிவு	2.4	09	08	1.444

அட்டவணை 5.2: தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை பயிற்சி நிறுவகங்களுக்கு விருதளிக்கப்பட்ட நிதியுதவி - 2018

2018 ஆம் ஆண்டில் நிதியுதவி விருதளிக்கப்பட்ட நிறுவகங்கள் பற்றிய விபரங்கள்


இல	நிறுவகத்தின் பெயர	பயிற்சி பாடநெறி மற்றும் எதிர்பார்க்கப்படும் ஏஞ மட்டம்	விருதளிக்கப்பட்ட உபகரணங்கள் மற்றும் அளவு	அனுமதிக்கப்பட்ட நிதி (ரூபா)
1.	சதேர்ன் லக்மா ஹோட்டல் ஸ்கூல் பியூடி கெயார் அக்கடமி 628, காலி வீதி, களுத்துறை தெற்கு	பயிலுநர்களின் பொருட்டு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கைவினைஞர் ஏஞ மட்டம் 03	Computers - 08 UPS - 10 Printer - 01	596,400.00
2.	அத்துகல்புர உயர்கல்வி பாடசாலை 12.2.2, இரண்டாம் மாடி, எடிசலாட் கட்டிடம், குருணாகல்	தாதி உதவியாளர் NVQ மட்டம் 3	Half Body Dummy - 1 Serializer SS (10"x 5) - 01 Cheatle Forcep - SS (8") – 01 Cheatle Forcep - JR -01	103,250.00

இல	நிறுவகத்தின் பெயர	பயிற்சி பாடநெறி மற்றும் எதிர்பார்க்கப்படும் ஏஞ மட்டம்	விருதளிக்கப்பட்ட உபகரணங்கள் மற்றும் அளவு	அனுமதிக்கப்பட்ட நிதி (ரூபா)
3.	லசாலியன் கொமியுனிட் எடியுகே'ன் இல 25 மற்றும் 51, விகாரை வீதி, கொழும்பு 15	ஆடை தைப்பவர் NVQ மட்டம் 2	Flatlock Machine - 01 Zig Zag Machine - 01	96,529.30
4.	எஸ். ஏ. பீ. கணனி நிறுவகம், இல 59, காமினிபுர, திக்கோயா வீதி, ஹட்டன்	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கைவினைஞர் NVQ மட்டம் 4	Computers 02	93,100.00
		கணனி படவரைஞர் NVQ மட்டம் 4	Color Printer 01	17,500.00
5.	ஹார்போஸ் ஹோட்டல் பாடசாலை இல 384, மாத்தறை வீதி, மாகால்ல, காலி	சமையற்காரர் NVQ மட்டம் 3	Single Deck Oven 01 Deep Freezer (Small Size) 01	97,930.00
6.	மொஸ்வோல்ட் கல்வி நிறுவகம் கஸ்டம் வீதி, பலபீய	சமையற்காரர் NVQ மட்டம் 3	Cooler – 01 Microwave oven – 01 Electric Oven – 01 Hand Mixture – 03	70,145.00
7.	மாத்தறை மாவட்ட வர்த்தக சம்மேளனம் மற்றும் கம்பனி, இல 149, கக்மன வீதி, மாத்தறை	கணனி வரைபட கலைஞர் NVQ மட்டம் 4	Computers - 06	287,700.00
8.	வரையறுக்கப்பட்ட கூட்டுறவு வைத்திய சங்கம் கூட்டுறவு தாதி பயிற்சி பாடசாலை, இல 303, கொழும்பு வீதி, குருணாகல்	தாதி உதவியாளர் NVQ மட்டம் 3	Human Body Dummy - 01	143,500.00
அனுமதிக்கப்பட்ட மொத்த நிதி				**1,444,104.89**

அட்டவணை 5.3 : கைத்தொழிற் துறை ரீதியிலான நிதியுதவி விருதளிப்பு - தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்கள

கைத்தொழிற்துறை	பாடநெறி எண்ணிக்கை	அனுமதிக்கப்பட்ட நிதி (ரூபா)	சதவீதம் (%)
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்	02	627,550,00	43
ஆரேக்கியம்	02	246,750.00	17
ஆடை மற்றும் தைத்தல்	01	96,529.30	7
அச்சிடல்	02	305,200.00	21
ஹோட்டல் மற்றும் சுற்றுலா	02	168,075.59	12
மொத்தம்	09	1,444,104.89	100

வரைப்படம் 5.1: கைத்தொழிற்துறை ரீதியிலான நிதியுதவி விருதளிப்பு - தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்கள்



2018 ஆம் ஆண்டில் ஒவ்வொரு துறை ரீதியாக விருதளிக்கப்பட்ட நிதித்தொகை பற்றிய விபரங்கள் அட்டவணை 5.3 இலும் அது தொடர்பான பகுப்பாய்வானது வட்டவரைபு 5.1 இலும் விபரிக்கப்பட்டுள்ளன.

5.1.2 விருதளிக்கப்பட்ட நிதியுதவி தொடர்பாக விசாரணை செய்யும் வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள அரச, தனியார் துறை பயிற்சி நிறுவகங்களுக்கு விருதளிக்கப்படும் நிதியுதவி முறையாக பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக இவ்வாணைக்குழு வருடந்தோறும் கண்காணிப்பு வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தி வருகின்றது.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஆணைக்குழுவினால் அளிக்கப்பட்ட நிதியுதவிகள் தொடர்பாக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அது தொடர்பாக 10 பாடநெறிகள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இக்கண்காணிப்பு வேலைத்திட்டத்தின் மூலம் கண்டறியப்பட்டதன் பிரகாரம் நிதியுதவி வழங்கப்பட்ட 75□ ஆன பாடநெறிகளிற்கு தராதர அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

5.2 தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நாளதுவரையாக்கல்

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சி தேவைப்பாடுகளை கண்டறிவதற்காக தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. இவ் வேலைத்திட்டத்தின் கீழ் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டமானது தயாரிக்கப்படுவதோடு ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் நாளாதுவரையாக்கப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டு நிறைவடையும் போது தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டங்கள் 21 தயாரிக்கப்பட்டுள்ளதோடு திட்டங்கள்16 நாளாதுவரையாக்கப்பட்டுள்ளன.

5.2.1 தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை நாளதுவரையாக்கல்

a. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் துறை

2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தில் நீண்டகால அபிவிருத்தி இலக்குகள் (Sustainable Development Goals), இலத்திரனியல் அரச கொள்கை (e - Government Policy) மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் சார்ந்த சட்டமூலங்கள் ஆகியவை தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

b. தன்னியக்க வாகன தொழில்நுட்ப துறை

தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை நாளதுவரையாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் தன்னியக்க வாகன தொழில்நுட்ப துறைக்கான திட்டத்தை நாளதுவரையாக்குவத்றகான அலுவல்கள் 2018 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு மல்ரி - டெக் சொலுசான தனியார் நிறுவகமானது இது தொடர்பாக ஆலோசனை சேவையினை வழங்கிவருகின்றது. இவ் அறிக்கையினை தயாரிப்பதற்காக இவ் வருடத்தில் ரூபா 1.088 மில்லியன்கள் நிதித் தொகையானது செலவு செய்யப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டில் இவ் அறிக்கை தயாரிப்பினை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

5.3 தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் ஆராய்ச்சிக் கற்கைகளை செயற்படுத்தல்

திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் ஆராய்ச்சி சிற்றறை டுசுநளநயசஉா ஊநடட) ஆனது நடாத்தப்பட்டு வருகின்றது. 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சிற்றறை இது வரையில் தொழில்நுட்ப மற்றும் தொழிற் துறைக்கு முக்கியமான பல ஆராய்ச்சி முடிவுகளை வெளிக்கொண்டு வருவதற்காக நிதிசார் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குகின்றது. அத்துடன், நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கற்கைகள் ஆணைக்குழு இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டு ஆராய்ச்சிச் சிற்றறையால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

5.3.1 புதிய ஆராய்ச்சிக் கற்கைகள்

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழ் இயங்குகின்ற பயிற்சி வழங்கும் நிறுவகங்களிடமிருந்து ஆராய்ச்சி முன்மொழிவுகள் கோரப்பட்டன. அதற்கமைய, பல்வேறு நிறுவகங்களைப் பிரதிநிதித்துவம் செய்து 47 ஆராய்ச்சி முன்மொழிவுகள் ஆராய்ச்சி சிற்றறையிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அம் முன்மொழிவுகள் ஆராய்ச்சி வழிநடத்தும் செயற்குழுவால் (Research Steering Committee) மதிப்பீடு செய்யப்பட்டதன் பிற்பாடு துறைக்கு உகந்த, காலத்திற்கேற்ற 13 ஆராய்ச்சி கற்கைகளுக்கான அனுமதி ஆணைக்குழுவிடம் இருந்து பெறப்பட்டது. இவ் ஆராய்ச்சி கற்கைகளில் தரத்தினை பேணும் பொருட்டு ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் அவசிய ஆலோசனைகளை வழங்குதல் போன்றவை மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆராய்ச்சி சிற்றறை மற்றும் ஆராய்ச்சி குழு ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக ரூபா 1.0 மில்லியன் நிதி பங்களிப்பானது திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு ஆராய்ச்சிக் கற்கைகள் தொடர்பாக ஒதுக்கப்பட்ட செலவினங்கள் கீழே அட்டவணை 5.4 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 5.4: திறன்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் நிதி பங்களிப்பு மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி கற்கை - 2018

இல	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சி நோக்கம	ஆராய்ச்சி குழு	அனுமதிக்கப பட்ட நிதி (ரூபா)	2018 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா)
1.	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் பயிற்றுநர்களின் திறன்களை மேம்படுத்துவதில் காணப்படும் தடைகள் தொடர்பான கற்கை	DTET இல் தொழில்நுட்ப விடய துறைசார் திறன்களை மேம்படுத்துவதற்கு குறு கிய கால, மத்திம கால மற்றும் நீண்ட கால தீர்வுகளை தீர்மானித்தல். நோக்கங்களாவன, ● பயிற்றுநர்களை மேம்படுத்துவதில் உள்ள தடைகளை கண்டறிதல் ● மேற்கூறப்பட்ட நிலைமையினை விலக்குவதற்கான தீர்வுகள்	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	105,000.00	75,000.00
2.	இலங்கையில் அரசதுறை தொழிற்பயிற்சி துறைசார் தொழில் அபிவிருத்தி சேவையின் வினைத்திறனின் செல்வாக்கு தொடர்பில் மேல்மாகாணத்தின் நிலைமைகள் பற்றிய கற்கை	● இலங்கையின் அரசதுறையில் தொழிற்பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களின் தொடர்ச்சியான தொழில் அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்படும் தொழிற்தகவல் சேவையின் செல்வாக்கினை அடையாளங்காணல் ● இலங்கையின் அரசதுறையில் தொழிற்பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களின் தொடர்ச்சியான தொழில் அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்படும் தொழில்வழிகாட்டல் சேவையின் செல்வாக்கினை அடையாளங்காணல்	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	130,000.00	65,000.00

இல	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சி நோக்கம	ஆராய்ச்சி குழு	அனுமதிக்கப பட்ட நிதி (ரூபா)	2018 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா)
		● இலங்கையின் அரசதுறையில் தொழிற்பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களின் தொடர்ச்சியான தொழில் அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்படும் தொழில் ஆலோசனையின் செல்வாக்கினை அடையாளங்காணல்			
3	தொழிற்கல்விசார் தொழில்முயற்சி யாளர்கள் மற்றும் சமூக ரீதியான தொழில்முய-ற்சியாளர்கள் ஆகியோரை உருவாக்கு-வதற்கான ஆற்றல்களை கண்டறிதல் தொடர்பான கற்கை	● தொழில்நுட்ப கல்வியினை பயிலும் மாணவர்களின் தொழில்முயற்சியாண்மை ஆற்றலினை வளர்க்கக்கூடிய சந்தர்ப்பங்களை கண்டறிதல் ● தொழிற்கல்வியினை பெற்றுக்கொண்ட மாணவர்கள் தொழில்முயற்சி-யாளர்களாக-ாமைக்கான காரணங்களை கண்டறிதல் ● தொழிற்கல்வியில் தொழில்முயற்சி-யாண்மையினை உருவாக்கும் பொருட்டு காணப்படும் தடைகளை கண்டறிதல் ● தொழில்முயற்சியாண்மை திறன்களை கொண்ட நபர்களுக்கு தொழிற்கல்வியினை வழங்குவதற்கான சந்தர்ப்பங்களை அடையாளங்காணுதல் ● தொழில்நுட்ப கல்வியின் மூலம் புதிய வியாபாரத்தினை ஆரம்பிப்பதனால் ஏற்படக்கூடிய பொருளாதார நன்மைகளை கண்டறிதல் ● தொழில்முயற்சியாண்மை சார்ந்த தொழிற்கல்வியின் அடிப்படை நோக்கங்களை அடைவதற்கான ஆற்றல்களை கணிப்பீடு செய்தல். ● தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி கற்கையினை வழங்குதல் தொடர்பான பிரச்சினைகளை அடையாளங்காணல்	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	150,000.00	75,000.00

இல	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சி நோக்கம	ஆராய்ச்சி குழு	அனுமதிக்கப பட்ட நிதி (ரூபா)	2018 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா)
		• தொழில்முயற்சியாண்மைக்கு உரியதாக அபிவிருத்தி செய்யவேண்டிய வசதிகள் தொடர்பான மதிப்பீடு			
4	திறன் அடிப்படையிலான பயிற்சி முறையிலும் பார்க்க பிரச்சினைகளை அடிப்படையாக கொண்ட கற்றல் முறையின் வினைத்திறன் தொடர்பான கற்கையினை மாரவில தொழிற்பயிற்சி மத்திய நிலையத்தின் மின் துறை பற்றிய கற்கை	• பிரச்சினைகளின் அடிப்படையில் கற்றினை திறன் அடிப்படையுடன் ஒப்பிடக்கூடிய விடயங்களை கண்டறிதல் • இலத்திரனியல் பாடநெறியின் கற்றல் கற்பித்தல் முறை	இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை	150,000.00	75,000.00
5	தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் நடாத்தப்படும் இலகு பொறியியல் பாடநெறிகள் தொடர்பாக பயிலுநர்களிற்கு நிறுவக காரணிகளால் ஏற்படும் செல்வாக்குகள் தொடர்பான கற்கை	• VTA இல் மின் பொறியியல் பாடநெறியினை பயிலும் பயிலுநர்களிடத்தில் நிலவும் பௌதிக வளங்கள் தொடர்பிலான செல்வாக்கினை கண்டறிதல். • VTA இல் மின் பொறியியல் பாடநெறியினை பயிலும் பயிலுநர்களிற்கு பயிற்சி வழங்கல் பொருட்கள் தொடர்பில் ஏற்படும் செல்வாக்கினை அடையாளங்காணல். • VTA மின் பொறியியல் பாடநெறிகளை பயிலும் மாணவர்களிடத்தில் பயிற்சி வழங்கல் தொடர்பில் காணப்படும் செல்வாக்குகளை தீர்மானித்தல்	இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை	150,000.00	75,000.00

இல	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சி நோக்கம	ஆராய்ச்சி குழு	அனுமதிக்கப பட்ட நிதி (ரூபா)	2018 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா)
6	வாழ்க்கைத்-தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்க-ழகத்தில் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்களிடையில் ஆங்கில தொடர்பாடல் ஆற்றலினை மேம்படுத்தும் நோக்கிலான குறுகிய கால மற்றும் நீண்ட கால தந்திரோபாங்கள் தொடர்பான கற்கை	பட்டப்படிப்பினை பயிலும் மாணவர்களிடையில் ஆங்கில மொழி தொடர்பாடல் திறன்களை பகுப்பாய்வு செய்யும் தேவையினை நிறைவேற்றல். ● ஆங்கில மொழி மூலமான தொடர்பாடல் திறன்கள் மற்றும் தொழிற்துறையில் தற்போது காணப்படும் வேலைத்திட்டங்கள்.'. ஏனைய செயற்பாடுகள் இடையில் காணப்படும் இடைவெளியினை அடையாளங்காணல் ● வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் தொடர்பாடல் திறன்கள் தொடர்பான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேம்படுத்தல் ● வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பினை பயிலும் மாணவர்களின் தொடர்பாடல் திறன் மேம்பாட்டிற்காக குறுகிய மற்றும் நீண்ட கால திட்டங்களை முன்வைத்தல்	வாழ்க்கை-த்தொழில்சார் தொழில்நு-ட்பவியல் பல்கலை-க்கழகம்	145,000.00	72,500.00
7	தொழில்வா-ய்ப்புகள் தொடர்பாக NVQ டிப்ளோமா மாணவர்களின் பொது (மென்) திறன்கள் பற்றிய செயற்திறன் தொடர்பான இடைவெளிகளின் எதிர்பார்ப்பு தொடர்பான கற்கை	● டிப்ளோமா மாணவர்கள் மற்றும் தொழில்வழங்குநர்கள் ஆகியோரின் தொழில் எதிர்பார்ப்புகளை அடையாளங்காணல் ● அவர்களின் மேம்பாட்டிற்கு தேவையான திறன்களை கண்டறிதல் மற்றும் அவ்வாறான எதிர்பார்ப்புகளை தொழிற்சந்தைகளிலுள்ள தேவைகள் மற்றும் -	வாழ்க்கைத்-தொழில்சார் தொழில்நு-ட்பவியல் பல்கலை-க்கழகம் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொ-ழிற்பயிற்சி அதிகாரசபை சமுத்திர பல்கலை-க்கழகம்	150,000.00	75,000.00

இல	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சி நோக்கம	ஆராய்ச்சி குழு	அனுமதிக்கப பட்ட நிதி (ரூபா)	2018 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா)
		எதிர்பார்ப்புகளுடன் ஒப்பீடு செய்யக்கூடிய வழிமுறைகளை அடையாளங்காணல் ● NVQ 5 இல் நிலவும் தற்போது காணப்படும் தொழில்வழங்குநரின் மொடியூலினை செல்லுபடியாக்குவதற்காக			
8	குருணாகல் மாவட்டத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார்பாக நிலவும் கவர்ச்சியினை மேம்படுத்தும் காரணிகளை பகுப்பாய்வு செய்தல் தொடர்பான கற்கை	● தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிலுநர்களிடத்தில் கவர்ச்சியினை மேம்படுத்தக்கூடிய காரணிகளை கண்டறிதல் ● தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் மாணவர்களிடையில் கவர்ச்சி தொடர்பாக செல்வாக்கு செலுத்தும் காரணிகளை அடையாளங்காணல் ● தொழிற்பயிற்சி துறைசார் கவர்ச்சி தொடர்பாக பெற்றோரின் மனப்பாங்குகளை இனங்காணல் ● மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி துறைசார் கவர்ச்சி தொடர்பாக பாடசாலைகளில் காணப்படும் மனப்பாங்கினை இனங்காணல் ● தொழிற்பயிற்சி துறைசார் கவர்ச்சி மீது தொழில்வழங்குநர்களின் கேள்விகளை அடையாளங்காணல்.	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	150,000.00	75,000.00

இல	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சி நோக்கம	ஆராய்ச்சி குழு	அனுமதிக்கப பட்ட நிதி (ரூபா)	2018 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா)
9	தொழில்நுட்பகல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்திற்கு சொந்தமான நிறுவகங்களில் நிலவும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) டிப்ளோமா பாடநெறியானது பெண்களின் பொருளாதார விருத்தி மற்றும் தொழிற்சந்தைகளில் பெண் தொழிலாளர்களின் முன்னேற்றம் ஆகியவற்றில் எவ்வாறு பங்களிப்பு செய்கின்றது என்பது தொடர்பான கற்கை	• தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கல்வியினை வழங்குவதற்கு DTET பயன்படுத்தும் தற்கால தந்திரோபாயங்களின் செயற்திறன் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொழிலாளர்களுக்கான பங்களிப்பு என்பவற்றினை ஆராய்தல் • தொழிலாளர் சந்தை கேள்வி மற்றும் வழங்கல் தொடர்பாக தகவல் தொழில்நுட்ப கல்வியின் தற்கால பயன்பாடு தொடர்பாக நிலவும் பிரச்சினைகளை கண்டறிதல்	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	150,000.00	75,000.00
10	தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் பயிலுநர் பயிற்சி பாடநெறிகளின் செயற்திறன் மதிப்பீடு (விசேடமாக சமையற்காரர் துறை தொடர்பாக)	• தொழிற்பயிற்சியினை பெற்றுக்கொள்வதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள பொறிமுறை தொடர்பான பிரச்சினைகளை ஆராய்தல் • தொழில்சார் பயிற்சி செயற்பாடுகள் தொடர்பான பொருத்தப்பாட்டினை அடையாளங்காணல் • அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பயிலுநர்கள் மற்றும் தொழிற்சாலைகள் என்பவற்றின் பின்னூட்டல்களை பகுப்பாய்வு செய்தல்	தேசிய பயிலுநர் மற்றும் கைத்தெ-ாழிற்பயிற்சி அதிகாரசபை	112,000.00	56,000.00
11	லங்கை மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் காணப்படும் தொழில்வழிகாட்டல் முறைமைகள் தொடர்பான ஒப்பீட்டு கற்கை	• இலங்கை தொழிற்பயிற்சி துறையில் தொழில்வழிகாட்டல் சந்தர்ப்பங்களின் தற்போதைய நிலைமையினை பகுப்பாய்வு செய்தல்.	தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	150,000.00	75,000.00

இல	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சி நோக்கம	ஆராய்ச்சி குழு	அனுமதிக்கப பட்ட நிதி (ரூபா)	2018 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா)
		● இலங்கையில் பொருத்தமான பயிற்சிக்கான தொழிற்பயிற்சி துறை ஒன்றினை கண்டறிவதற்கு வேறு நாடுகளில் பின்பற்றப்படும் தொழில்வழிகாட்டல் பொறிமுறைகளை ஆராய்தல் ● இலங்கை தொழிற்பயிற்சி துறைசார் அத்தியவசிய பாகமொன்றாக தொழில் வழிகாட்டலினை உருவாக்கும் பொருட்டு கொள்கையினை சிபார்சு செய்தல			
12	வடமாகாணத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தேசிய தொழிற்தகைமை மட்டம் 05 இற்கான பயிற்சியில் தொழிற்துறைசார் பயிற்சியின் செயற்திறன் தொடர்பான கற்கை	● கேள்விகளை இனங்காணல் - தொழிற்சந்தையில் பயிலுநர்கள் தொடர்பாக ● தேசிய பயிலுநர் நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படும் சமூக பாடநெறிகளின் செல்லுபடியாகும் தன்மையினை இனங்காணல் ● தொழில்நுட்ப சந்தையில் பயிலுநர்களை அடையாளங்காணல் ● பாடநெறிகள் விருத்தியாகும் பிரிவுகளை கண்டறிதல	மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு	150,000.00	75,000.00
13	இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையில் கட்டிய கைவினைஞர் மற்றும் மர வேலையாளர் ஆகிய பாடநெறிகள் தொடர்பாக பங்காளிகளின் மனப்பாங்கு தொடர்பான கற்கை	பிரதான நோக்கம் ● VTA பங்காளிகள் இடையில் கட்டுமான துறைசார் கட்டுமான கைவினைஞர் மற்றும் மர வேலை கைவினைஞர் ஆகியோர் தொடர்பாக நிலவும் கருத்துக்களை அடையாளங்காணல	இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை	150,000.00	75,000.00

இல	ஆராய்ச்சி தலைப்பு	ஆராய்ச்சி நோக்கம	ஆராய்ச்சி குழு	அனுமதிக்கப பட்ட நிதி (ரூபா)	2018 ஆம் ஆண்டில் செலவான நிதி (ரூபா)
		துணை நோக்கங்கள் ● தொழில்களின் பொருத்தப்பாடு தொடர்பான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளில் நிவர்த்தி செய்யும் செயற்பாடுகளை கண்டறிதல் ● நிறுவக மட்டத்தில் உயர் தரத்திலான செயற்பாடுகள் தொடர்பாக தொழிற்பயிற்சி வேலைத்திட்டங்களின் தரம் மற்றும் பொருத்தப்பாடு என்பவை தொடர்பான சிபார்சுகளை முன்வைத்தல் மற்றும் இறுதியில் கண்டறியப்படுவனவற்றினை பொருத்தமான கொள்கைவகுப்பாளரிடம் வழிகாட்டலாக வழங்குதல்			
மொத்தம்				**1,888,000.00**	**943,500.00**

2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சி கற்கைகளுக்காக ரூபா 0.5 மில்லியனகள் செலவிடப்பட்டுள்ளது. அதற்கமைய 2018 ஆம் ஆண்டிற்காக அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டு நிதித்தொகையில் 50மூ செலவிடுவதற்கு முடிந்துள்ளது. மிகுதித் தொகை ஆராய்ச்சிக் கற்கைகள் நிறைவடைந்தவுடன் 2019 ஆம் ஆண்டில் செலவுசெய்யப்படும்.

5.3.2 ஆராய்ச்சி செயலமர்வுகளை நடாத்துதல்

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் ஆராய்ச்சி செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ளும் நோக்கில் ஆராய்ச்சியாளர்களை பயிற்றுவிக்கும் 05 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் ரூபா 0.717 மில்லியன்கள நிதியானது செலவு செய்யப்பட்டுள்ளது

5.3.3 வருடாந்த செயற்பாட்டு திட்டம் - 2018 (யுஜீ 2018) இற்கு அமைவாக பெற்றுக்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த முன்னேற்றம்

- தன்னியக்க வாகன துறைசார் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை நாளாதுவரையாக்கும் செயற்பாட்டினை ஆரம்பித்தல்
- தனியார் துறைசார் 08 நிறுவகங்களின் 09 பாடநெறிகள் தொடர்பாக நிதியுதவியினை அளித்தல்

- 2018 ஆம் ஆண்டு தொடர்பாக 13 ஆராய்ச்சி கற்கைகளை நடாத்துதல்
- அரச துறைசார் பயிற்சி நிறுவகங்கள் 46 மற்றும் தனியார் துறை பயிற்சி நிறுவகங்கள் 245 ஆகியவற்றினை பதிவு செய்தல்
- அரச துறைசார் பயிற்சி நிறுவகங்கள் 249 மற்றும் தனியார் துறை பயிற்சி நிறுவகங்கள் 133 ஆகியவற்றின் பதிவுகளை புதுப்பித்தல்
- அரச துறைசார் பயிற்சி நிறுவக 272 பாடநெறிகள் மற்றும் தனியார் துறை பயிற்சி நிறுவக பாடநெறிகள் 206 ஆகியவற்றிற்காக தராதர அங்கீகாரங்களை அளித்தல்
- அரச துறைசார் பயிற்சி நிறுவக 377 பாடநெறிகள் மற்றும் தனியார் துறை பயிற்சி நிறுவக பாடநெறிகள் 127 ஆகியவற்றிற்கான தராதர அங்கீகாரங்களை நாளாதுவரையாக்கல்
- தர முகாமைத்துவ முறைமையினை பயிற்சி நிறுவகங்களில் ஸ்தாபித்தலின் கீழ் வெளிவாரி கணக்கெடுப்புகள் 115 இனை நடாத்துதல்.
- அரச துறைசார் தேசிய தொழிற்தகைமை சான்றிதழ் 37089 இனையும் தனியார் துறைசார் தேசிய தொழிற்தகைமை சான்றிதழ் 15980 இனையும் அச்சிடல்
- TVEC தகவல் வெளியீட்டினை தயாரித்தல்
- தொழிலாளர் சந்தை தகவல் வெளியீட்டினை வெளியிடல்
- தேசிய தேர்ச்சி நியமங்கள் 49 இனை புதிதாக தயாரித்தல் மற்றும் தேசிய தேர்ச்சி நியமங்கள் 31 இனை திருத்துதல் ஆகியவை தொடர்பாக ஒருங்கிணைத்தல்
- பாடத்திட்டங்கள் 36 இனை புதிதாக தயாரித்தல் மற்றும் 29 இனை திருத்துதல் ஆகியவை தொடர்பாக ஒருங்கிணைத்தல்
- 19 தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் 12 பாடத்திட்டங்கள் ஆகியவற்றினை மொழிபெயர்ப்பு செய்தல்
- தேசிய தொழிற்தகைமை சட்டகம் தொடர்பாக தெரியப்படுத்தும் 02 கண்காட்சிகளை நடாத்துதல்
- திறன் அடிப்படையிலான கணிப்பீட்டாளர்களுக்கான 10 செயலமர்வுகளை நடாத்துதல்

தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 3 மற்றும் 4 தொடர்பாக நாடளாவிய ரீதியில் 14 பரீட்சைகளும் மற்றும் தேசிய தொழிற்தகைமை (NVQ) மட்டம் 5 மற்றும் 6 தொடர்பாக 07 பொது பரீட்சைகளும் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது

இப் பிரிவானது 2019 ஆம் ஆண்டில் ஆராய்ச்சிகளுடன் சிறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பாராளுமன்ற சட்டமூலத்திற்கு அமைவாக அபிவிருத்தி திட்டங்களை டுனுநஎநடழிஅநவெ டீயரெ தயாரிக்கவும் தீர்மானித்துள்ளது. மேலும், இச் செயற்பாட்டில் SDG இலக்கு, தேசிய தொழிற்பயிற்சி கொள்கை மற்றும் மத்திய வங்கி அறிக்கை முன்மொழிவு ஆகியவற்றினை மேற்கூறப்பட்ட திட்டம் தொடர்பான அடிப்படையாக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது

6.0 பாடநெறி பதிவு செய்தல் தராதர அங்கீகாரம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகள் பிரிவு

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி சட்டம் மற்றும தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்வதற்கான அபிவிருத்தி திட்டம் (1995 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 887.்.8 ஆம் இலக்க அரச வர்த்தமானி) என்பவற்றிற்கமைவாக மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அனைத்து தொழிற்பயிற்சி நிறுவகங்கள் தொடர்பாகவும் கீழே தரப்பட்டுள்ளவாறு மூன்று படிமுறைகளில் தரத்தினை பாதுகாக்கும் செயற்பாடுகள் பின்பற்றப்படுகின்றன.

1. தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல்
2. பயிற்சி பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரம் அளித்தல்
3. தர முகாமைத்துவ முறைமைகளை ஸ்தாபித்தல்

மேற்கூறப்பட்ட மூன்று பணிகளையும் நிறைவேற்றுவதற்கு அவசியமான வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக இப்பிரிவானது 13 பேர் கொண்ட பதவியணியொன்றினை கொண்டிருப்பதுடன் இப்பதவியணியில் பணிப்பாளர் ஒருவர், பிரதிப் பணிப்பாளர் இருவர், உதவிப் பணிப்பாளர்கள் மூவர், நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் இருவர், அபிவிருத்தி அலுவலரகள் இருவர், முகாமைத்துவ உதவியாளர்கள் இருவர் மற்றும் அலுவலக உதவிப் பணியாளரொருவர் உள்ளடங்கியுள்ளனர்.

6.1 தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல்

தொழிற்பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல் சட்டரீதியாக அவசியமானதாகும். நாட்டில் செயற்பட்டுவரும் அனைத்து பயிற்சி நிறுவகங்களும் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும். (மேற்கூறப்பட்ட சட்டமூலத்திற்கு அமைவாக) நிறுவகத்தை பதிவு செய்கையில் அந்நிறுவகத்தின் உள்கட்டமைப்பு வசதிகளின் போதுமான தன்மை, பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள், பயிற்றுவிப்பாளர்களின் தகைமைகள், பயிற்சி வழங்கல் மற்றும் கணிப்பீடுகளை மேற்கொள்ளும் விதம், பாடத்திட்டத்தின் போதுமான தன்மை ஆகிய பிரமாணங்கள் தொடர்பாக நிறுவகங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு இரண்டு வருட காலப்பகுதிக்கு ஆணைக்குழுவினால் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டில் இவ்வாணைக்குழுவின் வருடாந்த செயலாக்கல் திட்டத்தின் பிரகாரம் புதிதாக பதிவினை மேற்கொள்வதற்காக 760 பயிற்சி நிறுவகங்களில் மதிப்பீட்டினை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அவ்வாண்டில் 673 பயிற்சி நிறுவகங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

நிறுவக பதிவு தொடர்பாக மதிப்பீடு செய்தல் (புதிய மற்றும் நாளாதுவரையாக்கல்) தொர்பான விபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன

நிறுவனத்தின் வகை	நிறுவகங்களின் எண்ணிக்கை		மொத்தம்
	புதிய பதிவுகள	பதிவுகளை புதுப்பித்தல்	
(இலக்கு) கணிப்பீட்டு எண்ணிக்கை	360	400	760
கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை	309	400	709
கணிப்பீடு செய்யப்பட்ட எண்ணிக்கை	291	382	673

2018 ஆம் ஆண்டில் கணிப்பீட்டு எண்ணிக்கை இலக்கிடப்பட்டதிலும் பார்க்க குறைவாக காணப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்ட பின்னர் மொத்தமாக 751 நிறுவகங்கள் 2018 ஆம் இவ்வாணைக்குழுவினால் பதிவுசெய்யப்பட்டதுடன் அவை தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் நிறுவக உரிமை அடிப்படையில் காட்டப்பட்டுள்ளன.

நிறுவகங்கள் உரிமை அடிப்படையில்	பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை (புதிய)	பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை (நாளாதுவரையாக்கல்)
அரச நிறுவகம்	20	199
நியதிச்சட்ட மற்றும் கூட்டுத்தாபனம்	42	88
தனியார்	157	245
மொத்தம்	**219**	**532**

2018 ஆம் ஆண்டின் இறுதியில் 1184 தொழிற்பயிற்சி நிறுவகங்கள் தொடர்பாக பதிவுகளின் செல்லுபடியான தன்மை நிலவியதோடு அவை தொடர்பான தகவல்கள் நிறுவக உரிமை அடிப்படையில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

1. அரச நிறுவகங்கள்∴ நியதிச்சட்ட / கூட்டுத்தாபனங்கள் 545

2. தனியார்∴ அரச சார்பற்ற நிறுவகங்கள் 639

பதிவுசெய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவகங்களிற்கு நிறுவக பதிவுகளை உறுதிப்படுத்தல் தொடர்பாக கடிதங்களை அளித்தல்

தொழிற்பயிற்சி மத்தியநிலையங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்ட சான்றிதழாளர்கள் வெளிநாடு செல்வதற்காக உரிய பயிற்சி நிறுவகத்தின் பதிவினை உறுதி செய்யும் கடிதமானது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் கையளிக்கப்படுவது இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறான 916 இற்கும் அதிகமான கடிதங்கள் 2018 ஆம் ஆண்டில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

6.2 NVQ சான்றிதழ்களை வழங்கும் பொருட்டு பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரங்களை அளித்தல

இலங்கையில் தேசிய தொழிற் திறன் தகுதிகள் (ஏஞ) சட்டகமானது 2004 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய தொழிற்தகைமைகளை (ஏஞ) விருதளிப்பதற்காக தேசிய தேர்ச்சி நியமங்கள் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு தேசிய தேர்ச்சி நியமங்களுக்கு இணங்க தேசிய பாடத்திட்டங்கள் தயாரிக்கப்படுவதுடன் அப் பாடத்திட்டங்களுக்கு இணங்க தேர்ச்சி அடிப்படையிலான முறையின் கீழ் பயிற்சி செயற்பாடுகள் இடம்பெறும் பாடநெறிகளிற்கான தராதர அங்கீகாரங்களை அளித்தல் ஆணைக்குழு மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பாடநெறி தராதர அங்கீகார கணிப்பீடுகள் தொடர்பான எண்ணிக்கைகள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. தராதர அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள பாடநெறிகள் ஊடாக பயிற்சியினை பெறும் பயிலுநர்களிற்கான இறுதி கணிப்பீடானது ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் பெறுபேறுகளிற்கு அமைவாக ஏஞ தகைமைகள் விருதளிக்கப்படுகின்றன.

	பாடநெறி தராதர அங்கீகார எண்ணிக்கை		மொத்தம்
	புதிய	நாளாதுவரையாக்கல்	
இலக்கிடப்பட்ட கணிப்பீட்டு எண்ணிக்கை	500	400	900
தராதர அங்கீகார கணிப்பீடு மேற்கொள்ளப்பட்ட எண்ணிக்கை	478	504	982

2018 ஆம் ஆண்டில் இவ் ஆணைக்குழுவின் மூலம் தராரதர அங்கீகாரம் அளிக்கப்பட்ட மொத்த பாடநெறிகளின் எண்ணிக்கை 926 ஆகும் என்பதுடன் அவை கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறாகும்.

நிறுவக வகை உரிமை அடிப்படையில்	பாடநெறி தராதர அங்கீகார எண்ணிக்கை (புதிய)	பாடநெறி தராதர அங்கீகார எண்ணிக்கை டுநாளாதுவரையாக்கல்ரு
அரச நிறுவகம்	535	120
நியதிச்சட்ட மற்றும் கூட்டுத்தாபனம்	73	14
தனியார்	145	39

6.3 தொழிற்பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமையை நிறுவுதல் மற்றும் சான்றுப்படுத்துதல்

கீழே தரப்பட்டுள்ள தொழிற்பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபித்தல் தொடர்பாக வெளிவாரி தர கணிப்பீடுகள் இவ் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் 115 பயிற்சி நிறுவகங்களில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. கீழே தரப்பட்டுள்ள பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபிப்பதற்கான சான்றளிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - பலாபொத்த
2. தேசிய தொழிற்பயிற்சி நிறுவகம் - மிரிஜ்ஜவில
3. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - ஆனமடுவ
4. ரெக் வி'ன் சர்வதேச பயிற்சி பாடசாலை - கலகெதர
5. SOS ஸ்ரீ லங்கா சிறுவர் கிராமம் - மொனராகலை
6. தொழில்நுட்பவியல் கல்லூரி - அனுராதபுரம்
7. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - கோமரன்கடவல
8. தொழில்நுட்பவியல் கல்லூரி - இரத்தினபுரி
9. கணிய அளவை தொழில்நுட்ப நிறுவகம் - கொழும்பு
10. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - களுபோவில
11. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - அலயாபத்துவ
12. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - திவிதொடவெல

13. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - ஹல்துமுல்ல

14. சாம்வே (பிரெய்வெட்) லிமிடட் - நுகேகொட

15. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - பன்னிபிட்டிய

16. இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் (RC) - யாழ்ப்பாணம்

17. தொழில்நுட்ப கல்லூரி - மன்னார்

18. பல்கலைக்கழக கல்லூரி - மாத்தறை

19. மாவட்ட தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - ரொக்கில், பதுளை

20. மாவட்ட தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - எல்பிட்டிய

21. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - மாலபே

22. பிரீமா சிலோன் லிமிடட் - இராஜகிரிய

23. வின் - ஸ்டோன் ஸகூல் ஒவ் குயிலினரி ஆர்ட் (தனியார்) கம்பனி - நுகேகொட

24. தேசிய தொழிற்பயிற்சி நிறுவகம் - மிரிஜ்ஜவில

25. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - மாக்காந்துறை

26. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - தலதாகம

27. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - திஹகொட

28. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - யக்கலமுல்ல

29. தேசிய தொழிற்பயிற்சி நிறுவகம் - நாரஹேன்பிட்டி

30. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - வலிப்பிட்டிய

31. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவகம் - கொழும்பு 07

32. திறன்கள் அபிவிருத்தி மத்திய நிலையம் தொழிற்பயிற்சி அதிகாரசபை - தவலம

33. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - கொக்கல

34. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - IT Hub கொட்டுவேகொட - மாத்தறை

35. தொழில்நுட்பவியல் கல்லூரி - ஹோமாகம

36. ஸ்ரீ காவனதிஸ்ஸ தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - திஸ்ஸமகாராம

37. கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவகம் - நீர் முகாமைத்துவம் - கொத்மலை

38. மியானி தொழில்நுட்ப நிறுவகம் - மட்டக்களப்பு

39. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - அங்குணகொலபலஸ்ஸ

40. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - மதமுலன

41. மாவட்ட தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - பல்லபான - கலிகமுவ

42. பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான தேசிய நிறுவகம் - அதுருகிரிய

கீழே தரப்பட்டுள்ள பயிற்சி நிறுவகங்களில் தர முகாமைத்துவ முறைமை தொடர்பாக சான்றழிப்புக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன் இதன் பொருட்டு ஆணைக்குழுவின் அனுமதியினை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - எரமினியாய
2. இலங்கை விவசாய கல்லூரி - பரந்தன்
3. டெக்னிக் சர்வதேச நிறுவகம் - கொழும்பு 07
4. இராணுவ தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - வத்தளை
5. லிட்டில் பட் பயிற்சி நிறுவகம் - இரத்மலானை
6. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - சிலாபம்
7. யாழ்ப்பாண விவசாய கல்லூரி - யாழ்ப்பாணம்
8. மாவட்ட தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - சாரகம - குருணாகல்
9. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - மஹியங்கனை
10. இலங்கை விவசாய கல்லூரி - அங்குணகொலபலச
11. இலங்கை விவசாய கல்லூரி - குருவிட்ட
12. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - நாவலப்பிட்டி
13. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - கஹடகஸ்திகிலிய
14. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - அனுராதபுரம்
15. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - அங்கமன
16. தொழிற்பயிற்சி மத்திய நிலையம் - யாயாவத்தை
17. யூலிஸ்டன் சர்வதேச (தனியார்) கம்பனி - பாணந்துறை
18. தொழில்நுட்பவியல் கல்லூரி - ஹசலக
19. தொழில்நுட்ப கல்லூரி - குளியாப்பிட்டிய
20. டொன்பொஸ்கோ தொழிற்பயிற்சி மத்தியநிலையம் - நாரம்மல
21. தொழில்நுட்பவியல் கல்லூரி - குருணாகல்

இதற்கும் மேலதிகமாக, பயிற்சி மத்தியநிலைய தர முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபித்தல் தொடர்பான தெரியப்படுத்தும் ஒருநாள் செயலமர்வுகள் 11 நடாத்தப்பட்டன. இதற்காக தொழிற்பயிற்சி நிறுவகத்தினை சேர்ந்த அலுவலர்கள் 400 பேர் வரையில் பங்குபற்றியிருந்தனர்

2018 ஆம் ஆண்டில் 04 அலுவலர்கள் (Lead Auditors) இலங்கை கட்டளைகள் நிறுவகத்தில் கணக்காய்வுக்கான தகைமைகளை பெற்றுக்கொண்டுள்ளனர். தற்போது தொழில் கணக்காய்வாளர்களுக்கான தேவைகள் காணப்படுவதுடன் அதற்கிணங்க QMS பட்டியலில் 35 பேர் செயற்பாட்டில் உள்ளனர். அதற்காக மேலும் அலுவலர்களை பயிற்றுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில் ஆணைக்குழு நிறுவக பதிவு மற்றும் பாடநெறி தராதர அங்கீகாரம் மற்றும் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளின் மூலம் உழைத்த நிதி தொடர்பான விபரம் பின்வருமாறு.

பயிற்சி மத்திய நிலைய பதிவுக்கட்டண வருமானம்	-	ரூபா	1932400.00
தராதர அங்கீகார கட்டண வருமானம்	-	ரூபா	2098400.00
மாணவர் அறிக்கை புத்தக விற்பனை டூளுவரனநவெ சுநஉழசன டிழழமளரூ	-	ரூபா	2401425.00
தர முகாமைத்துவ (ஞஆளுரூ சான்றிதழ் பத்திர விநியோகம்	-	ரூபா	3340000.00
பயிற்சி நிறுவக பதிவினை உறுதி செய்யும் கடிதம்	-	ரூபா	1063750.00
பதிவு காலங்கடந்தமைக்கான குற்றப்பணம்	-	ரூபா	6400.00
இந் நிதி திறைசேரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.	**-**	**ரூபா**	**10842375.00**

7.0 தேசிய தேர்ச்சி நியமம், பாடத்திட்டம் மற்றும் தேசிய தொழிற்தகைமை பிரிவு

7.1 தேசிய தொழிற்தகைமை சட்டகத்தினை செயற்படுத்துவதற்காக தொழில்களுக்குரிய தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் என்பவற்றினை தயாரிப்பது பிரதான தேவைப்பாடாகும். அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேசிய தேர்ச்சி நியமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு அவை செல்லபடியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

7.1.1 துறைசார் திறன்கள் சபைகள் மூலம் முன்மொழியப்பட்ட பாடத்திட்டங்கள் உள்ளடங்கலாக தயாரிக்கப்பட்ட தேசிய தேர்ச்சி நியமங்கள்

- கன்டேனர் தொழில்நுட்பவியலாளர் - மட்டம் 3,4
- வாகன புகை பரிசோதனை தொழில்நுட்பவியலாளர் - மட்டம் 3,4
- அலுமினிய சட்டகம் புனைதல் உட்பட உள்ளக அலங்காரம் - மட்டம் 4

7.1.2 அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய தேசிய தேர்ச்சித் தரங்கள்

- ஹோமியோபதி டிஸ்பென்'ர் - மட்டம் 3
- கனி'ட பாதுகாப்பு அலுவலர் - மட்டம் 3
- விமான பயணச்சீட்டு ஒதுக்கீடு செய்யும் பிரதிநிதி - மட்டம் 4
- போக்குவரத்து உதவியாளர்.'. போக்குவரத்து மேற்பார்வையாளர் - மட்டம் 3,4
- தூர பயணம்.'. நடந்து செல்லக்கூடிய பயணம் தொடர்பாக வழிகாட்டுபவர் - மட்டம் 3,4
- நீர்ப்பாசன இயக்குநர் - மட்டம் 4
- புல் சார்ந்த வடிவமைப்பாளர் - மட்டம் 4
- தாள் மற்றும் புல் தொடர்பான மூலப்பொருள் தயாரிப்பவர் - மட்டம் 4
- கேக் அலங்கார கைவினைஞர் - மட்டம் 4
- குழந்தை பராமரிப்பு மத்திய நிலைய இயக்குதல் - மட்டம் 2,3,4
- குழந்தை பராமரிப்பு மத்திய நிலைய முகாமையாளர் - மட்டம் 5,6
- உளவியல் ஆலோசகர் - மட்டம் 5,6
- காட்சி நிபுணர் - மட்டம் 5
- சூரிய மின்னழுத்த தொகுதி தொழில்நுட்பவியலாளர் - மட்டம் 3,4
- 3னு ஜேர்னலிஸ்ட் - மட்டம் 4
- இறப்பர் பரிகரிப்பு இயந்திர இயக்குநர் - மட்டம் 3,4
- இறப்பர் பரிகரிப்பு தொழில்நுட்பவியலாளர் - மட்டம் 4

- மணமகள் அலங்கரிப்பு நிபுணர் - மட்டம் 3,4
- நுளம்பு ஒழிப்பு கள அலுவலர் - மட்டம் 3,4
- பெற்றோலியம் வாடிக்கையாளர் சேவை உதவியாளர் - மட்டம் 3,4
- கடல்சார் இயந்திர பராமரிப்பு தொழில்நுட்பம் - மட்டம் 5
- தொழிற்பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை - மட்டம் 6
- தாவர இழைய வளர்ப்பு ஆய்வுகூட உதவியாளர் - மட்டம் 3,4
- ஊடகவியலாளர் டுஅச்சு ஊடகம்ரூ - மட்டம் 3,4
- ஊடகவியலாளர் (ஒலிபரப்பு) - மட்டம் 4
- உதவி தயாரிப்பாளர் (ஊடக தயாரிப்பாளர்) - மட்டம் 4
- தயாரிப்பு உதவியாளர் (இலத்திரனியல் ஊடகம்) - மட்டம் 3,4
- முன்வைப்பவர் - மட்டம் 3,4

7.1.3 அபிவிருத்திசெய்யப்பட்ட புதிய பாடத்திட்டங்கள்.

- தாதி - மட்டம் 6
- நீர்வாழ் உயிரின வளர்ப்பு நிபுணர் - மட்டம் 3,4
- பத்திக் வடிவமைப்பாளர் - மட்டம் 3
- காப்புறுதி வழங்குநர் - மட்டம் 3,4
- கால்நடை வளர்ப்பு உதவியாளர் - மட்டம் 3,4
- பற் சிகிச்சை தாதி உதவியாளர் - மட்டம் 4
- டீசல் பம்பி அறை தொழில்நுட்பவியலாளர் - மட்டம் 2,3,4
- மின் தூக்கி தொழில்நுட்பவியலாளர் - மட்டம் 3,4
- தீ அணைப்பவர் - மட்டம் 3,4
- மீன்பிடி படகு இயக்குநர் - மட்டம் 4
- ஜவுலி தொழில்நுட்பவியலாளர் - மட்டம் 2,3,4
- உள்ளக வடிவமைப்பு நிபுணர் - மட்டம் 4
- ஆய்வுகூட உதவியாளர் - மட்டம் 3,4
- இயந்திர இயக்குநர் (குடிபான கைத்தொழில்) - மட்டம் 2,3,4
- ரிகர் இயக்குநர் - மட்டம் 3
- பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு கமெரா இயக்குநர் - மட்டம் 3,4
- டயில் பதிப்பவர் - மட்டம் 3,4
- இணையத்தள வடிவமைப்பு கைவினைஞர் - மட்டம் 4
- கால்நடை உற்பத்தி தொழில்நுட்பம் - மட்டம் 5,6
- கட்டுமான இயந்திர பராமரிப்பு தொழில்நுட்பம் - மட்டம் 5,6

7.2 கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் நாளதுவரையாக்கப்பட்டதன் பிற்பாடு மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அவற்றை செயற்படுத்துவதற்காக செல்லுபடியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

7.2.1 நாளதுவரையாக்கப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள்

- படகு (வெளி) தொழில்நுட்பவியலாளர் - மட்டம் 3,4
- தன்னியக்க வாகன மின் தொழில்நுட்பவியலாளர் - மட்டம் 3,4
- படவரைஞர் - மட்டம் 3,4
- குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி திருத்துநர் - மட்டம் 3,4
- மலர் தயாரிப்பு கைவினைஞர் - மட்டம் 3,4
- ப'ன் வடிவமைப்பவர் - மட்டம் 3,4
- முடி தயாரிப்பவர் - மட்டம் 3,4
- வரைபட திட்டமிடல் கைவினைஞர் - மட்டம் 4
- முன்பள்ளி ஆசிரியர் - மட்டம் 4

7.2.2 நாளதுவரையாக்கப்பட்ட தேர்ச்சி நியமங்கள் மற்றும் பாடத்திட்டங்கள்

- அலுமினிய சட்டகம் புனைபவர் - மட்டம் 4
- மின்னியல் - மட்டம் 4
- கட்டிடம் நிர்மாணிப்பவர் - மட்டம் 3
- தாதி உதவியாளர் - மட்டம் 4
- நிபுணத்துவ சமையற்காரர் - மட்டம் 2,3,4

7.2.3 நாளதுவரையாக்கப்பட்ட பாடத்திட்டங்கள்.

- கணனி வன்பொருள் நிபுணர் - மட்டம் 4
- கட்டிட நிர்மாண கைவினைஞர் - மட்டம் 2,3,4
- பட வரைஞர் - மட்டம் 4
- வரவேற்பாளர் - மட்டம் 3,4
- களஞ்சிய காப்பாளர் - மட்டம் 2,3,4
- இரப்பர் பரிகரிப்பு இயந்திர இயக்குநர் - மட்டம் 3,4
- குளிர்சாதன மற்றும் வளிச்சீராக்கி சேவை வழங்குநர் - மட்டம் 2,3
- பொலிமர் தொழில்நுட்பம் - மட்டம் 5,6
- மர வேலை கைவினைஞர் (தளபாடம்) - மட்டம் 3,4

- லித்தோ இயந்திர இயக்குநர் - மட்டம் 2,3,4
- கைத்தொழிற்துறைசார் குழாய் பொருத்துநர் - மட்டம் 3,4
- வீட்டு மின் உபகரண திருத்துநர் - மட்டம் 3,4
- துணி வெட்டுபவர் - மட்டம் 3
- தோற்பொருள் தயாரிப்பு கைவினைஞர் - மட்டம் 3,4
- செயலாளர் - மட்டம் 3,4

7.3 சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடத்திட்டங்கள.

7.3.2 சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள்

- முடியலங்கார கைவினைஞர்
- பாதை வழி காட்டுபவர்
- முன்பள்ளி ஆசிரியர்
- சூரிய மின்னழுத்த தொகுதி தொழில்நுட்பவியலாளர்
- மின் தொழில்நுட்பவியலாளர் (வீடு மற்றும் தொழிற்சாலை)
- விருந்தோம்பல் தொடர்பு பிரதிநிதி
- புத்தகம் கட்டுபவர்

7.3.3 சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட பாடத்திட்டங்கள்

- கணனி வெளிப்படுத்தல் நிபுணர்
- முச்சக்கர வண்டி திருத்துநர்

7.4 தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடத்திட்டங்கள்

7.4.1 தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள்

- முன்பள்ளி
- கங்காணி
- வர்ணம் பூசுபவர் (கட்டிடம்)
- மின்னியலாளர் (வீடு.˙. தொழிற்சாலை)
- பெற்றோலிய வாடிக்கையாளர் சேவை உதவியாளர்
- ஆடை தைப்பவர்

7.4.2 தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட் பாடத்திட்டங்கள்

- கால்நடை வளர்ப்பு உதவியாளர

7.5 ஆங்கில மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட பாடத்திட்டங்கள்.

- இயற்கை காட்சி நிபுணர்

7.6 தேசிய தொழிற்தகைமை அல்லாத பாடநெறிகளை பயின்ற விண்ணப்பதாரிகளுக்கு தேசிய தொழிற் தகைமைக்கு சமமான சான்றிதழ்களை அளிக்கும் பொருட்டு தொழில் மீளாய்வு பரீட்சைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் மூலம் சித்தியடைந்தவர்களுக்கு தேசிய தொழிற்தகைமைகளுக்கு சமன் செய்யும் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

பாடநெறியின் பெயர	தேசிய தொழிற்தகைமை மட்டம்	மேற்கொள்ளப்பட்ட தொழில் மீளாய்வுகளின் எண்ணிக்கை	பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை	சமமான சான்றிதழ்கள் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை
தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் பத்திரம்.'. தொழிற்துறை தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ் பத்திரம் (சிவில் பொறியியல்)	மட்டம் 5	08	58	49
தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் பத்திரம் (மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல்)	மட்டம் 5	1	4	02
தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் பத்திரம் (கணிய அளவையாளர்)	மட்டம் 5	1	7	03
தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ் பத்திரம் (இயந்திர பொறியியல்)	மட்டம் 5	1	7	07

7.6.2 மேலும் தேசிய தொழிற்தகைமைக்கு சமன் செய்யும் பொருட்டு அளிக்கப்பட்ட சான்றிதழ்கள் கீழே வருமாறு.

பாடநெறியின் பெயர்	தேசிய தொழிற்தகைமை மட்டம்	அளிக்கப்பட்ட சமன் செய்யும் சான்றிதழ்களின் எண்ணிக்கை
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா	மட்டம் 5	24
தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தேசிய டிப்ளோமா	மட்டம் 5	01

பாடநெறியின் பெயர்	தேசிய தொழிற்தகைமை மட்டம்	அளிக்கப்பட்ட சமன் செய்யும் சான்றிதழ்களின் எண்ணிக்கை
பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான தேசிய டிப்ளோமா	மட்டம் 5	13
கணிய அளவையியல் தேசிய டிப்ளோமா	மட்டம் 6	10

அனுபவத்துடன் கூடிய தொழில்நுட்ப சான்றிதழாளர்கள் 198 பேருக்கு அரச முகாமைத்துவ சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக கடிதங்கள் விருதளிக்கப்பட்டுள்ளன..

7.7 தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடத்திட்டங்களின் மென்பிரதிகளைத் தயாரித்தல்

இப்பிரிவினது அபிவிருத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு தொழிற் துறைகளுக்குமான தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் அவற்றிற்குரிய துணை ஆவணங்கள் உள்ளடங்களாக மென்பாகப் பிரதிகள் இறுவட்டு வடிவில் ஆணைக்குழு நூலகத்தினூடாக விற்பனை செய்யப்படுகின்றது. 1308 இறுவட்டுகளை விற்பனை செய்ததன் மூலம் ரூபா 654,000.00 வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது.

7.8 நிறுவகங்களுக்கு இடையில் தேசிய தொழிற்தகைமை செயற்படுத்தல் குழு கூட்டங்களை நடாத்துதல

தேசிய தொழிற்தகைமை முறைமையினை செயற்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றிற்கு தீர்வுகளை கண்டறியும் முகமாக தீர்மானங்களை எடுத்தல் மற்றும் புதிய முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் தேசிய தொழிற்தகைமை முறைமையானது செயற்படுத்தப்பட்டுவரும் அரச மற்றும் தனியார் நிறுவகங்களின் சிரேஸ்ட அலுவலர்களை கொண்ட குழுவானது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டில் இவ்வாறான குழு கூட்டங்கள் 08 மேற்கொள்ளப்பட்டன.

8. தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவு

8.1 அறிமுகம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் தேசிய தொழிற்தகைமை கணிப்பீட்டு பிரிவு மற்றும் நிர்வாக பிரிவின் NVQ சான்றிதழ் பிரிவு ஆகியவற்றினை இணைத்து தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு பிரிவானது ஸ்தாபிக்கப்பட்டது. அதற்காக துறைசார் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நிதி பங்களிப்பானது வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, இப் பிரிவில் பணிப்பாளர், பிரதி பணிப்பாளர், நான்கு உதவி பணிப்பாளர்கள், 02 நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், 01 அபிவிருத்தி உத்தியோகத்தர், 03 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் 03 கணனி பிரயோக உதவியாளர்கள் உள்ளனர். இம் மனிதவளத்தினை உபயோகித்து 2018 ஆம் ஆண்டில் கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8.2 தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) முறைமையினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்

8.2.1 கணிப்பீட்டாளர்கள் தொடர்பான தரவு தளத்தினை பேணுதல்

8.2.1.1 தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்கள் தேவைப்பாட்டை எதிர்வுகூறுதல்

தயாரிக்கப்பட்டுள்ள தேசிய தேர்ச்சித் தரங்களின் எண்ணிக்கை மற்றும் 2017 ஆம் ஆண்டு நிறைவடையும் போது தரவுத் தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களின் எண்ணிக்கை, தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களின் பூகோள ரீதியான வதிவிடம் ஆகிய விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு தேவைப்படும் கணிப்பீட்டாளர்கிள்ன எண்ணிக்கை தொடர்பான எதிர்வுகூறல் அறிக்கையானது தயாரிக்கப்பட்டுள்ளது.

8.2.1.2 தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களாக பயிற்சி அளிப்பதற்கு தகுந்த நபர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகத்தேர்வினை நடாத்தல்

தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களாக நியமனம் வழங்குவதற்காக தேர்வுநாடிகள் தனிப்பட்ட ரீதியில் விண்ணப்பிக்க வேண்டும். இங்கு, விண்ணப்பதாரர்களை நேர்முகத்தேர்வுக்கு அழைப்பதற்கு நியமிக்கப்பட்ட காலப்பகுதியொன்று காணப்படாததுடன் கிடைக்கப்பெற்ற விண்ணப்ப படிவங்களின் அடிப்படையில் தகுதியானவர்களை தேர்ந்தெடுத்தல் நேர்முகத்தேர்வு சபை மூலம் மேற்கொள்ளப்படும்.

உரிய தொழிற்துறை தொடர்பான விசேட நிபுணத்துவமுடைய நபர்கள் இந் நேர்முகத்தேர்வு சபையிற்கு நியமிக்கப்படுவதுடன் 2018 ஆம் ஆண்டில் இவ்வாறான நேர்முகத்தேர்வுகளை 12 நாட்கள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் தேவை மற்றும் அவசியத்தின் பொருட்டு மீளாய்வாண்டில் இவ்வாறான நேர்முகத்தேர்வுகள் 19 நாட்கள் நடாத்தப்பட்டுள்ளன.

8.2.1.3 தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களிற்கு பயிற்சி அளித்தல் வேலைத்திட்டம் மற்றும் அதற்கான வசதிகளை வழங்குதல்

இதன் கீழ் உரிய வேலைத் திட்டங்கள் 10 நடாத்தப்பட்டுள்ளன.

8.2.1.4 கணிப்பீட்டாளரகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல்

உரிய எடுத்துமூல பரீட்சையில் சித்தியடைவோர் நேர்முகத்தேர்விற்காக நேர்முகத்தேர்வு சபையிடம் வரவழைக்கப்படுவர். நேர்முகத்தேர்வு சபையின் சிபார்சிற்கு இணங்க குறிப்பிட்ட கணிப்பீட்டாளரிற்கு அனுமதிப்பத்திரத்தினை வழங்கப்படுகின்றது. அதற்கான எழுத்து மூல பரீட்சையினை 2018 ஆம் ஆண்டில் நடாத்தும் முகமாக 320 விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்பப்படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் அதில 136 பேர் மாத்திரம் பங்குபற்றியிருந்தனர். ஊரிய அனுமதிப்பத்திரங்களை 2019 ஆம் ஆண்டில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் செல்லுபடியான தன்மை நிறைவுபெற்ற அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீட்டு செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்.

- தனியார் பிரிவு பயிற்சி நிறுவகங்களுக்கான கணிப்பீடுகளை நடாத்துவதற்குரிய அனுமதியினை வழங்குதல்
- அரச பிரிவு பயிற்சி நிறுவகங்களுக்கான கணிப்பீடுகளை நடாத்துவதற்குரிய அனுமதியினை வழங்குதல்
- முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்.

8.2.5 தனியர் துறைசார் பயிற்சி நிலையங்களில் தேர்ச்சிசார் கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள தனியார் துறை பயிற்சி நிறுவகங்கள் / நிலையங்களில் பாடநெறி தராதர அங்கீகாரம் மேற்கொள்ளப்பட்ட பாடநெறிகள் நடாத்தப்பட்டு அவை முடிவுறும் போது அப்பாடநெறிகளை பின்பற்றிய மாணவர்களை கணிப்பீட்டிற்கு உட்படுத்தி அதில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு தேசிய தொழிற்திறன் தகுதிகள் (NVQ) விருதளிக்கப்படுகின்றன.

இங்கு, உரிய நிபந்தனைகள் பரீட்சிக்கப்பட்டு அவை பூர்த்தியாகும் சந்தர்ப்பத்தில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் பேணப்பட்டுவரும் கணிப்பீட்டாளர் தரவுத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள கணிப்பீட்டாளர்கள் நியமனம் செய்யப்பட்டு அவர்களைக் கொண்டு கணிப்பீடானது மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு, பல்வேறுவகையான பயிற்சி நிலையங்கள்.. நிறுவகங்கள் மூலம் 2018 ஆம் ஆண்டில் கணிப்பீட்டினை மேற்கொள்வதற்காக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையானது 838 ஆகும். 2017 ஆம் ஆண்டிற்கான இலக்கானது 550 ஆகும் என்பதோடு இவ் இலக்கினை தாண்டிய இக் கோரிக்கைகளுக்கான காரணமாவது தனியார் பிரிவு நிறுவகங்களில் இத் தேசிய தொழிற்தகைமை முறைமையானது மிகவும் பிரபல்யம் அடைந்தமையாகும்.

அத்தோடு, தேசிய தொழிற்தகைமை மட்டம் 03 க.பொ.த (சா.்.த) இற்கும் மற்றும் தேசிய தொழிற்தகைமை மட்டம் 04 க.பொ.த (உ.்.த) இற்கும் சமன் செய்யப்பட்டமையும் இவ்வாறான அதிகரிப்பிற்கு காரணமாக விளங்கமுடியும்.

8.2.6. அரச துறைசார் பயிற்சி நிலையங்களில் / நிறுவகங்களில் தேர்ச்சிசார் கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கல்

அரச துறைக்குரிய பயிற்சி நிறுவகங்களில்.். நிலையங்களில் கணிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பாக கணிப்பீடுகளை நடாத்துவதற்கான அனுமதியினை வழங்கும் செயற்பாட்டானது மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தர நிர்ணயம் மற்றும் கணிப்பீட்டு அலகின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம் மீளாய்வாண்டின் போது திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் கீழ் செயற்பட்டுவருகின்ற நிறுவகங்களில் இருந்தும் மற்றும் இவ் அமைச்சிற்கு புறம்பான அரச துறை பயிற்சி நிலையங்கள்.். நிறுவகங்களில் இருந்தும் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் 1502 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவகங்கள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சிற்குரிய நிறுவகங்கள் / பயிற்சி நிறுவகங்கள.

- தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்
- இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
- சமுத்திர பல்கலைக்கழகம்
- இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சிற்கு சொந்தமல்லாத நிறுவகங்கள் / பயிற்சி நிறுவகங்கள்

- தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
- இலங்கை இளைஞர் படையணி
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
- விவசாய திணைக்களம்
- சமூகசேவை திணைக்களம்
- இலங்கை விமானப்படை
- இலங்கை கடற்படை

எவ்வாறாயினும் அரச நிறுவகங்கள் / பயிற்சி நிறுவகங்கள் ஆகியவற்றில் தேசிய தொழிற்தகைமைகளை விருதளிப்பதற்குரிய கணிப்பீடுகளின் நிமித்தம் 2018 ஆம் ஆண்டில் உயர் கேள்விகள் நிலவியமையினை காணக்கூடியதாக இருந்ததுடன் இது இலக்கிடப்பட்ட எண்ணிக்கையிலும் பார்க்க அதிகமாகும். இவ்வாறான அனுமதியளிப்புகள் 2500 இவ் வருடத்தில் இலக்கிடப்பட்டிருந்ததுடன் உண்மையில் இவ்வாறான கோரிக்கைகள் 2597 இவ் வருடத்தில் வழங்கப்பட்டன. இவ்வாறு ஏற்படுவதற்கு பின்வருவன காரணங்களாக அமையலாம்.

- வெளிநாட்டு தொழில்வாய்ப்புகள் தொடர்பாக தேசிய தொழிற்தகைமைகளின் அங்கீகாரம்
- அரச நிரவாக அமைச்சினால் அமைச்சு.். திணைக்கள நிறுவகங்களின் பொருட்டு நபர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போதும் மற்றும் பதவியுயர்வுகளை அளிக்கும் போதும் தேசிய தொழிற்தகைமை முறைமையினை பயன்படுத்துமாறு உரிய நிறுவகங்களுக்கு அரச நிர்வாக அமைச்சினால் அறிவிக்கப்பட்டமை
- தேசிய தொழிற்தகைமை முறைமையானது சமூகத்தில் பிரபல்யமடைந்தமை

- தேசிய தொழிற்தகைமை மட்டம் 03 க.பொ.த (சா.்.த) இற்கும் மற்றும் தேசிய தொழிற்தகைமை மட்டம் 04 க.பொ.த (உ.்.த) இற்கும் சமன் செய்யப்பட்டமை.

தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சி பாடநெறிகள் தொடர்பாக தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களை அளிப்பதற்குரிய மேலும் ஒரு முறைப்படி தகைமைகள் அளிக்கப்படுகின்றன. அவ்வாறு தொழிற்துறைகளில் தொழில்வாய்ப்புகளில் ஈடுபட்டு அனுபவம் உள்ள நபர்களுக்கு பாடநெறிகளை கற்பது கடினமானமாகும் அதனால் ஏஞ தகைமை தொடர்பாக அவர்களுக்கு கோரமுடியும். அவ்வாறு அனுபவங்களை கொண்ட நபர்களுக்கு தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஏஞ சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன. இம் முறையானது முன்னைய அனுபவங்களை கணிப்பீடு செய்யும் முறை (சீடு) என அழைக்கப்படுகின்றது. இம் முறை மூலம் தேசிய தொழிற்தகைமைகளை விருதளிப்பதற்கு மூன்று அரச நிறுவகங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான மூன்று நிறுவகங்களாவன.

- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை
- இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
- தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்

8.2.7. முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல் முறைமை தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடாத்துதல்

அவ்வப்போது மீளாய்வு கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் செயற்குழு கூட்டங்களிலும் மற்றும் பரீட்சை சபை கூட்டங்களிலும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை ஆகியவற்றுடன் முன்னைய அனுபவத்தினை அங்கீகரித்தல் முறைமை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் சவால்கள் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகரிகளுடனான கூட்டங்கள் நடாத்தப்பட்டன. இப் பணியகமானது வீட்டுப் பணி உதவியாளர் மற்றும் பராமரிப்பாளர் ஆகிய பதவிகளுக்காக வெளிநாடுகளிற்கு செல்வோருக்கான விசேட பயிற்சி பாடநெறிகள் நாடு பூராவும் அமைந்துள்ள அப் பணியகத்தின் பயிற்சி மத்திய நிலையங்க ஊடாக நடாத்திவருகின்றது. அப் பாடநெறிகள் முன்னைய அனுபவங்களினை அங்கீகரித்தல் முறையிற்கு இணங்க கணிப்பீடு செய்யப்பட்டு தேசிய தொழிற் திறன் தராதர (NVQ) சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

8.3 தேர்ச்சிசார் கணிப்பீடுகளில் சீர்த்தன்மையினை பேணுதல்

8.3.1. தேர்ச்சிசார் கணிப்பீடுகளில் சீர்த்தன்மையினை பேணுவதற்காகவும் மற்றும் கணிப்பீட்டாளர்களிற்கு அவசியமான அறிவினை நாளாதுவரையாக்குவதற்குமான செயலமர்வுகளை நடாத்துதல்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்குடன் நான்கு (04) செயலமர்வுகளை மீளாய்வாண்டினுள் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அத்துடன், இத்தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீட்டு முறைகள் 2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுடன் தொடர்பான கணிப்பீட்டாளர்களிற்கு பயிற்சி அளித்தல் செயற்பாடுகளும் அவ்வாண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டன. அதற்கிணங்க, சில கணிப்பீட்டாளர்களின் அறிவினை மீண்டும் நாளாதுவரையாக்குவதற்கான தேவைகள் உருவாகியுள்ளது.

8.3.2. அரச மற்றும் தனியார் துறைசார் பயிற்சி நிலையங்களில்.. நிறுவகங்களில் தேர்ச்சிசார் கணிப்பீட்டு நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்தல்

கடந்த ஆண்டில் அரச மற்றும் தனியார் துறைசார் பயிற்சி நிறுவகங்களில் நடாத்தப்பட்ட தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீடுகள் 550 மேற்பார்வை செய்யப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் அரச துறைசார் தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீடுகள் 288 தொடர்பாக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன் அது நிறைவேற்றப்பட்டது. இம் மேற்பார்வையின் பெறுபேறுகளுக்கு அமைவாக NVQ சுற்றுநிருபம் 2017 / 01 இற்கு இணங்கவும் மற்றும் உயர் முகாமைத்துவத்தின் ஆலோசனைகளிற்கு அமைவாகவும் கணிப்பீட்டு செயற்பாட்டிற்கும் மற்றும் கோட்பாடுகளுக்கும் விரோதமான முறையில் செயற்பட்ட சந்தர்ப்பங்களில் கணிப்பீட்டாளர்களுக்கு அவசிய ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் ஏனைய ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன மேற்கொள்ளப்பட்டன.

அதற்கிணங்க 838 கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8.4 முறைப்பாடுகளை விசாரித்தல்

கடந்த ஆண்டில் கணிப்பீடு தொடர்பாக கிடைக்கப்பெற்ற ஒரு முறைப்பாடானது தொடர்பாக விசாரிப்பதற்கு சட்ட அலுவலர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

8.5. அறிவினை பரிசோதிக்கும் பொது எழுத்து பரீட்சையினை நடாத்துதல்.

8.5.1. தேசிய தொழிற்தகைமை மட்டம் 03 மற்றும் 04 விருதளிப்பு தொடர்பாக பொது எழுத்துமூல பரீட்சையினை நடாத்துதல்.

அழகுக்கலை, சிகையலங்காரம், முன்பள்ளி ஆசிரியர், வரைபட கலைஞர், மின்னியலாளர், தன்னியக்க வாகன திருத்துநர், குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி திருத்ததுநர் போன்ற தொழிற்துறைகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் அறிவினை பரீட்சிப்பதற்கு எழுத்துமூல பரீட்சைகள் கீழே தரப்பட்டுள்ள முறையில் நடாத்தப்பட்டன.

துறைகள்	ஜனவரி	யூலை
அழகுக்கலை	1743	2432
சிகையலங்காரம	1617	2003
முன்பள்ளி ஆசிரியர	-	130
பட வரைஞர்	-	255
மின்னியலாளர்	-	2018 ஜனவரி மாதத்தில் நடாத்தப்பட்டது
தன்னியக்க வாகன திருத்துநர்	-	
குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி திருத்ததுநர	-	

2018 ஆம் ஆண்டில் இணையத்தள முறைமை மூலமாக வினா தொகுப்பு ஒன்றினை உருவாக்கும் பொருட்டு 13 பாடநெறிகள் தேர்வுசெய்யப்பட்டுள்ளதுடன் அவை தொடர்பாக உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இதனை நிறைவுசெய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட பாடநெறிகள் தொடர்பாக தேசிய தொழிற்தகைமை மட்டம் 03 மற்றும் 04 தொடர்பாக எழுத்துமூல பரீட்சைகள் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் யூலை ஆகிய மாதங்களில் நடாத்தப்பட்டன. அவ்வாறே, கீடு விண்ணப்பதாரிகளின் பொருட்டு 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பொது பரீட்சையானது நடாத்தப்பட்டதுடன் இவ் அனைத்து பரீட்சைகளினதும் பெறுபேறுகள் இவ் வருடத்திலேயே வெளியிடப்பட்டுள்ளன.

8.5.2. தேசிய தொழிற்தகைமை மட்டம் 5 மற்றும் 6 தொடர்பான எழுத்துமூல பரீட்சைகளை நடாத்துதல்

சென்ற வருடத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு ICT, Quantity Surveying, Construction Technology, , Cosmetology, Agriculture Production Technology, Mecatronic Technology, Ref & AC Technology ஆகிய பாடநெறிகள் தொடர்பாக தேசிய தொழிற்தகைமை மட்டம் 5 மற்றும் 6 இற்குரிய பொது எழுத்துமூல பரீட்சைகள் நிறுவகங்களின் கோரிக்கைக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டன.



8.6 கணிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.

அமைச்சின் கீழ் செயற்பட்டுவரும் கீழே தரப்பட்டுள்ள நிறுவகங்களில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகள் தொடர்பாக பங்குபற்றிய கணிப்பீட்டாளர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் பயண கட்டணங்கள் ஆணைக்குழுவின் கணிப்பீட்டு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டன..

1. தொழில்நுட்ப கல்வி, பயிற்சி திணைக்களம
2. இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை (தேர்ச்சி அடிப்படையிலான பாடநெறிகள் தொடர்பாக
3. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை (தேர்ச்சி அடிப்படையிலான மற்றும் நிறுவக பயிற்சி பாடநெறிகள் தொடர்பாக).

இத் தலைப்பின் கீழ் கணிப்பீட்டாளர்களின் வவுச்சர் பத்திரங்கள் 4987 கணிப்பீட்டு அலகினால் சான்றுப்படுத்தப்பட்டு கணக்கு பிரிவிடம் முன்வைக்கப்பட்டது. அவ் வவுச்சர் பத்திரங்களின் மொத்த பெறுமதி 23,500,000 ஆகும் என்பதோடு அதற்கிணங்க அனைத்து நிலுவை கொடுப்பனவுகளும் 2018 ஆம் ஆணடில் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது

8.7. தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சான்றிதழ்களை அச்சிட்டு வழங்குதல்

8.7.1. தேசிய தொழிற் திறன் தகுதி (NVQ) சான்றிதழ்களை அச்சிட்டு வழங்குதல்.

2017 ஆம் ஆண்டில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு 65,212 சான்றிதழ்களை அச்சிட்டு வழங்கியுள்ளது. அவற்றின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 8.7.1 தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) சான்றிதழாளர்கள் மற்றும் அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை 2018 (நிறுவக ரீதியாக)

நிறுவகம	சான்றிதழாளர்களின் எண்ணிக்கை			சான்றிதழ்களின் எண்ணிக்கை		
	திறன்கள் அடிப்படை-யிலான கணிப்பீட்டின் மூலமான சான்றித-ழாளர்கள்	முன்னைய அனுபவத்தின் அடிப்படையின் மூலமான கணிப்பீட்டின் மூலமான சான்றித-ழாளர்கள்	மொத்த சான்றிதழ-ாளர்களின் எண்ணிக்கை	திறன்கள் அடிப்படை-யிலான கணிப்பீட்டின் மூலமான சான்றித-ழாளர்கள்	முன்னைய அனுபவத்தின் அடிப்படையின் மூலமான கணிப்பீட்டின் மூலமான சான்றித-ழாளர்கள்	மொத்த சான்றிதழ-ாளர்களின் எண்ணிக்கை
தொழில்நுட்ப கல்வி, பயிற்சி திணைக்களம்	7,834	93	7,927	8,724	94	8,818
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை	2,414	5,092	7,506	2,675	5,751	8,426
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை	15,850	1,220	17,062	19,217	1,593	20,810
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம	1,511	0	1,511	1,780	0	1,780
இதர அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை	14,439	0	14,439	15,986	0	15,986
மொத்தம்	**42,048**	**6,405**	**48,453**	**48,382**	**7,438**	**55,820**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத் தளம்

2018 ஆம் ஆண்டில் தேசிய தொழிற் திறன் தகுதிகள் (ஜேஞ) மட்டம் 01 தொடக்கம் 06 வரையில் அச்சிட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை நிறுவக ரீதியாக அட்டவணை 8.7.2 இல் வழங்கப்பட்டுள்ளன.

நிறுவகம்	**Level 1**	**Level 2**	**Level 3**	**Level 4**	**Level 5**	**Level 6**	மொத்த சான்றி-தழ்களின் எண்ணி-க்கை
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை	56	2,498	6,553	4,648	0	0	13,755
தொழில்நுட்ப கல்வி, பயிற்சி திணைக்களம்	15	488	3,293	4,215	789	18	8,818
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	2	220	547	1,011	0	0	1,780
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை	633	1,666	10,981	7,223	307	0	20,810
இதர அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற துறை	417	989	10,466	3,324	295	496	15,987
மொத்தம்	**1,123**	**5,861**	**31,840**	**20,421**	**1,391**	**514**	**61,150**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

2018 ஆம் ஆண்டில் பயிற்சி நிறுவகங்களினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களின் எண்ணிக்கை (ஆண்.. பெண்) தொடர்பான விபரங்கள் அட்டவணை 8.7.3 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 8.7.3 2018 ஆம் ஆண்டில் விருதளிக்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களின் எண்ணிக்கை (பாலின அடிப்படையில்)

நிறுவகம்	**ஆண்**	**பெண்**	**மொத்தம்**
தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம்	5,964	2,854	8,818
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை	10,206	3,549	13,755
தொழிற்பயிற்சி அதிகாரசபை	12,850	7,960	20,810
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	440	1.340	1,780
தனியார் பிரிவு	7,629	8,358	15,987
மொத்தம்	**37,089**	**24,061**	**61,150**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் 2018 ஆம் ஆண்டில் 1095 சான்றிதழ்கள் மீளவும் அச்சிடப்பட்டன. அவை தொடர்பான விபரங்கள் அட்டவணை 8.7.4 இல் தரப்படடுள்ளன.

அட்டவணை 8.7.4 மீண்டும் அச்சிடப்பட்ட சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் - 2018

சான்றிதழ் வகை	சான்றிதழ்களின் எண்ணிக்கை
அச்சிடல் பிழைகள் காரணமாக மீளவும் அச்சிடப்பட்ட சான்றிதழ்கள்	905
தொலைந்துபோன சான்றிதழ்கள் தொடர்பாக பிரதிகளை அச்சிடல்	11
மொத்தம்	**916**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

கீழே அட்டவணை 8.7.5 இல் 2018 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட ஏஞ சான்றிதழ்களை முன்னைய வருடத்துடன் (2017) ஒப்பீடு செய்து காட்டபபட்டுள்ளது.

அட்டவணை 8.7.5 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களின் அளவுகள் தொடர்பான ஒப்பீடு (முன்னைய அனுபவ கணிப்பீடு மற்றும் தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீடு என்பவை)

சான்றிதழ் வகை	2017	2018	வளர்ச்சி (சான்றிதழ்களின் எண்ணிக்கை)	வளர்ச்சி சதவீதம் (மூ)
தேர்ச்சி அடிப்படையிலான கணிப்பீடு	57,103	48,382	(-8721)	-
முன்னைய அனுபவ கணிப்பீடு	7,277	7,438	161	1.16


மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

2006 ஆம் ஆண்டு தொடக்கம் விநியோகிகப்பட்ட சான்றிதழ்கள் தொடர்பான விபரம் அட்டவணை 8.7.6 இல் காட்டப்பட்டுள்ளது. அட்டவணை 8.7.6 2006 தொடக்கம் 2017 வரையில் வெளியீடு செய்யப்பட்ட மொத்த சான்றிதழ்களின் எண்ணிக்கை.

ஆண்டு	சான்றிதழ்களின் எண்ணிக்கை
2006	2059
2007	1,629
2008	8,915
2009	11,249
2010	13,256
2011	16,572
2012	18,111
2013	22,855
2014	28,546
2015	44,148
2016	47,017
2017	65,212
2018	61,150
மொத்தம்	**338,919**

மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

வரைபு 8.7.1 2006 தொடக்கம் 2018 வரையில் வழங்கப்பட்ட சான்றிதழ்கள்.



மூலம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தரவுத் தளம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தேசிய தொழிற்தகைமை சட்டகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2018 ஆம் ஆண்டு நிறைவடையும் வரையில் 338919 சான்றிதழ்களை விநியோகித்துள்ளது.

9.0 கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவு

9.1 பின்னணி

கைத்தொழிற்துறைசார் நிறுவகங்களுக்கு அவசிய திறன்களை கொண்ட நபர்களை உருவாக்குவதே தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையின் நோக்கமாகும். தொடர்ச்சியாக மாற்றமடைந்துவரும் கைத்தொழிற்துறைசார் நிறுவகங்களுக்கு ஏற்றதாக தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையில் மாற்றங்களை கொண்டுவருதல் எந்தவொரு நாட்டினதும் பொருளாதார நிலை மாற்றங்களில் செல்வாக்கு செலுத்துகின்றது. கைத்தொழிற்துறையின் அவசியங்களிற்கு ஏதுவாக இளைய சமுதாயத்தினை உருவாக்கும் நோக்கில் தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றுக்கிடையில் பாரிய தொடர்பினை கட்டியமைக்கும் பொருட்டு வழிகாட்டல் சேவையினை மிகவும் வலுவான முறையில் மேற்கொள்ளும் எதிர்பார்ப்பில் தொழிற்துறைசார் உறவுகள் பிரவானது உருவாக்கப்பட்டது.

அதற்கிணங்க, 2018 ஆம் ஆண்டில் தொழிற்துறைசார் உறவுகள் பிரிவு மிகவும் வலுவான முறையில் அவசியமான தொடர்புகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டதுடன் அக்காலப்பகுதியில் பல வேலைத்திட்டங்களை நடாத்தி தொழில்நுட்ப கல்வி துறையினை புதிய ஓர் அத்தியாயத்திற்கு கொண்டுசெல்லும் முகமாக பற்பல சேவைகளை ஆற்றியுள்ளது. இங்கு நான்கு துறைசார் திறன்கள் சபைகளை வலுப்படுத்தியதுடன் பிரதேச ரீதியில் செயற்பட்டுவரும் வர்த்தக சம்மேளனங்களுடன் தொடர்புகளை வலுப்படுத்தி தொழிற்துறை மற்றும் தொழில்நுட்ப கல்வி ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பினை மேம்படுத்த முடிந்துள்ளது என்பதனை கூறமுடியும்.

2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவானது 2018 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டில் மிகவும் விஸ்தீரக்கப்படவேண்டிய தேவையானது ஏற்பட்டமை அதன் செயற்பாடுகளை மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளவேண்டியமை ஆகிய காரணங்களினால் மக்கள் தொடர்பு (நிபுணர் மற்றும் தொழிற்துறை) என்ற பெயரில் தற்போது வரை அதன் செயற்பாடுகளை நிறைவேற்றி வருகின்றது.

9.2 மக்கள் தொடர்பு பிரிவின் (நிபுணர் மற்றும் தொழிற்துறை) பிரிவின் நோக்கங்கள்

கைத்தொழிற்துறைசார் நிறுவகங்களுக்கு ஏற்புடைய மனிதவளத்தினை வழங்கும் பொருட்டு தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையினை மாற்றியமைப்பதே மக்கள் தொடர்புகள் பிரிவின் (நிபுணர் மற்றும் தொழிற்துறை) பிரதான நோக்கமாக கூறிக்கொள்ளமுடியும். இந் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்காக கீழே தரப்பட்டுள்ள செயற்பாடுகளை மக்கள் தொடர்பு பிரிவினால் மேற்கொளகின்றது.

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சி அளிப்பு தொடர்பாக பயன்படுத்தப்பட்டுவரும் தேசிய தேர்ச்சி நியமங்கள் மற்றும் பயிற்சி பாடத்திட்டங்கள் என்பவற்றினை அபிவிருத்தி செய்வதற்காக கைத்தொழிற்துறையின் பங்களிப்பினை வழங்குதல்.

- கைத்தொழிற்துறையில் ஏற்படும் தொழிநுட்ப மாற்றங்கள் மற்றும் புதிய போக்குகள் தொடர்பாக தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சி வழங்கல்களில் ஈடுபட்டுவரும் கல்விசார் அலுவலர்களை தெரியப்படுத்துதல் மற்றும் அவை தொடர்பான பயிற்சிகளை அவசியமாயின் வழங்குதல்.

- தற்போது வழங்கப்பட்டுவரும் தொழிற்பயிற்சிகள் மற்றும் கைத்தொழிற்துறைசார் கேள்விகள் ஆகியவற்றுக்கு இடையில் திறன்சார் இடைவெளிகள் காணப்படுகின்றனவா என்பதனை ஆராய்தல் மற்றும் அவ்வாறான நிலைமையொன்று காணப்படுமாயின் அவற்றினை விலக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சியினை பெற்றுவரும் பயிலுநர்களின் பொருட்டு கைத்தொழிற்துறைசார் பயிற்சி தொடர்பான பின்னுட்டல்கள் பெற்றுக்கொள்ளல் மற்றும் அதனை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் பயிற்சிகளை நிறைவு செய்த பயிலுநர்களிற்கு கைத்தொழிற்துறைசார் நிறுவகங்களில் காணப்படும் தொழில்வாய்ப்பு சந்தர்ப்பங்கள் தொடர்பாக தெரியப்படுத்துதலினை மேற்கொள்வதற்காக தொழில்வழிகாட்டல் மத்திய நிலையங்களை ஒருங்கிணைப்பதன் மூலமாக அவர்களிற்கு தொழில்வாய்ப்புகளை கண்டறிந்து கொள்வதற்கு உதவுதல்.

- முறைசார் பயிற்சிகளை பெற்றுக்கொள்ளாத கைத்தொழிற்துறை நிறுவகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு தகைமை சான்றிதழ்களை விருதளிப்பது தொடர்பாக துறைசார் திறன்கள் சபையின் ஒத்துழைப்புடன் அவர்களிற்கு தெரியப்படுத்துதல் மற்றும் தொழிற் பாதையில் மேல்நோக்கி செல்லல் தொடர்பாக அவர்களை தயார்படுத்தல்.

- கைத்தொழிற்துறை மற்றும் அவற்றில் காணப்படும் தொழில்வாய்ப்புகள் தொடர்பாக சமூகத்தில் சிறந்த நிலைமையினை ஏற்படுத்தல்

- ஆணைக்குழுவின் சேவைகளை மிகவும் வினைத்திறனாகவும் மற்றும் செயற்திறனாகவும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- பாடசாலைகளிலிருந்து இடைவிலகிய மாணவ மாணவியரிடையில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி தொடர்பாக விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களிடத்தில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான கவர்ச்சியினை ஏற்படுத்தல்

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி தொடர்பாக ஒட்டுமொத்த சமூகத்திற்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- பொது தொழில் வழிகாட்டல் சேவையினை மேற்கொள்ளும் முகமாக அவசிய நடவடிக்கைகளை பின்பற்றுதல்.

- பல்வேறுபட்ட தொழிற்துறைகள் மற்றும் நிபுணர் குழுக்கள் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை வலுப்படுத்தி தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையின் வளர்ச்சிக்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

9.3 செயற்பாடுகள்

மேலே கூறப்பட்டுள்ள நோக்கங்களை ஈடுசெய்யும் முகமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை மக்கள் தொடர்புகள் பிரிவானது 2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றியுள்ளது.

9.3.1 நான்கு துறைசார் திறன்கள் சபைகளை நடாத்துவதற்கு துறைசார் திறன்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் ஏற்பாடுகளை துறைசார் திறன்கள் சபைகளிற்கு முற்பணமாக வழங்கி அவற்றினை மிகவும் வினைத்திறனான முறையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

9.3.1.1 கட்டுமான தொழிற்துறைசார் திறன்கள் சபை.

9.3.1.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை.

9.3.1.3 உற்பத்தி மற்றும் பொறியியல் சேவைகள் துறைசார் திறன்கள் சபை.

9.3.1.4 சுற்றுலா தொழிற்துறைசார் திறன்கள் சபை.

9.3.2 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையினை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு துறைசார் திறன்கள் சபைகளிற்கு நிதியினை வழங்குதல் மற்றும் வழிகாட்டலினை மேற்கொள்ளல்.

9.3.3 துறைசார் திறன்கள் சபைகளின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவதற்காக தலைவர்களுடன் கூட்டங்களை நடாத்துதல்.

9.3.4 மாவட்ட தொழில் வழிகாட்டல் மத்திய நிலையங்களின் சேவைகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தல்.

9.3.5 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் புதிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் செயலமர்வுகளை நடாத்துதல் மற்றும் நிலவுகின்ற தொழில்வாய்ப்புகள் பற்றி மக்கள், பாடசாலை மாணவர்கள், பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர்கள் ஆகியோரிற்கு தெரியப்படுத்தும் வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

9.3.6 வாடிக்கையாளர்களிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாக தகவல் வெளியீட்டினை தயாரித்தல்

9.3.7 அமைச்சின் கீழ் செயற்பட்டுவரும் பயிற்சி நிறுவகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு என்பவை தொடர்பாக அலுவலர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோரை தெளிவுபடுத்தும் முகமாக துண்டுப்பிரசுரங்களை தயாரித்தல்

9.3.8 பொதுஜன ஊடகங்கள் வாயிலாக தொழிற்பயிற்சி துறைசார் பிரச்சாரங்கள் மற்றும் தகவல் வழங்கல் ஆகியவற்றினை மேற்கொள்ளல்

9.3.9 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் சந்தரப்பங்கள் தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட குழுக்கள் மற்றும் விசேட தேவையுடைய நபர்கள் ஆகியோருக்கு தெரியப்படுத்துதல்.

9.3.10 தொழில்வழிகாட்டல் மற்றும் மென்திறன் அபிவிருத்தி என்பவை தொடர்பாக விசேட செயலமர்வுகளை நடாத்துதல்

9.3.11 துறைசார் திறன்கள் சபைகள் காணப்படாத துறைகள் சார்பாக மாகாண மட்ட வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்.

9.3.12 துறைசார் திறன்கள் சபைகள், வர்த்தக மற்றும் தொழிற்துறை சம்மேளனங்கள் மற்றும் மாவட்ட தொழில் வழிகாட்டல் நிலையங்கள் என்பன இணைந்து பிரச்சார வேலைகளில் ஈடுபடல்.

9.3.13 கொள்கை வகுத்தலின் பொருட்டு தேசிய தொழில் வழிகாட்டல் ஒழுங்கமைப்பு குழுவினை செயற்படுத்தல்.

9.3.14 பொது தொழில்வழிகாட்டல் மத்திய நிலைய அபிவிருத்தி மற்றும் மேம்பாடு ஆகியவற்றின் பொருட்டு மாவட்ட தொழில்வழிகாட்டல் மத்திய நிலையங்களிற்கு அவசிய நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்.

9.3.15 தொழிற்துறைசார் பயிற்சிகளை முறையாக மேற்கொள்வதற்கு வசதியாக கலந்துரையாடல் மற்றும் மதிப்பீடு என்பவற்றுக்கு இணங்க சிபார்சுகளை முன்வைத்தல்.

9.3.16 திறன்கள் அபிவிருத்தி அலுவலர்கள், தொழில்வழிகாட்டல் அலுவலர்கள் மற்றும் தொழில்வழிகாட்டல் துறைசார் அலுவலர்கள் ஆகியோரின் திறன்களை மேம்படுத்துவதற்கு செயலமர்வுகளை நடாத்துதல்.

9.3.17 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தொடர்பாக நிகழ்கால வேலைத்திட்டமொன்றினை தயாரிப்பதற்கு அவசிய செயற்பாட்டினை மேற்கொள்ளல்.

9.3.1 நான்கு துறைசார் திறன்கள் சபைகளை நடாத்துவதற்கு துறைசார் திறன்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் வழங்கப்படும் ஏற்பாடுகளை துறைசார் திறன்கள் சபைகளிற்கு முற்பணமாக வழங்கி அவற்றினை மிகவும் வினைத்திறனான முறையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்..

★ **மக்கள் தொடர்பு பிரிவின் பங்களிப்பிற்கு இணங்க 04 துறைசார் திறன்கள் சபைகள் 2018 ஆம் ஆண்டிலிருந்து இயங்கிவருவதுடன் செயற்திறன் குறைவாக காணப்பட்ட சுற்றுலா கைத்தொழிற்துறைசார் சபையானது 2018 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் செயற்படதொடங்கியுள்ளது. அதற்கிணங்க, கீழே தரப்பட்டுள்ளவாறு 2018 ஆம் ஆண்டில் துறைசார் திறன்கள் சபைகள் 04 செயற்பாட்டு நிலையில் காணப்பட்டன.**

- கட்டுமான தொழிற்துறைசார் திறன்கள் சபை
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை
- உற்பத்தி மற்றும் பொறியியல் சேவைகள் துறைசார் திறன்கள் சபை
- சுற்றுலா தொழிற்துறைசார் திறன்கள் சபை

இத் துறைசார் திறன்கள் சபைகளை நடாத்துவதற்கு அவசிய நிர்வாக செலவுகள் காலண்டிற்கு ஒரு தடவை மக்கள் தொடர்பு பிரிவினால் வழங்கப்படுவதுடன் துறைசார் திறன்கள் சபைகளினால் உரிய முற்பணங்கள் கணக்கு தீர்க்கப்பட்டுள்ளன.

அதற்கு மேலதிகமாக துறைசார் திறன்கள் சபைகள் மூலம் அவற்றினை நடாத்துவதற்கு அவசிய அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறே, இத் துறைசார் திறன்கள் சபைகள் 2018 ஆம் ஆண்டில் பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளதுடன் அச் செயற்பாடுகள் பின்வருமாறு.

9.3.1.1 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபையின் மூலம் தேசிய தொழிற் திறன் மட்டம் 3 இற்கான ஒரு தேசிய தேர்ச்சி நியமம் / பாடத்திட்டம் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. (கு 12

- கட்டுமான துறைசார் பயிற்சி வழங்கும் பயிற்றுநர்களுக்கு துறைசார் புதிய தொழில்நுட்பங்களை கண்டறிதல் மற்றும் பிரயோகித்தல் என்பன தொடர்பாக பயிற்சி வழங்கல்.

- கட்டுமான துறைசார் தேசிய தொழிற்தகைமை மட்டம் 03.∴ 04 தொடர்பான கணிப்பீட்டாளர் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கு பங்களிப்பினை வழங்குதல்

- கட்டுமான துறைசார் பயிற்றுநர்களுக்கு புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட தேசிய தொழிற்தகைமை மட்டம் 03 மற்றும் 04 பாடநெறிகளின் கற்பித்தல் முறைமையினை மேம்படுத்துவதற்கு செயலமர்வுகளை நடாத்துதல்.

- முன்னைய அனுவபத்தினை அங்கீகரித்தல் முறையின் மூலம் ஏஞ இனை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கப்பட்ட கட்டுமான துறைசார் விண்ணப்பதாரிகளுக்கு அவர்களின் அறிவுசார் இடைவெளியினை நிரப்புவதற்கு அவசிய செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்.

- தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து கட்டுமான கைவினைஞர், குழாய் பொருத்துநர், கம்பி வளைப்பவர் மற்றும் படவரைஞர் ஆகிய நான்கு கட்டுமான துறைகள் தொடர்பான பாடத்திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- உலக திறன்கள் தினத்தினை கொண்டாடுவதற்கு ஈடாக கட்டுமான துறைசார் சூழல் நட்பு ரீதியான கட்டுமானம் பற்றி மக்களை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல்.

- தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் தெரிவுசெய்யப்பட்ட டிப்ளோமா பாடநெறிகள் தொடர்பான கற்பித்தல் செயற்பாடு மற்றும் கணிப்பீட்டு முறைகள் என்பவை தொடர்பான முன்னேற்றத்தினை குருணாகல் தொழில்நுட்பவியல் கல்லூரியில் முன்வைத்தல்.

9.3.1.2 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபையின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டங்கள் தொடர்பாக பயிற்றுநர்களை தெளிவுபடுத்தும் செயலமர்வுகள் சில 2018 ஆம் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்டன. இங்கு, இப் பாடநெறிகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக வசதிகள் காணப்படும் மத்திய நிலையங்கள் தொடர்பாக அவதானத்தினை செலுத்தி அப் பயிற்சி நிலையங்களின் பயிற்றுநர்கள் முதலாவது கட்டத்தின் கீழ் பயிற்றுவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், தொழிற்பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியவற்றினை பிரதிநிதித்துவம் செய்யும் முகமாக பயிற்றுநர்களுக்கு கீழ்வரும் பாடத்திட்டங்கள் தொடர்பாக பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்பட்டன

1. Associate Software Developer
2. Associate Creative Designer
3. IT support

- தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அபிவிருத்தியின் பொருட்டு கொள்கை வெளியீடு ஒன்றினை அபிவிருத்தி செய்தல்

  இத் துறைசார் திறன்கள் சபையில் பல்வேறுபட்ட தொழிற்துறைகளின் பிரதிநிதித்துவம் காணப்படுவதுடன் அனைத்து தொழிற்துறைகளும் ஒரே நோக்கத்தின் பொருட்டு செயற்பட வேண்டியுள்ளமையினால் அது தொடர்பான கொள்கை திட்டம் ஒன்றினை தயாரித்தல்

- தகவல் தொழில்நுட்ப தொழிற்துறை தொடர்பான வளவாளர் பட்டியல் ஒன்றினை அடையாளங்காணல்.

  தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகளை மேற்கொள்ளல், கொள்கைகளை வகுத்தல் அவ்வாறே பாடத்திட்டங்களை மேம்படுத்தல் ஆகியவற்றின் பொருட்டு வளவாளர் பட்டியல் ஒன்றினை அறிமுகம் செய்தல் இவ் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டது.

- தொழிற்துறையில் காணப்படும் தேவைகளிற்கு இணங்க அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பிரிவுகளை அடையாளங்காணல்.

  தொழிற்துறைகளில் நிலவும் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களுக்கு இணங்க அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பிரிவுகளை அடையாளங்காணல் மற்றும் அப் பிரிவுகளின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல் மற்றும் செயற்படுத்துதல் என்பவற்றின் பொருட்டு உப குழுக்களை உருவாக்கி அவ் உபகுழுக்களிற்கு பொறுப்பானவர்களை பெயரிடும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவ்வாறான 12 உப குழுக்கள் 2018 ஆம் ஆண்டில் காணப்பட்டன.

- மாணவர்களுக்கு பயிற்சியளித்தல்

  NVQ 5 ஆம் மட்ட மாணவர்கள் தொடர்பாக தொழிற்துறைசார் பயிற்சி மற்றும் தொழிற்துறைக்கு பொருத்தமான மென் திறன்களை வளர்த்தல் ஆகியன பற்றிய பயிற்சியளிப்பு செயலமர்வுகள் துறைசார் திறன்கள் சபையின் மூலம் யாழ்ப்பாணம், அனுராதபுரம் மாவட்ட பயிற்சி நிலையங்களில் நடாத்தப்பட்டன.

- கல்வியியல் துறைசார் அலுவலர்களுக்கான செயலமர்வுகளை நடாத்துதல்.

  கல்வி அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக எதிர்கால உலகின் தகவல் தொழில்நுட்ப பாவனையினை பாடசாலை முறைமையில் பயன்படுத்துவது தொடர்பாக மாகாண கல்வி பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்கள் ஆகியோருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

- சர்வதேச தொடர்புகளை பேணுதல்

  இஸ்லாமபாத் திறன்கள் அபிவிருத்தி கவுன்சில் உடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றினை கைச்சாத்திடல் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன் பங்களாதேஸ் இடம்பெற்ற உலக பொருளாதார மாநாட்டின் பொருட்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் சபையிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

- E Citizen Progamme

  நவீன தொழில்நுட்பத்தினை அனைத்து குடிமக்களும் பயன்படுத்தக்கூடியவாறு மேம்படுத்துதல் மற்றும் அது தொடர்பாக இலகுவான முறையில் விளங்கிக்கொள்வதற்காக E Citizen என்ற பெயரில் செயலமர்வு தொடர் ஒன்றினை இலத்திரனியல் ஊடகம் மூலமாக மேற்கொள்வதற்கு வசதியாக களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்து அபிவிருத்தி செய்யப்பட்டது.

9.3.1.3 உற்பத்தி மற்றும் பொறியியல் சேவைகள் துறைசார் திறன்கள் சபை.

- சூரிய சக்தி தொழில்நுட்பவியலாளர் தொழில் தொடர்பாக தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு ஆகியன இணைந்து தேசிய தேர்ச்சி நியமத்தினை செல்லுபடியாக்கம் செய்தல்.

    1. சூரிய சக்தி தொழில்நுட்பவியலாளர் தேசிய தொழிற்தகைமை மட்டம் 03 மற்றும் 04
    2. பொலிமர் தொழில்நுட்பவியலாளர்
    3. மின்னியலாளர்
    4. அழுத்தும் இயந்திர கைவினைஞர்
    5. கட்டுமான இயந்திர கைவினைஞர்
    6. வாகன பரிசோதனை கைவினைஞர்

தேசிய தேர்ச்சி நியமங்களை அபிவிருத்தி செய்தல்

1. மீள்சுழற்சி உதவியாளர்
2. மருத்துவ வினைஞர்
3. உற்பத்தி உதவியாளர்

- காய்ச்சி இணைப்பவர் பாடநெறிசார் பயிற்றுநர்களை பயிற்றுவிப்பதன் இரண்டாம் கட்டத்தினை கட்டுபத்தை IETI நிறுவகத்தில் நடாத்துதல்
- துறைசார் திறன்கள் சபையின் இணையத்தள பக்கத்தினை உருவாக்குதல்
- மரவேலை பயிற்றுநர்கள் தொடர்பாக புதிய தொழில்நுட்ப அறிவினை வழங்குவதற்கான செயலமர்வு ஒன்றினை நடாத்துதல்.
- Artificial Inteligence தொடர்பாக முகாமையாளர்களிற்கு தெரியப்படுத்தும் செயலமர்வுகளை நடாத்துதல்.
- வேலைத்தள சுகாதாரம் தொடர்பான செயலமர்வொன்றினை நடாத்துதல்
- தன்னியக்க வாகன கைவினைஞர் பயிற்றுநர்களுக்கு பயிற்றுநர் பயிற்சியளித்தல் செயலமர்வொன்றினை நடாத்துதல்.
- HR Gender Toolkit தொடர்பான செல்லுபடியாக்கம் செய்யும் செயலமர்வொன்றினை ஏற்பாடு செய்தல்
- துறைசார் நிபுணர்களுடன் இணைந்து தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் இடம்பெறும் டிப்ளோமா பாடநெறிகளை கணிப்பீட்டிற்கு உட்படுத்தல்

    1. தயாரிப்பு தொழில்நுட்பவியல், மட்டம் 05 - தொழில்நுட்பவியல் கல்லூரி, கண்டி
    2. தன்னியனக்க மோட்டார் வாகன தொழில்நுட்பவியல், மட்டம் 05 - தொழில்நுட்பவியல் கல்லூரி, மருதானை

3. குளிரூட்டி மற்றும் வளிச்சீராக்கி தொழில்நுட்ப பாடநெறி, மட்டம் 04 - தொழில்நுட்பவியல் கல்லூரி, அனுராதபுரம்
4. மின் தொழில்நுட்பம், மட்டம் 05 - தொழில்நுட்பவியல் கல்லூரி, காலி

- தன்னியக்க மோட்டார் வாகன தொழில்நுட்ப பயிற்றுநர்களுக்கு பயிற்றுநர் பயிற்சியளிப்பு செயலமர்வொன்றினை நடாத்துதல்.
- தொழிற்துறை மற்றும் பொறியியல் சேவை பிரிவிலுள்ள திறன் இடைவெளியினை பகுப்பாய்வு செய்வதற்கான உடன்படிக்கைக்கு எட்டுதல்
- பெண் வேலைவாய்ப்பு தொடர்பாக கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டத்தினை ஏற்பாடு செய்தல்.
- அபிவிருத்தி தந்திரோபாய திட்டங்களை கொழும்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களை இலக்காக கொண்டு செயற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- மின்னியலாளர்கள் தொடர்பாக கைநூல் ஒன்றினை தயாரிப்பதற்கான செயலமர்வொன்றினை நடாத்துதல்.

9.3.1.4 சுற்றுலா தொழிற்துறைசார் திறன்கள் சபை

- சுற்றுலா துறைசார் பயிற்றுநர்களைர் கணிப்பீடு செய்யும் செயற்பாட்டினை தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து கண்டி மாவட்டத்தில் மேற்கொள்வதற்கு திட்டமிடல்
- முன்னைய அறிவின் மூலம் (RPL) 100 விண்ணப்பதாரிகள் தொடர்பாக ஹோட்டல் மற்றும் சுற்றுலா சார்ந்த துறைகள் சார்பாக கணிப்பீட்டினை மேற்கொள்வதற்கு திட்டமிடல்
- திறன்கள் இடைவெளி பகுப்பாய்வு திட்டத்தினை ஹோட்டல் மற்றும் சுற்றுலா துறைசார்பாக மேற்கொள்வதற்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- ஹோட்டல் துறைசார் பாடத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து மேற்கொள்வதற்கு உடன்படுதல்
- SLITM பாடநெறிகள் தொடர்பான பாடத்திட்டங்களை ஏஞ நியமங்களுடன் சமன்செய்யும் செயற்பாடுகளிற்கு பங்களிப்பு வழங்கல்

9.3.2 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையினை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பொருட்டு துறைசார் திறன்கள் சபைகளிற்கு நிதியினை வழங்குதல் மற்றும் வழிகாட்டலினை மேற்கொள்ளல்.

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையின் மேம்பாடு தொடர்பாக துறைசார் திறன்கள் சபைகள் மூலம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக முன்வைக்கப்படும் முன்மொழிவுகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு அம் முன்மொழிவுகளினால் செயற்படுத்தக்கூடிய செயற்பாடுகளின் அவசியத்தின் அடிப்படையில் ஏற்பாடுகளை வழங்குவதற்கு மக்கள் தொடர்பு பிரிவானது செயற்படுகின்றது.

இது தொடர்பாக 2018 ஆம் ஆண்டில் தகவல் மற்றும் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை தொடர்பாக ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் செயற்பாடுகள் நிறைவடைந்த பின்னர் கணக்கு தீர்க்கப்பட்டுள்ளது

9.3.3 துறைசார் திறன்கள் சபைகளின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகளை தெளிவுபடுத்துவதற்காக தலைவர்களுடன் கூட்டங்களை நடாத்துதல்.

துறைசார் திறன்கள் சபைகளின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல் மற்றும் எதிர்கால வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்தல் என்பவற்றின் பொருட்டு ஆணைக்குழுவானது துறைசார் திறன்கள் சபைகளின் தலைவர்களுடன் ஏழு கூட்டங்களை 2018 ஆம் ஆண்டில் நடாத்தியுள்ளது.

அவ்வாறே, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபையின் உறுப்பினர் கூட்டங்கள் மற்றும் தேர்ச்சி நியமங்கள் தொடர்பான இரண்டு செயலமர்வுகள் ஆகியனவும் நடாத்தப்பட்டுள்ளன.

9.3.4 மாவட்ட தொழில் வழிகாட்டல் மத்திய நிலையத்தின் சேவைகள் தொடர்பான கணிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

தற்போது 27 மாவட்ட தொழில் வழிகாட்டல் மத்திய நிலையங்கள் நாடு பூராவும் செயற்பட்டுவருவதுடன் அவற்றினால் மேற்கொள்ளப்படும் சேவைகளை மதிப்பீடு செய்து அலுவலர்களை கௌரவிக்கும் நோக்கில் அனைத்து மத்திய நிலையங்களினாலும் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் சேவைகள் தொடர்பான அறிக்கைகளை ஆய்வு செய்து மத்திய நிலைய கணிப்பீட்டினை மேற்கொள்வதற்னான வேலைத்திட்டமொனறினை மக்கள் தொடர்புகள் பிரிவினால் செயற்படுத்தியது. அதற்கிணங்க, காலி, நுவரேலியா, அனுராதபுரம் மற்றும் குருணாகல் ஆகிய மாவட்ட தொழில்வழிகாட்டல் மத்திய நிலையங்களினால் அறிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன் அவ் அறிக்கைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு குருணாகல் மத்தியநிலையத்தினை மதிப்பீடு செய்யும் செயற்பாட்டினை 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

செயற்பாட்டிலுள்ள மற்றும் அவற்றினால் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடுகள் என்பன தொடர்பான தரவுகளை பெற்றுக்கொள்ளும் பொருட்டு மேற்பார்வை செய்தல் மற்றும் கணிப்பீட்டு செயற்பாடுகளை மேற்கொள்ளல் என்பன கைத்தொழிற்துறைசார் தொடர்புகள் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க, கீழே தரப்பட்டுள்ள மத்திய நிலையங்கள் மேற்பார்வை மற்றும் கணிப்பீடு என்பவற்றுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

9.3.5 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் புதிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் செயலமர்வுகளை நடாத்துதல் மற்றும் நிலவுகின்ற தொழில்வாய்ப்புகள் பற்றி மக்கள், பாடசாலை மாணவர்கள், பாடசாலைகளை விட்டு விலகிய மாணவர்கள் ஆகியோரிற்கு தெரியப்படுத்தும் வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறை தொடர்பாக மாணவர்களை தெளிவூட்டுதல் வவுனியா, அனுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை, பதுளை, நுவரேலியா, குருணாகல், பொலன்னறுவை, கம்பஹா மற்றும் இரத்தினபுரி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டதுடன் இவ் வேலைத்திட்டங்களின் பொருட்டு ஏறத்தாழ

2200 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். பெரும்பாலான மாணவர்கள் இவ்வாறான நிறுவகங்கள் தொடர்பான பரந்த விளக்கத்தினை பெற்றுக்கொண்டுள்ளதுடன் மேலதிக தெளிவூட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்பானது மாவட்ட தொழில்வழிகாட்டல் மத்திய நிலையங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

9.3.6 வாடிக்கையாளர்களிற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாக தகவல் வெளியீட்டினை தயாரித்தல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மக்களிடத்தில் கொண்டுசெல்லல் மற்றும் சரியான தகவல்களை வழங்குதல் ஆகியவற்றினை மேற்கொள்வதற்கு ஒன்றுதிரட்டப்பட்ட தகவல் வெளியீடு ஒன்றினை அச்சிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அனைத்து பிரிவினதும் ஒட்டுமொத்த தகவல்களை உள்ளடக்கும் வகையில் தகவல் வெளியீட்டினை தயாரித்தல் 2018 ஆம் மேற்கொள்வதறகு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

9.3.7 அமைச்சின் கீழ் செயற்பட்டுவரும் பயிற்சி நிறுவகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு என்பவை தொடர்பாக அலுவலர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோரை தெளிவுபடுத்தும் முகமாக துண்டுப்பிரசுரங்களை தயாரித்தல்

வெவ்வேறு பிரதேசங்களில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார்பாக இடம்பெறும் கண்காட்சிகளில் விநியோகிப்பதற்காகவும் மற்றும் பயிற்சி நிறுவகங்களுக்கு விநியோகிப்பதற்காகவும் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் தகவல்களை உள்ளடக்கிய துண்டுப்பிரசுரங்களை 2018 ஆம் ஆண்டில் அச்சிட்டு வழங்கியுள்ளது.

9.3.8 பொதுஜன ஊடகங்கள் வாயிலாக தொழிற்பயிற்சி துறைசார் பிரச்சாரங்கள் மற்றும் தகவல் வழங்கல் ஆகியவற்றினை மேற்கொள்ளல்.

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் தகவல்களை வழங்குதல் மற்றும் தொழில் அபிவிருத்தி தொடர்பாக தெளிவுபடுத்துதல் ஆகிய நோக்கில் பொதுஜன ஊடகங்கள் வாயிலாக மக்களை தெளிவுபடுத்துதல் மக்கள் தொடர்பு பிரிவின் மூலம் 2018 ஆம் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன் பொருட்டு அலுவலர்கள் பல நிகழ்ச்சிகளில் பங்குபற்றியிருந்தனர். தேசிய வானொலி மற்றும் தனியார் வானொலி நிகழ்ச்சிகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பவற்றினுடாக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

9.3.9 தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் சந்தரப்பங்கள் தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட குழுக்களுக்கு தெரியப்படுத்தும் விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் நன்மைகள் அனைத்து குடிமக்களுக்கும் ஒரே விதத்தில் கிடைக்கவேண்டும் என்பதுடன் அதில் ஓர் நடவடிக்கையாக தொழிற்துறைக்கு பங்களிப்பினை பெற்றுக்கொள்ளும் நோக்கில் பெண்களுக்கும் மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இங்கு வவுனியா ஓ'ான் நிறுவகம் மற்றும் டொன் பெஸ்கோ நிறுவகம், வெல்லாவெளி மாதர் சங்கம், வவுனியா வரோட் நிறுவகம் ஆகிய நிறுவகங்களின் அனைத்து அங்கத்தவர்களினதும் பங்குபற்றலுடன் விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறே, தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினால் மாகாண, மாவட்ட மட்டங்களில் ஒழுங்குசெய்யப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கான தொழில்வழிகாட்டல் மற்றும் தொழில்வாய்ப்புகளில் ஈடுபடுத்தல் வேலைத்திட்டங்கள் 04 தொடர்பாக வளவாளர் பங்களிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

9.3.10 துறைசார் திறன்கள் சபைகள் காணப்படாத துறைகள் சார்பாக மாகாண மட்ட வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தொழிற்துறையாளர்கள், பயிற்சி நிறுவகங்கள், தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி சார்ந்த அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தக மற்றும் தொழிற்துறை சபை ஆகியவை இணைந்து தொழில்வாய்ப்புகளிற்கு ஏதுவான பயிற்சி தேவைகளை கண்டறிந்து அவற்றினை மேம்படுத்தல், தொழிற்துறைக்கு அவசிய மென் திறன்களை விருத்தி செய்தல் உள்ளடங்கலாக பல்வேறுபட்ட பிரச்சினைகளை தீர்த்து தொழிற்துறைசார் பயிற்சியினை மிகவும் வலுவான முறையில் மேற்கொள்ளும் முகமாக பயிற்சி நிறுவகங்கள் மற்றும் தொழிற்துறையாளர்கள் ஆகியவற்றிடையில் சிறந்த தொடர்பினை கட்டியெழுப்புதல் இதன் அடிப்படை கோட்பாடாகும். அதற்கிணங்க, 11 மாவட்டங்களை உள்ளடக்கியதாக இவ் வேலைத்திட்டமானது மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் கூட்டங்களை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை நடாத்துவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. வவுனியா, அனுராதபுரம், மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை, பதுளை, நுவரேலியா, திருகோணமலை, குருணாகல், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் இவ்வாறான பிரதேச தொழிற்துறை ஒன்றுகூடல்கள் நடாத்தப்பட்டன.

9.3.11 துறைசார் திறன்கள் சபைகள், வர்த்தக மற்றும் தொழிற்துறை சம்மேளனங்கள் மற்றும் மாவட்ட தொழில் வழிகாட்டல் நிலையங்கள் என்பன இணைந்து பிரச்சார வேலைகளில் ஈடுபடல்.

வர்த்தக மற்றும் தொழிற்துறை சபைகள் மற்றும் மாவட்ட தொழில்வழிகாட்டல் மத்திய நிலையங்கள் என்பன இணைந்து இளைஞர் யுவதிகள் மற்றும் தொழிற்பயிற்சி பயிலுநர்கள் ஆகியோரின் பொருட்டு தொடர்ச்சியான தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்களை மக்கள் தொடர்பு பிரிவின் வழிகாட்டலின் கீழ் நடாத்தியுள்ளது.

இங்கு வத்தளை பிரதேச செயலதளர் அலுவலகத்தில் அழகுக்கலை மற்றும் சிகையலங்கார கைவினைஞர்களுக்கான செயலமர்வொன்றினையும் மற்றும் திருகோணமலை, அம்பாறை, களுத்துறை, காலி, இரத்தினபுரி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் ஆகிய மாவட்டங்களில் யூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மற்றும் டிசெம்பர் ஆகிய மாதங்களில் ஆறு செயலமர்வுகளையும் நடாத்தியுள்ளது.

9.3.12 கொள்கை வகுத்தலின் பொருட்டு தேசிய தொழில் வழிகாட்டல் ஒழுங்கமைப்பு குழுவினை செயற்படுத்தல்.

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி துறைசார் தொழில்வழிகாட்டல் சேவைகளை மிகவும் வலுவான முறையில் மேற்கொள்ளும் முகமாக தேசிய தொழில் வழிகாட்டல் ஒழுங்கமைப்பு குழு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக தொழிற்கல்வி துறைசார் வழிகாட்டல்களில் ஈடுபட்டுள்ள பல நிறுவகங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தனர். இங்கு தொழில்வழிகாட்டல் சேவையினை பொது சேவையாக மேற்கொள்ளவேண்டிய தேவைப்பாட்டினை கண்டறிந்துள்ளதுடன் அதற்கிணங்க தொழில்வழிகாட்டல் சேவை தொடர்பான பரந்துபட்ட கற்கை தொடர்பாக அனைத்து துறைகளையும் உள்ளடக்கியதாக ஏழு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் அறிக்கைகளை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு உரிய குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

9.3.13 பொது தொழில்வழிகாட்டல் மத்திய நிலைய அபிவிருத்தி மற்றும் மேம்பாடு ஆகியவற்றின் பொருட்டு மாவட்ட தொழில்வழிகாட்டல் மத்திய நிலையங்களிற்கு அவசிய நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்.

மாவட்ட தொழில்வழிகாட்டல் மத்திய நிலையங்களை அழகு மிக்கதாக மனதினை கவரும் வண்ணம் மாற்றியமைப்பதற்கு அவசிய மத்திய நிலையங்கள் 12 இன் பொருட்டு நிதி ஏற்பாடுகள் உரிய பிரதான அலுவலகங்களிடம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, மாவட்ட தொழில்வழிகாட்டல் அலுவலகங்கள் அமைந்துள்ள தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பவியல் கல்லூரிகள் எட்டிற்கும் (காலி, இரத்தினபுரி, அனுராதபுரம், குருணாகல், கொழும்பு, வவுனியா, கேகாலை) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கீழான நிறுவகங்கள் மூன்றிற்கும் (மாத்தறை, பதுளை, கொழும்பு) மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கீழான ஒரு மத்திய நிலையத்திற்கும் (ஹம்பாந்தோட்டை) ஏற்பாடுகள் வழங்கப்பட்டு அபிவிருத்தி வேலைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன

9.3.14 தொழிற்துறைசார் பயிற்சிகளை முறையாக மேற்கொள்வதற்கு வசதியாக கலந்துரையாடல் மற்றும் மதிப்பீடு என்பவற்றுக்கு இணங்க சிபார்சுகளை முன்வைத்தல்.

தொழிற்துறைசார் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களின் பொருட்டு அந்தந்த தொழிற்துறைசார் பயிற்சிகள் சரியாக முறையில் இடம்பெறுகின்றதா என்பதனையும் மற்றும் தொழிற்துறைசார் பயிற்சிகளின் போது தொழிற்துறைசார் நிறுவகத்திற்கும் மற்றும் பயிலுநர்களுக்கும் ஏற்படும் பிரச்சினைகளை கண்டறிதலுமே இதன் நோக்கமாகும். அதற்கிணங்க, திட்டமிடப்படாத முறையில் தொழிற்துறை நிறுவகங்கள் 10 கண்காணிக்கப்பட்டுள்ளதுடன் கண்டறியப்பட்ட பிரச்சினைகள் அனைத்தும் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் உரிய நிறுவகங்களுக்கு இவை தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

9.3.15 திறன்கள் அபிவிருத்தி அலுவலர்கள், தொழில்வழிகாட்டல் அலுவலர்கள் மற்றும் தொழில்வழிகாட்டல் துறைசார் அலுவலர்கள் ஆகியோரின் திறன்களை மேம்படுத்துவதற்கு செயலமர்வுகளை நடாத்துதல்.

தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் விடயங்களை நபர்களிடத்தில் சரியான முறையில் வழங்கும் அலுவலர்கள் தொழில்வழிகாட்டல் மற்றும் திறன் அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோராவர். இவ்

அலுவலர்களின் அறிவினை நாளாதுவரையாக்குதல் மற்றும் புதிய தகவல்கள் தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தல் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் மக்கள் தொடர்பு பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய சேவையாகும்.

இங்கு, வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் தெரியப்படுத்தும் செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அலுவலர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களின் தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டன. அதற்கிணங்க, வளர்ச்சியடைந்து வரும் பயிற்சி தேவைகளை கண்டறியும் நோக்கில் அலுவலர் குழு ஒன்றிற்கான வேலைத்திட்டமொன்று வுஐவீ நிறுவகத்தில் மேற்கொள்ளப்பட்டது. இங்கு அடையாளங்காணப்பட்ட பயிற்சி தேவைகளிற்கு சரியான வளவாளர்களை பயன்படுத்தி இலங்கையிலுள்ள அனைத்து தொழில்வழிகாட்டல் அலுவலர்கள் மற்றும் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு 4 குழுக்களாக 3 நாள் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

9.3.16 மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தொடர்பாக நிகழ்கால வேலைத்திட்டமொன்றினை தயாரிப்பதற்கு அவசிய செயற்பாட்டினை மேற்கொள்ளல்.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சேவைகள் தொடர்பாக சரியான முறையிலும் மற்றும் மனதினை கவரும் வகையிலும் மக்களிடையில் முன்வைப்பதற்கு தற்போது வேலைத்திட்டங்களை வடிவமைப்பதற்கு அவசிய நிறுவகங்களுடன் கலந்துரையாடி ஆரம்ப வேலைகள் 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

மக்கள் தொடர்பு பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விசேட வேலைத்திட்டங்கள்

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் அபிவிருத்தி தொடர்பாக உதவியளிக்கும் திட்டங்கள்.ஃ. வேலைத்திட்டங்களுடன் இணைந்து செயற்படுதல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் சேவைகள் பற்றி ஒட்டுமொத்த குடிமக்களிற்கும் தெரியப்படுத்துவதற்கு கண்காட்சிகள் உள்ளடங்கலாக வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் பங்குபற்றல்

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறைசார் அபிவிருத்தி தொடர்பாக வளவாளர்களை வழங்குதல்

- தேசிய மட்டத்தில் இடம்பெறும் வெளிக்களத்துடன் தொடர்பான வேலைத்திட்டங்களில் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினை பிரதிநிதித்துவப்படுத்தல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தராதர அங்கீகாரத்தினை பெற்றுக்கொண்டுள்ள தனியார் பயிற்சி நிறுவகங்களின் பிரச்சினைகளை தீர்த்து தொடர்புகளை சிறந்த முறையில் பேணுவதற்கு அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- 2018 ஆம் ஆண்டில் குருணாகலில் இடம்பெற்ற இளைஞர் கிராம வேலைத்திட்டமானது மக்கள் தொடர்பு பிரிவின் ஒருங்கிணைப்புடன் இடம்பெற்றதுடன் அங்கு கண்காட்சி கூடம் ஒன்று பேணப்பட்டு மக்களிற்கு தகவல்களை வழங்கப்பட்டது.

- 018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டிற்கான குறிக்கோள், மொனராகலை கண்காட்சியிற்காக கண்காட்சி கூடம் ஒன்றின் மூலம் அவசிய தகவல்களை தொழிற்கல்வி தொடர்பாக அக்கறை செலுத்தும் அனைத்து மக்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- திரு. மஞ்சுள விதான பத்திரண பணிப்பாளர் (பதில்) மற்றும் உதவி பணிப்பாளர் திருமதி. கே.ஏ.டீ.ஹரசந்தி லக்மினி அவர்கள் துறைசார் திறன்கள் சபைகளின் பணிப்பாளர் சபை கூட்டங்களில் பங்குபற்றல்.

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல் முறைமைகள் பிரிவினால் தயார்செய்யப்பட்ட -தொழிற்கல்வி மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டி (TVET Guide) - தொடர்பாக மக்கள் தொடர்புகள் பிரிவினால் கடிதங்கள் வெளியிடப்படுதல்மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தொடர்பாக மக்கள் தொர்பு பிரிவின் அலுவலர்கள் சம்பந்தப்படுவதுடன் பிரதேச தொழிற்துறை சபைகளுடன் இணைந்து செயற்படுவதற்காக அக் குழுக்களிற்கு யோசனைகளை முன்வைத்தல்.

- துறைசார் திறன்கள் சபைகளினால் உள்ளடக்கப்படாத ஏனைய துறைகள் தொடர்பாக தொண்டர் அடிப்படையில் சேவையாற்றக்கூடிய நிபுணர்களின் பங்களிப்புக்களை பெற்றுக்கொள்வதற்காக பத்திரிகை மூலமாக விளம்பரங்களை பிரசுரித்து விண்ணப்பங்களை கோரி அவர்களுக்கான செயலமர்வொன்றினை நடாத்துவதற்கு உரிய நடவடிக்கையினை எடுத்தல்

- இந் நாட்டிற்கு வருகைதரும் தொழிலாளர்கள் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் மற்றும் சட்டம் ஒழுங்கு என்பவை தொடர்பான கொள்கை வெளியீட்டினை தயாரிப்பதற்கு பங்களிப்பினை மேற்கொள்ளல்.

- பிரதமர் அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் விசேட தேவைகளை உடைய நபர்களுக்கு பயிற்சி வழங்குதல் தொடர்பான கூட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் என்பவற்றுக்கு பங்களிப்பினை வழங்குதல்.

- அமைச்சினால் வெளிநாட்டு புலமைப்பரிசில் தொடர்பாக திறன்கள் அபிவிருத்தி அலுவலர்களை தேர்வுசெய்வதற்கு நடாத்தப்பட்ட நேர்முகத்தேர்விற்கு பங்களிப்பினை வழங்குதல்.

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஏனைய பிரிவுகளின் கடமைகள் தொடர்பான அவசிய கோரிக்கைகளுக்கு அமைவாக பங்குபற்றல் மற்றும் செயற்படுதல்

- ஆணைக்குழுவின் நோக்கங்களை ஈடுசெய்யும் முகமாகவும் மற்றும் பிரிவின் செயற்பாடுகள் தொடர்பாவும் அவசிய பத்திரிகை விளம்பரங்களை பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- TVEC facebook இனை நாளாதுவரையாக்கி பேணுவதற்கு அவசிய நடவடிக்கைகளை எடுத்தல்.

10.0 தகவல் முறைமைகள் பிரிவு

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல் முறைமைகள் பிரிவினால் பல்வேறுபட்ட தரவுகள் சேகரிக்கப்பட்டு தேவைக்கேற்ற வகையில் ஒழுங்குபடுத்தி அத்தகவல்களை உரியவர்களுக்கு வழங்கும் பணியானது செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இப் பணியை நிறைவேற்றுவதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதுடன், அதனூடாக தகவல்களை மிக சுலபமாக பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்கும் முடியும். தகவல்களை ஒட்டு மொத்தமாக கணனியில் பதிவேற்றம் செய்வதன் மூலம் நிறுவகத்தின் அபிவிருத்தியை எட்டுவதற்கு இயலும். மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தகவல் முறைமைகள் பிரிவானது அத்தியாவசிய தகவல் சேவைகளை முறையாக வழங்குவதன் பொருட்டு, நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அத்தகவல்களை நிறுவகத்தின் முன்னேற்றத்திற்காக வெற்றிகரமாக பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறையில் வழங்கிவருவதுடன் நிறுவகத்தின் வளர்ச்சிக்காக எடுக்கப்படும் மூலோபாயங்கள் மற்றும் உரிய திட்டமிடல்கள் என்பனவற்றுக்காக நாளாந்தம் துரிதமாக அதிகரித்து வரும் தகவல்களை தரவுத் தளத்தின் ஊடாக வழங்கியும் வருகின்றது.

தகவல் முறைமைகள் பிரிவின் பிரதான குறிக்கோள்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்பாடுகளை ஒழுங்காக்குவதற்கும் சுலபமாக்குவதற்கும் அவசியமான பல்வேறுபட்ட கணனி தகவல் முறைமைகளை வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. தகவல் முறைமைகள் பிரிவானது பணிப்பாளர், பதில் தொழிற் சந்தை பகுப்பாய்வாளர் மற்றும் புள்ளிவிபரவியலாளர், பிரதி பணிப்பாளர் மற்றும் நூலகர், பதில் பிரதி பணிப்பாளர், 03 உதவிப் பணிப்பாளர்கள், அபிவிருத்தி அலுவலர் ஒருவர், ஒருங்கிணைப்பு அலுவலர் ஒருவர், கணினி வரைகலை வடிவமைப்பாளர் மற்றும் கணனி வன்பாகத் தொழில்நுட்பவியலாளர் ஆகியோரைக் கொண்ட பதவியணியொன்றை 2018 ஆம் ஆண்டில் கொண்டிருந்தது.

தகவல் முறைமைகள் பிரிவின் பிரதான செயற்பாடுகள் மற்றும் வேலைத்திட்டங்கள் கீழே தரப்படுகின்றன

- தேவைக்கேற்ப தொழிற்சந்தை தகவல்களை பகுப்பாய்வு செய்து வழங்கல்
- எதிர்வரும் வருடத்திற்கான தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி வழிகாட்டியினை (TVET Guide) வெளியீடு செய்வதல் மற்றும் தேவையான தகவல் முறைமையொனறினை பேணுதல்
- UNEVOC பிராந்திய மத்திய நிலையத்தினை நடாத்திச் செல்லுதல் மற்றும் அதன் பணிகளையும் வேலைத்திட்டங்களையும் தொடர்ச்சியாக செயற்படுத்துதல்
- தொழிற் சந்தை தகவல் முறைமை மற்றும் இணையத் தள பக்கத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்
- தொழிற் சந்தை தகவல்களை வெளியீட்டினை தயாரித்தல் மற்றும் வெளியிடுதல்
- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தொழிற்சந்தை தகவல் தொடர்பான பருவ வெளியீட்டினை (Newsletter) தயாரித்தல் மற்றும் பிரசுரித்தல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகளை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்காக கணனி முறைமையினை நிர்மாணித்தல் மற்றும் அதனை பேணுதல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள மற்றும் பதிவுசெய்யப்பட வேண்டியுள்ள நிறுவகங்களுக்கான வசதிகளை திட்டமிடுவதற்கு அவசியமான கணனி மென்பொருளினை தயாரித்தல் மற்றும் அவ் வேலையினை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு அவசியமான தகவல்களை அந் நிறுவகங்களுக்கு வழங்குதல்

- எமது நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சேவைகள் தொடர்பான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு தேவையான இணையத் தளத்தினை அபிவிருத்தி செய்தல், பேணுதல் மற்றும் இணையத்தளத்தினை நாளாதுவரையாக்குதல்.

- தேசிய தொழிற் திறன் தகுதிகள் (NVQ) சான்றிதழ்களை அச்சிடுவதற்கு தேவையான கணனி மென்பொருட்களை பேணுதல், தேவையான தரவுகளை பதிவேற்றம் செய்வதற்காக ஏனைய பதிவுசெய்யப்பட்ட பயிற்சி நிறுவகங்களுக்கு ஆலோசனைகள் வழங்கல் மற்றும் அத்தரவுகளை முகாமைத்துவம் செய்தல்

- திறன்கள் துறை அபிவிருத்தி திட்ட (SSDP) வேலைத்திட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுவரும் முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) தொடர்பாக ஓர் இணைப்பாளராக செயற்பட்டு மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு அவசியமான தகவல்களை வழங்குதல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவிலுள்ள ஒவ்வொரு பிரிவிற்கும் அவசியமான கணனி இயந்திரங்கள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட உபகரணங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக உள்ள தேவைகளை அடையாளம் காணல் மற்றும் அதற்கு தேவையான விபரக் குறிப்பினை வழங்குதல் மற்றும் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கல்

- இவ்வாணைக்குழுவில் கணனி வலையமைப்பினை ஒழுங்குசெய்தல், இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் வசதிகளை ஏற்படுத்தல், இவற்றுக்கு அவசியமான சேவர்களை (Servers) ஒழுங்கான முறையில் பராமரித்தல் மற்றும் அவற்றுக்கான வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்கள் ஆகியவற்றினை நாளாதுவரையாக்கல்

- மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு நூலக வசதிகள் மற்றும் அதனுடன் தொடர்பான தகவல் சேவைகளை திட்டமிடல் மற்றும் நூலகத்தினை நடாத்திச் செல்லுதல்

- தேவைக்கேற்ப உரிய தொழிற் சந்தைத் தரவுகளைப் பகுப்பாய்ந்து வழங்குதல் போன்ற அலுவல்களை இப்பிரிவு மேற்கொள்கின்றது.

- ஆணைக்குழுவின் அலுவல்களிற்கு அவசிய கணனி வரைபடங்களை வடிவமைத்தல்

இப்பிரிவின் பிரதான தகவல் முறைமைகளானது தொழிற் சந்தை தகவல் முறைமை, தேசிய தொழிற்திறன் தகைமை அளிப்பு முறைமை மற்றும் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி முறைமை மற்றும் பயிற்சி நிறுவகங்களை பதிவு செய்தல், பாடநெறிகளிற்கு தராதர அங்கீகாரம் அளித்தல் தொடர்பான தகவல் முறைமை என்ற முறைமைகளை உள்ளடக்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் தகவல் முறைமைகள் பிரிவிற்கு பின்வரும் பிரதான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது.

10.1 தொழிற்சந்தை தகவல் முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்

இலங்கையின் நடப்பு தொழிற் கேள்விகள்.ஃ. கிராக்கிகள் மற்றும் ஏனைய தொழிற் சந்தைத் தகவல்களை வழங்குதல் ஆகியவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு தொழிற் சந்தை தகவல் முறைமையொன்று மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தரவு ஆய்வு மற்றும் பகுப்பாய்வு ஆகியவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களை தொழிற்சந்தைத் துறைசார் கொள்கை வகுப்பாளர்கள், தொழில் வழிகாட்டுநர்கள், தொழில்சார் வேலைவாய்ப்பு நிறுவகங்கள், பயிற்றுவிப்பாளர்கள், தொழில் தருநர்கள் மற்றும் தொழில் தேடுநர்கள் ஆகியோரிற்கு பயனுறும் விதமாக பிரசுர வடிவில் வெளியிடப்பட்டு வருகின்றது.

C.C.K. சமரவிக்ரம	116	2014.08.01	4	33,713.00	67,426
B.C. ஹன்தபஹன்கொட	117	2014.09.15	4	52,143.00	104,286
H.L.K.S. குமார	118	2014.09.22	4	29,498.00	58,996
P.D.S. காரியவசம்	119	2014.10.01	4	61,067.00	122,134
A.H.N. சந்தமாலி	122	2015.06.03	3	34,419.00	51,629
H.A.D. தர்சிகா	123	2015.06.04	3	34,419.00	51,629
L.K. கொஹொம்பன்	125	2015.06.06	3	33,360.00	50,040
N.H.S.தர்ஷன	126	2015.06.07	3	33,360.00	50,040
S.B.கருணாநாயக்க	128	2015.06.08	3	33,360.00	50,040
B.L.K.P.சன்தீபனி	129	2015.06.09	3	30,640.00	45,960
I.M.G.H.லக்மால்	131	2015.07.08	3	28,016.00	42,024
H.M.V.N.Nஹரத்	132	2015.07.22	3	32,068.00	48,102
P.W.S.பரிஷினி	136	2016.09.01	2	52,143.00	52,143
N.ராஜபக்ஷ	137	2016.09.01	2	49,961.00	49,961
கொண்டு செல்லப்பட்ட C/F					**164,59,716**

பெயர்	சேவை இல	நியமனந் திகதி	வருடங்கள்	சம்பளம் (ரூ)	பணங்கொடை அளிப்பு (ரூ)
கொண்டு வரப்பட்ட B/F					**164,59,716**
W.G.S. குமார	138	2016.10.03	2	52,143.00	52,143
E.C.U.F னதுங்க	139	2016.09.01	2	52,143.00	52,143
W.M.W.B. விஜெசிங்க	140	2016.09.01	2	52,143.00	52,143
K.A.D.H. லக்மினி	141	2016.09.01	2	52,143.00	52,143
ஜயமினி மதுஷா	145	2017.05.22	1	27,620.00	13,810
H.G. நிபுண ஹன்சக	146	2017.05.22	1	30,164.00	15,082
E.W. விஜயங்க	148	2017.05.22	1	30,164.00	15,082
D.W. இஷானி	149	2017.05.22	1	30,164.00	15,082
ரவிந்து ரந்திக குமார	151	2017.08.25	1	27,620.00	13,810
V.N. ரம்மாவடு	152	2017.08.25	1	32,068.00	16,034
					16,757,188

*** சம்பளம் = திசெம்பர் மாத அடிப்படைச் சம்பளம்வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு**

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය எனது இல. My No. විවිවඉ/ඊ/ටීවිඊඒසී/1/18/21

ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය திகதி Date 2019 සැප්තැම්බර්30 දින

අධ්‍යක්ෂ ජනරාල්

තෘතීයික හා වෘත්තීය අධ්‍යාපන කොමිෂන් සභාව

තෘතීයික හා වෘත්තීය අධ්‍යාපන කොමිෂන් සභාවේ 2018 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන සහ වෙනත් නෛතික හා නියාමන අවශ්‍යතා පිළිබඳව 2018 අංක 19 දරන ජාතික විගණන පනතේ 12 වන වගන්තිය ප්‍රකාරව විගණකාධිපති වාර්තාව

විගණනය කරන ලද මූල්‍ය ප්‍රකාශන හා යටෝක්ත වාර්තාව මේ සමඟ එවමි.

ආර්.එම්.ජේ.රත්නායක
වැඩබලන විගණකාධිපති

පිටපත :- 1. ලේකම් : කර්මාන්ත හා වාණිජ කටයුතු දිගු කාලීනව අවතැන් වූ පුද්ගලයන් නැවත පදිංචි කිරීම, සමුපකාර සංවර්ධන සහ වෘත්තීය පුහුණු හා නිපුණතා සංවර්ධන අමාත්‍යාංශය.

2. ලේකම් : මුදල් අමාත්‍යාංශය.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

எனது இல் : VTY/E/TVEC/1/18/21 திகதி : 30th September 2019

பணிப்பாளர் நாயகம்
மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்று மற்றும் ஏனைய சட்டபூர்வ மற்றும் ஒழுங்கமைக்கும் தேவையுடன் தொடர்புடைய 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 12 ஆவது பிரிவிற்கு அமைவான கணக்காய்வு அத்தியட்சகரின் அறிக்கை

---

1. நிதிக்கூற்று

1.1 நிலைமையினை மதிப்பீடு செய்வதற்கான நிலைப்பாடு

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிய நிதி நிலை அறிக்கை மற்றும் அத் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான விஸ்தீரண வருமான அறிக்கை, உரிமை மாற்ற அறிக்கை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதி ஓட்ட அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுடன் தொடர்புடைய குறிப்புகள், சாரம்சப்படுத்தப்பட்ட முக்கிய கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு சட்டமூலத்தின் 154 (1) சட்டமூலத்துடன் இணைந்தான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி சட்டமூலம் ஆகிய ஏற்பாடுகளிற்கு அமைவாக எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பு சட்டமூலம் 154 (6) சட்டமூலத்திற்கு இணங்க எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

எனது அறிக்கையில் தரவுகள் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பாக தரப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் இங்கு விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் பாதிப்புகள் தவிர, சபையின் 2018 டிசெம்பர் 31 ஆம் தியகதிய நிதி நிலைமைகள் மற்றும் அத் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதி செயற்பாடுகள் மற்றும் நிதி ஓட்டங்கள் என்பன இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக உண்மையானதாகவும் மற்றும் சாதாரணமானதாகவும் காணப்படுகின்றது என்பது எனது நிலைப்பாடாகும்.

1.2 தரவுகள் கணக்காய்வு செய்யப்பட்டுள்ள அடிப்படை தொடர்பான கருத்துக்கள

(அ) இலங்கை அரச துறைசார் கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆம் பந்தியிற்கு இணங்க இலங்கை அரச துறைசார் கணக்கீட்டு நியமங்கள் மூலம் அவசியமான அல்லது அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலைமைகள் தவிர்ந்ததாக சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மீள்செலுத்தப்படவில்லை என்பதுடன், 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முற்பண பற்றுகள் தொடர்பான 39 மீதிகள் மொத்தமாக ரூபா 4,102,112.00 ம் முற்பண கடன்கள் தொடர்பான 23 மீதிகள் மொத்தமாக ரூபா 1,024,520.00 ம் மீள்செலுத்தப்பட்டு நிதிக்கூற்றில் நடமாடும் சொத்துக்களின் கீழ் முற்பணமாக ரூபா 3,077,593.00 காட்டப்பட்டுள்ளது.

(ஆ) இலங்கை அரச துறைசார் கணக்கீட்டு நியமம் 02 இல் 30 (ஆ) மற்றும் (இ) ஆகிய பந்திகளிற்கு இணங்க நிதி ஓட்ட கூற்றினை தயாரிக்கும் போது நிதி அல்லாத விடயத்தின் கீழ் காட்டப்பட வேண்டிய மீளாய்வு வருடத்திற்குரிய ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீடான ரூபா 4,042,534 இலிருந்து நிதி ஓட்டமாக காட்டப்படவேண்டிய வருடத்தில் நிதி மூலம் செலுத்தப்பட்ட ஊழியர் பணிக்கொடை கொடுப்பனவு ரூபா 995,698 மீள்செலுத்தப்பட்டு நிதி அல்லாத விடயத்தின் கீழ் ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீடாக ரூபா 3,046,836 காட்டப்பட்டுள்ளது.

(இ) இலங்கை அரச துறைசார் கணக்கீட்டு நியமம் 02 இற்கு இணங்க நிதி ஓட்ட கூற்றினை தயாரிக்கும் போது விபரமான வருமான கூற்றில் வருடத்திற்குரிய ரூபா 8,958,303 தாமதித்த வருமானம் நிதி அல்லாத விடயத்தின் கீழ் ரூபா 5,271,703 ஆக காட்டப்பட்டுள்ளது.

(ஈ) இலங்கை அரச துறைசார் கணக்கீட்டு நியமம் 02 இற்கு இணங்க நிதி ஓட்ட கூற்றினை தயாரிக்கும் போது மீளாய்வு ஆண்டில் மூலதன ஏற்பாடாக திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 1,943,990.00 மற்றும் திறன்கள் துறைசார் அபிவிருத்தி திட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 1,578,074 ஆகியவை நிதி ஓட்டமொன்றாக காட்டப்படவில்லை.

(உ) இலங்கை அரச துறைசார் கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆவது பந்தியிற்கு இணங்க சொத்துகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின் சாதாரண பெறுமதிகள் வேறுபடுதல் தொடர்பான மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியுள்ளதுடன் சாதாரண பெறுமதிகள் குறிப்பிடத்தக்களவில் வேறுபடுதல் ஏற்படாத சந்தரப்பத்தில் ஒவ்வொரு 03 அல்லது 05 வருடங்களிற்கு ஒது தடவை மீள் மதிப்பீட்டினை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் மீளாய்வு ஆண்டின் இறுதியில் நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டிருந்த நிகர பெறுமதியானது ரூபா 29,296,226 ஆகும். சொத்துகள் தொடர்பாக 2008 ஆம் ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடானது மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) இலங்கை அரச துறைசார் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆவது பந்தியிற்கு இணங்க நடமாடும் அல்லாத சொத்துகளின் வினைத்திறனான ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக செலவுகள் ரூபா 100,694,617 ஆன சொத்துகள் முழுமையாக தேய்மானமடைந்துள்ளதுடன் மேலும் அச் சொத்துகள் பயன்பாட்டிலுள்ளன. அதற்கிணங்க, ஏற்பட்டுள்ள மதிப்பீடு செய்யப்பட்ட பிழையானது இலங்கை அரச துறைசார் கணக்கீட்டு நியமம் 03 இற்கு இணங்க மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(எ) இலங்கை அரச துறைசார் கணக்கீட்டு நியமம் 19 இன் 61 ஆவது பந்தியிற்கு இணங்க ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீட்டினை கணக்கீடு செய்யும் போது அபாயம் மற்றும் நிச்சயமற்ற தன்மை மதிப்பீட்டு நுட்பத்தினை பயன்படுத்தி உண்மையான மதிப்பீட்டினை மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன் ஆணைக்குழுவினால் அலுவலர் இறுதியாக பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் சேவைக்காலம் ஆகியவற்றினை மாத்திரம் பயன்படுத்தி ரூபா 16,754,188 ஊழியர் பணிக்கொடையானது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ) மீளாய்வு ஆண்டில் கடந்த வருடங்களிற்குரிய செலவினம் செய்யப்பட்ட மொத்த தொகையான ரூபா 1,959,974 மீளாய்வு ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையின் காரணமாக மீளாய்வு ஆண்டில் மிகையான தொகையானது அவ் அளவினால் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(ஒ) 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திற்குரிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றிற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 940,628 நிதித் தொகையானது கடந்த வருடத்தின் திரண்ட செலவினம் ஒன்றாக கணக்கீடு செய்யப்படாமல் காணப்படும் நிலைமையில் மீளாய்வு ஆண்டில் செலவு செய்யப்பட்ட நிதி, மிகையான செலவின கணக்கிற்கு சரிசெய்யப்பட்டுள்ளது.

(ஓ) மீளாய்வு ஆண்டில் மூன்று மாதங்களிற்குரிய வங்கி கணக்கு ஊடாக செலவு செய்யப்பட்ட ரூபா 1,683,048 ஊழியர் சேமலாப நிதியம், கண்டறியப்படாத செலவினமாக வங்கி நல்லிணக்க கூற்றில் காட்டப்பட்டுள்ளமையின் காரணமாக நிதி மீதி மற்றும் செலுத்தப்படவேண்டிய ஊழியர் சேமலாப நிதி கணக்கின் மீதி அப் பெறுமதியினால் அதிகரித்து நிதி கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

(ஔ) மீளாய்வு ஆண்டில் டிசெம்பர் 31 ஆம் திகதியன்று இறுதி தொகையாக அடையாளப்படுத்த வேண்டிய ரூபா 3,456,740 பெறுமதியான புத்தகங்கள் மற்றும் சான்றிதழ்கள் வருடத்தின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள காரணத்தினால் வருடத்திற்குரிய மிகையான மற்றும் இறுதி தொகையானது அத் தொகையிலும் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(க) மீளாய்வு ஆண்டிற்குரிய மொத்த செலவினமான ரூபா 1,696,187 கடந்த வருடத்திற்குரிய செலவினமாக கருத்திற்கொள்ளப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையினால் மீளாய்வு ஆண்டில் மிகையான பெறுமதியானது அத் தொகையினால் கூடுதலாக காட்டப்பட்டுள்ளது.

(ங) 2018 டிசெம்பர் 31 ஆம் திகதிய நிதி நிலை கூற்றில் முற்பண மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ள மொத்த தொகையான ரூபா 1,879,170 அலுவலர்களின் முற்பண மீதி தொடர்பான விபரமான கால அட்டவணையானது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ச) மீளாய்வு ஆண்டின் டிசெம்பர் 31 ஆம் திகதிய நிதி கூற்றிற்கு இணங்க இடர்கால கடன் மீதியானது ரூபா 7,357,304 ஆகும் என்பதுடன் விபரமான அட்டவணையிற்கு அமைவாக இம் மீதியானது ரூபா 6,977,460 ஆக காணப்படுகின்றமையினால் இங்கு ரூபா 379,844 வேறுபாடானது காணப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு (இ. க. நி) அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக் காணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்புகள், இவ் அறிக்கையில் நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள் என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட அடிப்படையினை வழங்குவது தொடர்பாக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக்கூற்று தொடர்பான முகாமைத்துவம் மற்றும் நிர்வகிக்கும் நபர்களின் பொறுப்புகள்

இந் நிதிக் கூற்றினை இலங்கை அரச துறைசார் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சாதாரணமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் ஊழல்கள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பிழையான வெளிப்படுத்தல் அற்ற நிதிக்கூற்றினை தயாரிப்பதற்கு ஏதுவான தேவைப்பாடுகளை உள்ளக நிர்வாகத்தினால் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றினை தயாரிக்கும் போது ஆணைக்குழுவினை தொடர்ச்சியாக நடாத்திச் செல்லக்கூடிய ஆற்றல் தீர்மானிக்கப்படுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதுடன் முகாமைத்துவம் ஆணைக்குழுவினை பிழையாக வழிநடத்த விரும்புதல் அல்லது வேறு மாற்றுவழியற்ற போது செயற்பாட்டினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் என்பன தவிர்ந்த தொடர்ச்சியாக செயற்படும் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்புகள், நிர்வாகம் செய்யும் தரப்பினரால் வகிக்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 16 (1) உப பிரிவிற்கு இணங்க ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலத்திற்கு காலம் வெளிப்படுத்தப்படும் நிதிக்கூற்றினை தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் சொந்த வருமானம், செலவினம், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் என்பவை தொடர்பான சரியான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றில், ஊழல்கள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படும் பிழையான வெளிப்படுத்தல்கள் காணப்படவில்லை எனவும் சாதாரண உறுதிப்படுத்தலினை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயங்கள் அடங்கலான கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளியிடுதல் ஆகியன எனது நோக்கங்களாகும். சாதாரண சான்றுப்படுத்தலானது உயர் மட்ட சான்றுப்படுத்தலாகும் ஆயினும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அதில் எப்போதும் பிழையான வெளிப்படுத்தல்களே வெளிப்படும் என்னும் உறுதிப்படுத்தலானது இல்லை. ஊழல்கள் மற்றும் தவறுகள் தனியாக மற்றும் கூட்டாக செல்வாக்கு செலுத்துவதனால் பிழையான வெளிப்படுத்தல்கள் ஏற்படுத்தப்படுவதுடன் இந் நிதிக் கூற்றினை அடிப்படையாக கொண்டு பயன்படுத்துநரினால் பெறப்படும் பொருளாதார தீர்மானங்களில் தாக்கங்கள் ஏற்படக்கூடும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

என்னால் தொழில் தீர்ப்பு மற்றும் தொழில் சந்தேகம் என்பவற்றுடன் கூடிய இலங்கை கணக்காய்வு நியமத்திற்கு இணங்க கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- ஊழல் அல்லது தவறின் காரணமாக நிதிக்கூற்றில் ஏற்படக்கூடிய பிழையான வெளிப்படுத்தல்களின் ஆபத்துகளை அடையாளங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் சந்தரப்பங்களிற்கு உரிய பொருத்தமான கணக்காய்வு ஏற்பாட்டினை திட்டமிட்டு ஊழல் அல்லது தவறின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை விலக்குவதற்கு போதுமானளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்தின் அடிப்படையாகும். பிழையான வெளிப்படுத்தல்களினால் ஏற்படும் செல்வாக்குகளிலும் பார்க்க ஊழலினால் ஏற்படக்கூடிய செல்வாக்கு வலுவானதாகும் என்பதுடன் கூட்டுச் சதி, பிழையான ஆவணங்களை தயாரித்தல், திட்டமிடப்பட்ட விலகுதல்கள் அல்லது உள்ளக நிர்வாகத்திலிருந்து விலகுதல் ஊழல்கள் ஏற்படுவதற்கான காரணங்களாகும்..

- சந்தரப்பங்களிற்கு ஏற்ற வகையில் சரியான கணக்காய்வு ஏற்பாட்டினை தயாரிக்கும் நோக்கில் ஆணைக்குழுவின் உள்ளக நிர்வாகம் தொடர்பாக விளக்கமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள போதிலும் உள்ளக நிர்வாகத்தின் வினைத்திறன் தொடர்பான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்துவதற்கு திட்டமிடவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகள் தொடர்பான நியாயம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட இணைந்த வெளிப்படுத்தலின் பொருத்தப்பாடு மதிப்பிடப்பட்டுள்ளது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக போதியளவான உறுதியற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்படும் கணக்காய்வு சாட்சிகளின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பாக ஆணைக்குழுவின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படையினை பிரயோகித்து பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டுள்ளது. போதியளவான உறுதியற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்கள் தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் அவதானத்தினை செலுத்தவேண்டியதுடன் அவ் வெளிப்படுத்தல் போதியளவில் காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்திளை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளினால் அதன் தொடர்ச்சியான இருப்பு நிறைவடையமுடியும்.

- வெளிப்படுத்துதல்கள் உள்ளடங்கலாக நிதி கூற்றுகளை சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை கணிப்பீட்டிற்கு உட்படுத்தியுள்ளதுடன் அது தொடர்பாக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுகளில் உள்ளடங்கியுள்ளதாக மதிப்பிடப்பட்டது.

எனது கணக்கீட்டில் கண்டறியப்பட்ட முக்கிய கணக்காய்வு தொடர்பான கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக நிர்வாகத்தின் பலவீனம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிர்வகிக்கும் தரப்பினர்களிற்கு தெளிவுபடுத்தப்பட்டது.

2. ஏனைய சட்டபூர்வமான மற்றும் ஒழுங்கமைக்கும் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பர்டுகள் தொடர்பாக விசேட ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளிற்கு இணங்க, எனது அறிக்கையில் தரவுகள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அபிப்பிராயங்களின் பொருட்டு அடிப்படையான பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் செல்வாக்குகள் தவிர்ந்த, கணக்காய்வு தொடர்பாக அவசியமான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவூட்டலகள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன் எனது பரீட்சிப்பில் தோன்றும் முறையிற்கு இணங்க சரியான நிதி அறிக்கையினை ஆணைக்குழுவானது பேணியுள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 6 (1) (ஆ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைபாடுகளிற்கு அமைவாக ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்று கடந்த வருடத்துடன் நேரொத்ததாக காணப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 6 (1) (ஆ) (IV) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைபாடுகளிற்கு அமைவாக கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பின்பற்றப்பட்ட செயன்முறை மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சி போன்ற போதியளவான விடயங்களில் எல்லைப்படுத்தப்பட்டதில் கீழே தரப்பட்டுள்ள எந்தவொன்றும் முன்வைக்கப்படக்கூடிய அளவிற்கு எனது அவதானத்திற்கு உட்படவில்லை

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு இணங்க ஆணைக்குழுவின் நிறைவேற்று சபையில் உள்ள குறிப்பிட்ட பிரதிநிதியிற்கு ஆணைக்குழுவுடன் தொடர்புபடும் குறித்த ஒப்பந்தமொன்று தொடர்பாக நேரடியாக அல்லது வேற்று முறையில் சாதாரண வியாபார நிலைமைக்கு வெளியே தொடர்பு ஒன்று இல்லாமை.பயன்படுத்தப்

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 12 (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு இணங்க கீழே தரப்பட்டுள்ள அவதானிப்புகள் தவிர்ந்த குறித்த உரிய எழுத்து மூலமான சட்ட ஏற்பாடுகளிற்கு அல்லது ஆணைக்குழுவின் நிறைவேற்று சபை மூலம் வெளியிடப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு மாறாக செயற்பட்டுள்ளமை.

சட்டம்/ ஏற்பாட்டின் பிரயோகம்	விபரம
(அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குமுறை வெளியீடு	
(ை) நிதி ஒழுங்குமுறை 135	நிதி நிர்வாகம் தொடர்பாக அதிகாரம் அளிக்கப்படுதல் மேற்கொள்ளப்படாத அலுவலர் ஒருவரினால் மொத்தம் 8,903,532 பெறுமதியான செலவினங்களிற்குரிய 200 கொடுப்பனவு உறுதிச் சீட்டுகள் சான்றுப்படுத்தப்பட்டுள்ளன.
(ii) நிதி ஒழுங்குமுறை 257	நிதி ஒழுங்குமுறை ஏற்பாடுகளிற்கு புறம்பாக மொத்தம் 19,182,032 செலவினமானது 403 உரிய உறுதிச் சீட்டுகளின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு சான்றுப்படுத்தப்படாமல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
(iii) நிதி ஒழுங்குமுறை பிரிவு 371 (2) (உ) மற்றும் 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆம் திகதிய இல 3/ 2015 என்ற அரச நிதி சுற்றுநிருபம்	(i) ஓர் குறிப்பிட்ட செயற்பாட்டிற்கான இடைக்கால முற்பணத்தினை வழங்குதல் நிறைவேற்று அதிகாரி ஒருவரிற்கு மாத்திரம் இடம்பெற்றுள்ள போதிலும் இதற்கு எதிர்மாறாக ஆணைக்குழுவானது 85 சந்தர்ப்பங்களில் 15 முகாமைத்துவ உதவியாளர்களிற்கு மொத்தமாக ரூபா 3,327,069 பெறுமதியான குறிப்பிட்ட செயற்பாட்டு இடைக்கால முற்பணத்தினை வழங்கியுள்ளது. . (ii) குறிப்பிட்ட விசேட செயற்பாடு தொடர்பாக நிறைவேற்று அதிகாரி ஒருவரிற்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் அதிகூடிய தொகையாக ரூபா 100,000.00 வரையில் ஓர் குறிப்பிட்ட செயற்பாட்டு இடைக்கால முற்பணத்தினை வழங்கமுடியும் என்பதுடன் அதற்கு எதிர்மறையாக ஆணைக்குழுவினால் 20 சந்தர்ப்பங்களில் ரூபா 115,000 இலிருந்து ரூபா 378,000 வரையிலான பெறுமதிகளில் குறிப்பிட்ட செயற்பாட்டு இடைக்கால முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. .

	(iii) குறிப்பிட்ட செயற்பாட்டு இடைக்கால முற்பணமாக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியானது உரிய செயற்பாடு நிறைவடைந்தவுடன் செலுத்தப்படல் வேண்டும் ஆயினும் ஆணைக்குழுவில் குறிப்பிட்ட செயற்பாட்டு இடைக்கால முற்பணத்தினை செலுத்தும் போது 01 தொடக்கம் 03 மாதங்கள் வரையில் தாமதங்கள் ஏற்பட்டடுள்ளன.
(iv) நிதி ஒழுங்குமுறை பிரிவு 371 (2) (ஆ)	இடைக்கால முற்பணத்தினை வழங்குதல் தொடர்பாக குறிப்பிட்ட வேலைத்திட்டம் தொடர்பாக அரச கணக்கீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அவர்களின் அனுமதியானது பெற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். ஆயினும் துறைசார் திறன்கள் சபைகளிற்கு முற்பணங்களை வழங்கும் போது அவ்வாறான அனுமதியானது பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(v) நிதி ஒழுங்குமுறை பிரிவு 371 (5) மற்றும் 373	முற்பணங்களை செலுத்துதல் முற்பணங்கள் வழங்கப்பட்ட நிதி ஆண்டின் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியிற்கு கூடுதலாக தாமதிக்கப்படக்கூடாது என்ற போதிலும் 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த முற்பணங்களில் 2018 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 7,877,446 இனை செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டிருக்கவில்லை.
(vi) நிதி ஒழுங்குமுறை பிரிவு 372	இடைக்கால முற்பணங்களை பரீட்சித்தல் திணைக்களத்தின் தலைவர், பிரதேச தலைவர் அல்லது அது தொடர்பாக அதிகாரம அளிக்கப்பட்ட வேறு அலுவலர் ஒருவரினால் மாதத்தில் ஒருமுறைக்கு குறையாமல் முற்பணத்தினை பரீட்சித்தல் வேண்டும் என்பதுடன் திறன்கள் துறைசார் சபைகளிடம் அளிக்கப்பட்ட முற்பணங்கள் தொடர்பாக அவ்வாறான அவதானிப்புகள் மேற்கொள்ளப்படவில்லை.
(vii) நிதி ஒழுங்குமுறை பிரிவு 395 (அ) மற்றும் (ஆ)	ஆணைக்குழுவினால் பேணப்பட்டுவரும் வங்கி கணக்கிற்கு உரிய 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் வரையில் வங்கி நல்லிணக்க வெளியீட்டினை தயாரிக்கவில்லை

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய இலக்கம் பிரீடி/12 அரச வியாபார சுற்றுநிருபத்தின் பிரிவு 9.3.1 (vii)	விசேட சந்தர்ப்பங்களில் பதில் கடமை நியமனங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அது 03 மாதங்களிற்கு மேல் வழங்கப்படமுடியாது ஆயினும் அதற்கு மாறாக 05 மாதங்கள் தொடக்கம் 28 மாதங்கள் வரையிலான காலப்பகுதிகளிற்கு உயர் முகாமைத்துவ மட்டத்திற்குரிய 07 பதவிகள் தொடர்பாக பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.
(இ) 1978 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் பிரிவு 2.1	நிலையான சொத்து ஆவணத்தினை பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை
(ஈ) 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றுநிருபம் பிரிவு 3.1.6	சுற்றுநிருபத்திற்கு இணங்க அனைத்து நிதி ஆண்டுகளிலும் மார்ச் மாதம் 17 ஆம் திகதியிற்கு முன்னர் கடந்த வருட பொருட் கணக்கெடுப்பு அறிக்கையானது கணக்காய்வு அத்தியட்சகரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டிற்குரிய பொருட்கணக்கெடுப்பு அறிக்கையானது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி வரையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு இணங்க கீழே தரப்பட்டுள்ள அவதானிப்புகள் தொடர்பாக ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பணி மற்றும் செயற்பாடுகளிற்கு இணங்காமல் செயற்பட்டுள்ளமை.

அதிகாரங்கள், செயற்பணி மற்றும் செயற்பாடுகள்	அவதானிப்புகள்
(அ) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்டமூலத்தின் 02 ஆவது பிரிவிற்கு இணங்க பொருளாதாரத்தின் மனிதவள தேவைப்பாட்டிற்கு ஈடாக அனைத்து மட்டங்களிலும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி முறைமையினை திட்டமிடலினை ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் ஆணைக்குழுவின் பொது நோக்கமாகும்.	ஆணைக்குழுவினால் பயிற்சி திட்டத்தினை (VET Plan) தயார்செய்து உரிய தொழிற்பயிற்சி நிறுவகங்களிடம் கையளிக்கப்பட்டுள்ள போதிலும் அவை செயற்படுத்தப்படுதல் தொடர்பாக பின்னூட்டல் தகவல் சேகரிப்பு மேற்கொள்ளப்படவில்லை
(ஆ) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்டமூலத்தின் பிரிவுகள் 15 (1) மற்றும் 16 (1) ஆகியவற்றிற்கு இணங்க எந்தவொரு தனிநபர் அல்லது நிறுவகமொன்றினால் முன்றாம் நிலைக்கல்வி பாடநெறி அல்லது தொழிற்கல்வி பாடநெறி ஒன்றினை இச் சட்டமூலத்தின் கீழ் பதிவு செய்யப்படாமல் நடாத்த முடியாது.	ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படாமல் நாட்டில் காணப்படும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி நிறுவகங்களை அடையாளம் காண்பதற்கும் மற்றும் அத் தகவல்களை நாளாது வரையான நிலையில் பேணுவதற்கும் ஆணைக்குழு மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு இணங்க ஆணைக்குழுவின் சொத்துக்களை சிக்கனமான முறையில் வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறன் மிக்கதாக உள்ள காலப்பகுதியினுள் உரிய சட்ட ஒழுங்குகளிற்கு அமைவாக கொள்வனவு செய்து பயன்படுத்தப்படாமை.

  உரிய அமைச்சிற்குரிய கட்டிடத்தின் 08 ஆவது மாடியினை புதுப்பிப்பதற்கான முதலாவது அவத்தைக்குரிய ஒப்பந்தத்தின் விலைகோரல் பத்திரத்தின் 49.1 இற்கு இணங்க 2017 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதி வரையில் 142 நாட்களின் நிமித்தம் தாமத கட்டணமாக ரூபா 466,856 அறவிடப்பட்டுள்ளதுடன் 44 நாட்களின் நிமித்தம் தாமத கட்டணமாக ரூபா 144,658 மாத்திரம் அறவிடப்பட்டுள்ளமையினால் தாமத கட்டணமாக ரூபா 322,194 குறைவாவே அறவிடப்பட்டுள்ளது.

3 ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) 2008 ஆம் ஆண்டில் ரூபா 2,150,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட மரூட் வகையினை சேர்ந்நத மோட்டார் காரானது 2017 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18 ஆம் திகதி வரையில் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டு செயற்படாமல் உள்ளது.

(ஆ) தொழிற்கல்வி மற்றும் பயிற்சி திட்டத்தினை தயாரிப்பதற்கு 2015 ஆம் ஆண்டில் உலகலாவிய தொழிலாளர் நிறுவகம் மூலம் வழங்கப்பட்ட ரூபா 3,103,402 நிதியானது உரிய செயற்பாடு தொடர்பாக செலவு செய்யப்படாமல் 03 வருடங்களிற்கும் மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து செலுத்தப்படவேண்டிய மீதியாக நிதி கூற்றில் காட்டப்பட்டுள்ளது. உரிய திட்டத்தினால் செலவு செய்யப்படாத மீதமான நிதியானது நிறைவேற்று சபை அல்லது திறைசேரியின் அனுமதியினை பெற்றுக்கொள்ளமால் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) தொழிற்பயிற்சியினை பயிலும் பயிலுநர்களிற்கு வழங்குவதற்கு திறைசேரி நிதியத்தின் கீழ் தனியார் துறை நிறுவகம் ஒன்றினால் அச்சிடப்பட்டு நூலகத்திற்கு 2016 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 1,300,645 பெறுமதியான 15 வகைகளிற்குரிய 7,354 புத்தகங்கள் விநியோகிக்கப்படாமல் நூலகத்தில் தேங்கியுள்ளன.

(ஈ) 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையில் விற்பனை செய்வதற்காக நூலகத்திடம் கிடைக்கப்பபெற்ற 13 வகைகளிற்குரிய ரூபா 2,119,675 பெறுமதியான 6769 புத்தகங்கள் தலைவர் மற்றும் தலைவர் அவர்களின் வாய்மூலமான ஆலோசனைக்கு இணங்க விநியோகிக்குமாறு மொத்த புத்தகத்தில் குறிப்பினை இட்டு வெளி நபர்களிற்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

(உ) நிதி பிரிவில் கணக்கீட்டு செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்ட திபஸ் கணனிமயப்படுத்தப்பட்டு கணக்கீட்டு பக்கேஜ் ஆனது 2017 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆம் திகதியிலிருந்து செயற்படாமல் போன காரணத்தினால் தொகுதியில் உள்ளடக்கப்பட்டிருந்த அனைத்து தரவுகளும் அழிவடைந்துள்ளன. மேலும் கணனியிற்கு வெளியே தரவுகளை சேகரித்து வைக்கும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாதுகாப்பு செயன்முறை ஒன்றினை பின்பற்றாமையினால் தரவுகளை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு இயலாமல் போயுள்ளது.

(ஊ) ஆணைக்குழுவினால் உரிய அமைச்சிற்குரிய கட்டிடத்தின் கட்டுமானம் மற்றும் பொருத்துதல் என்பவற்றினை மேற்கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையில் மொத்தமாக ரூபா 11,057,124 செலவு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்காக எழுத்துமூலமான உடன்படிக்கையினை எட்டுதல் மற்றும் இயலுமையினை கற்கை செய்தல் மேற்கொள்ளப்படவில்லை. கட்டுமானத்தினை நிறைவு செய்து 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி பொறியியலாளரின் செயற்பாடுகளின் நிமித்தம் மத்திய ஆலோசனை பணியகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் அறிக்கையிற்கு இணங்க அச் சூழலானது கடமை நிமித்தம் பயன்படுத்த முடியாத நிலைமையானது காணப்படுகின்றது என குறிப்பிடப்பட்டிருந்தமையினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பயனற்ற செலவொன்றாகியுள்ளது.

ஆர்.எம்.ஜே. ரத்நாயக்க

பதில் கணகாய்வு அத்தியட்சகர்

கணக்காய்வு அத்தியட்சகர்
கணக்காய்வு திணைக்களம்
பத்ரமுல்ல.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட தேவைப்பாடுகள் ஆகியவை தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

உமது இல வீரீவை/ ஈ/ ரீவீஈசி/1/18/21 2019/09/30 ஆம் திகதிய மேற்கூறிய கணக்காய்வு அறிக்கை தொடர்பான விடைகள் இத்துடன் முன்வைக்கப்படுகின்றன.

1. நிதிக்கூற்று

1.2 கருத்தின் அடிப்படை

(அ) இங்கு ஊழியர் பணிக்கொடை பெறுமதியாக நிதி ஓட்ட கூற்றில் காட்டப்பட்டிருப்பது முன்னைய வருடத்தின் இறுதி மீதி மற்றும் மீளாய்வு ஆண்டின் இறுதி மீதி என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினையாகும். நிதி மூலம் செலுத்தப்பட்ட பெறுமதி மற்றும் உரிய வருடத்தின் ஒதுக்கீடு என்பவற்றினை வேறுவேறாக வருடாந்த அறிக்கைகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இங்கு நிதி ஓட்ட கூற்றின் வேறுபட்ட வருமான பெறுமதியாக காட்டப்பட்டிருப்பது முன்னைய வருடத்தின் இறுதி மீதி மற்றும் மீளாய்வு ஆண்டின் இறுதி மீதி என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினையாகும். இதனை வருடாந்த அறிக்கைகயில் வேறுவேறாக காட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வு ஆண்டில் திறைசேரி வழங்கல் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,943,990.00 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் திறன்கள் துறை அபிவிருத்தி திட்டத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டினை பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,578,074.00 இனை உடைய சொத்துக்கள் ஆகிய பெறுமதியினையுடைய நிதியின் பயன்பாடு முதலீட்டு செயற்பாடுகளில் ஏற்பட்ட ஓட்டங்கள் என்ற தலைப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

(உ) சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் என்பவை தொடர்பான மீள்மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஊ) தேய்மானமானது குறைவடைதல் மீதி அடிப்படையில் கணக்கீடு செய்யப்படுவதனால் சொத்துகள் முழுமையாக தேய்வடையவில்லை என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன். 07 ஆவது முன்னேற்றத்தின் 65 ஆவது பந்தியிற்கு இணங்க சொத்துக்களின் உற்பத்தித்திறன் மிக்க வாழ்நாட் காலம் தொடர்பாக மீளாய்வொன்றினை மேற்கொண்டு மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(எ) ஊழியர் நன்கொடையினை ஒதுக்கீடு செய்தலானது ஊழியர் ஒருவர் வருடத்தின் இறுதி மாதத்தில் பெற்றுக்கொண்ட சம்பளத்தின் அரைவாசியினை அவரது சேவைக்காலத்தினால் பெருக்குவதன் மூலமாகவே இதுவரையில் கணக்கிடப்பட்டது. அதற்கிணங்க, கணக்காய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கேற்ப ஒப்புதல் மதிப்பீட்டு முறையினை பயன்படுத்தி ஊழியர் நன்கொடையினை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான கணக்கீட்டினை மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஏ) மீளாய்வு ஆண்டில் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்த முன்னைய வருடத்திற்குரிய செலவினங்கள் முன்னைய வருடத்தில் சரிசெய்யப்பட்ட கணக்கின் மூலம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஐ) 2017 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதத்திற்கான ஊழியர் சேமலாப நிதியான ரூபா 820,530.00 நிதித் தொகையானது முன்னைய வருட கணக்குகளில் சரிசெய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டிற்கான சேமலாப நிதித்தொகை பெறுமதியினை வருடாந்த அறிக்கையினை முன்வைக்கும் போது சரிசெய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஒ) 2ஊழியர் சேமலாப நிதியிற்கு நேரடியாக வைப்பு செய்யப்பட்டிருந்த ரூபா 1,683,048 தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் யூன், அக்டோபர் மற்றும் டிசெம்பர் ஆகிய மூன்று மாதங்களிற்கான இரட்டை பதிவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளேன். வருடாந்த அறிக்கையில் அதனை வெளிப்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஓ) 2018.12.31 ஆம் திகதியன்று மாணவர் அறிக்கை புத்தகங்கள் காணப்படவில்லை என்பதுடன் மீதியாக காணப்பட்ட எழுது பொருட்கள் மற்றும் சான்றிதழ்கள் என்பவற்றிற்கான செலவினங்கள் மாத்திரமே இறுதி தொகையாக கணக்கீடு செய்யப்பட்டது. இதற்கிணங்க, கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ளமையிற்கு இணங்க, ஏனைய அச்சிடப்பட்ட புத்தகங்களின் பெறுமதியினை கணக்கிட்டு அப் பெறுமதியினையும் வருடாந்த அறிக்கையில் வெளியிடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஔ) கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க முன்னைய வருடத்திற்குரிய மொத்த செலவினமாக காட்டப்பட்டிருந்த ரூபா 1,696,187 பெறுமதியினை பரீட்சித்து சரிசெய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(க) முற்பண மீதியாக காணப்பட்ட ரூபா 1,879,170.00 தொடர்பான விபரமான அறிக்கை ஒன்றினை முன்வைக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ங) இடர்கால கடன் அறிக்கையினை முழுமையாக பரீட்சித்துப் பார்த்து இவ் வேறுபாடு தொடர்பாக மேலதிக கற்கையினை மேற்கொண்டு அதனை வருடாந்த அறிக்கையில் வெளியிடுவதற்கு முன்னர் சரிசெய்யுமாறு ஆலாசனை வழங்கப்பட்டுள்ளது.

2 (அ)

i மூன்று வருடங்களிற்கான கொடுப்பனவுகள் தாமதமடைந்திருந்தமையினால் அவற்றினை நிறைவேற்றும் செயற்பாட்டினை விரைவாக நிறைவுசெய்யும் அவசியத்தின் காரணமாக கணக்கு பிரிவில் கடமையாற்றும் உதவி பணிப்பாளர் அவர்கள் மூலம் வவுச்சர் பத்திரங்கள் சான்றுப்படுத்தப்பட்டிருந்தன. அச் சான்றுப்படுத்தும் செயற்பாட்டின் பொருட்டு உரிய முறையிலான அதிகாரத்தினை ஒப்படைக்கும் செயற்பாடானது 2019 ஆம் ஆண்டில் நிதி அதிகாரங்களை வழங்கும் போது மேற்கொள்ளப்பட்டது.

ii இங்கு செலவினத்தினை சான்றுப்படுத்துதல் கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு பக்கேஜ் மூலம் மேற்கொள்ளப்படுவதனால் கையொப்பமிடுதல் தவிர்க்கப்பட்டுள்ளதுடன் உரிய அலுவலர் மூலம் கணக்கீட்டு பக்கேஜ் இல் செலவினம் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மாத்திரம் கொடுப்பனவிற்குரிய மிகுதி செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியதாக நிதிக் கட்டுப்பாடொன்று இத் தொகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

iii i செயற்பாடுகளின் அவசியங்களின் நிமித்தம் முகாமைத்துவ உதவியாளர்களிற்கு முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வில் காட்டப்பட்டுள்ளமையிற்கு இணங்க நிறைவேற்று அலுவலர்களிற்கு மாத்திரமே முற்பணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ii கணக்காய்வினால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் 2015 திருத்தப்பட்ட நிதி ஒழுங்குமுறைகள் ஆகியவற்றிற்கு இணங்க ஒரு சந்தர்ப்பத்தில் நிறைவேற்று அதிகாரி ஒருவரிற்கு ரூபா 100,000.00 வரையிலான முற்பணங்களை மாத்திரமே வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

iii முற்பணங்கள் வழங்கப்பட்ட செயற்பாடுகள் முடிவடைந்த உடனேயே உரிய முற்பணங்களை தீர்ப்பதற்குரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு அவை பயனுள்ள முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

iv துறைசார் சபைகளிடம் ஒப்புதல்களை வழங்கும் பொருட்டு அவசிய அனுமதியானது மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் நிறைவேற்று கூட்டத்திற்கு வருடாந்த மதிப்பீட்டினை முன்வைத்து பெற்றுக்கொள்வதுடன் அம் மதிப்பீட்டிற்கு அனுமதி கிடைக்கப் பெற்றதும் துறைசார் சபைகளால் காலாண்டிற்கு ஒருதடவை முற்பணங்களை பெற்றுக்கொள்வதற்கு முன்வைக்கப்படுகின்றன. இம் முற்பணங்கள் துறைசார் சபைகளிடம் வழங்கப்படுவது நிறைவேற்று கூட்டத்தில் அனுமதியளிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட நிதியிற்கு இணங்கவேயாகும்.

v திறன்கள் துறைசார் சபைகள் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவகம் ஒன்றாக செயற்படுவதனால் அவற்றின் நிதி ஆண்டாக கருத்திற்கொள்ளப்படுவது ஒவ்வொரு ஆண்டினதும் மார்ச் 31 ஆம் திகதியாகும்.

எது எவ்வாறாயினும், மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அது தொடர்பாக உரிய துறைசார் திறன்கள் சபைகளிற்கு தெரியப்படுத்தியுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதிக்குரிய அனைத்து நிதி செயற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதனால் டிசெம்பர் மாத்தில் செயற்பட்டுவரும் திட்டத்தின் நிதியினை செலுத்துதல் அடுத்த வருடம் ஜனவரி அல்லது பெப்ரவரி மாதங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. அரச நிதியானது அனுமதிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்வதற்கு பெப்ரவரி, மார்ச் வரையில் காலம் விரயமாவதனால் அலுவலர்களிற்கு அவசிய சம்பளங்களை செலுத்துவதற்கு துறைசார் திறன்கள் சபைகளிற்கு நிதி காணப்படாமை போன்ற நடைமுறை பிரச்சினைகள் ஏற்படுவதனால் இந் நிதியினை செலுத்துவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன.

vi திறன்கள் துறைசார் சபைகள் மூலம் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படும் திட்டமானது ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்படும் அனுமதியிற்கு இணங்க காலாண்டு முறையில் முற்பண நிதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இங்கு வழங்கப்படும் முற்பணங்களை மாதாந்தம் தீர்ப்பதற்கு உரிய திறன்கள் சபைகள் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் மூன்று மாதங்களிற்கான முன்னேற்ற அறிக்கை ஒன்று 2018 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, மாதாந்தம் இடம்பெறும் துறைசார் சபைகளின் தலைவர்களிற்கிடையிலான கலந்துரையாடலானது ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையின் கீழ் நடைபெறுவதுடன் இங்கு மாதாந்தம் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் எதிர்கால செயற்பாடுகள் என்பவை பற்றி கலந்துரையாடி அவசிய வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வாறே, இங்கு அனைத்து சபைகளும் பணிப்பாளர் சபைகள் தொடர்பாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் மட்டத்தில் உள்ள அதிகாரி ஒருவர் உத்தியோகபூர்வ அதிகாரத்துடன் நியமிக்கப்பட்டுள்ளதுடன் மாதாந்தம் இடம்பெறும் பணிப்பாளர் சபை கூட்டங்களில் உரிய ஒட்டுமொத்த செயற்பாடுகள் அவ் அதிகாரிகளின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுகின்றது.

vii 2017 ஆம் ஆண்டில் கணக்கீட்டு பக்கேஜ் செயற்படாமல் போனமையினால் அனைத்து நிதி தொடர்பான தரவுகளை மீண்டும் புதிய பக்கேஜ் இல் உட்புகுத்துவதில் ஏற்பட்ட தாமதங்கள் இது தொடர்பான செல்வாக்கு செலுத்தியுள்ளதுடன் 2019 செப்ரெம்பர் மாதத்தில் 2018 ஆம் ஆண்டிற்குரிய வங்கி நல்லிணக்கத்தின் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் வங்கி நல்லிணக்கங்கள் எதிர்வரும் 02 மாதங்களில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) 03 மாதங்களை கடந்த பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்டமை தொடர்பான காரணங்களை தெளிவுபடுத்துதல்

	பதவி	காரணம்
01	பணிப்பாளர் நாயகம்	2019.05.28 ஆம் திகதிய 19/1198/115/025 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவாக பணிப்பாளர் நாயகம் பதவி வெற்றிடமானது நிரப்பப்பட்டது.
02	உதவி பணிப்பாளர் நாயகம்	இப் பதவியின் பொருட்டு பதில் கடமையிற்கு பதிலாக ஸ்தாபன விதிக் கோவையின் ஏஐஐ ஆம் பிரிவின் 12.5.4 ஆம் பந்தியிற்கு இணங்க பதில் கடமை படி கொடுப்பனவு வழங்கப்பட்டது. இப் பதவியின் பொருட்டு நேர்முகத்தேர்வினை நடாத்துதல் 2018.05.18 ஆம் திகதி இடம்பெற்றதுடன் நிறைவேற்று சபையின் கூட்டமானது இடம்பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக நியமனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. மேலும், 2018.08.27 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்ட நிறைவேற்று சபை அனுமதியிற்கு இணங்க 2018.09.14 ஆம் திகதியன்று நிரந்தர நியமனமானது வழங்கப்பட்டது.
03	பணிப்பாளர் (நிர்வாகம்)	2018.05.01 ஆம் திகதி பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்கள் திடீரென பதவி விலகியமையின் காரணமாக வெற்றிடமானது ஏற்பட்டது. அதற்கிணங்க, தற்காலிகமாக பதில் அலுவலர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டார். உரிய வெற்றிடத்தினை நிரப்புவதற்கு கீழே குறிப்பிடப்பட்ட நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டது. 1. வெற்றிடமாகிய அனைத்து பணிப்பாளர் பதவிகளின் பொருட்டும் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு 2019.08.21 ஆம் திகதியன்று பத்திரிகை வாயிலான விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டன.
04	பணிப்பாளர் (தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்கமைப்பு)	
05	பணிப்பாளர் (தொழிற்துறைசார் உறவுகள்)	
06	பிரதி பணிப்பாளர்	தொழிலாளர் சந்தை பகுப்பாய்வாளர் பதவியில் கடமையாற்றிய திருமதி லக்சரா எதிரிசூரிய அவர்ககள் 05 வருடங்கள் வெளிநாடு சென்றுள்ளமையினால் 2016.08.22 ஆம் திகதி ஏற்பட்ட பதவி வெற்றிடத்திற்கு அமைவாக சேவை அவசியத்தின் நிமித்தம் 2016.1.13 ஆம் திகதி தொடக்கம் பிரதி பணிப்பாளர் பதவியிற்கு பதில் கடமைபுரிவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

07	பிரதி பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி)	திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் பொருட்டு மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளிற்கு பிரதி பணிப்பாளர் பதவியிற்கான வெற்றிடமொன்று நிலவுவதனால் சேவை அவசியத்தின் நிமித்தம் பணிப்பாளர் நாயகத்தினால் அப் பதவியினை பதில் கடமை அடிப்படையில் வகிப்பதற்கு இந் நியமனம் வழங்கப்பட்டது. இது தொடர்பாக எந்தவொரு நிதி கொடுப்பனவுகளோ அல்லது மேலதிக சம்பளமோ வழங்கப்படவில்லை. எவ்வாறாயினும், தற்போது பதில் பிரதி பணிப்பாளர் பதவியானது செயற்பாட்டில் இல்லை.

மேலும், 2018 ஆம் ஆண்டில் நிலவிய வெற்றிடங்களிற்கு பதில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் 03 மாதங்களை கடந்த பதில் நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பது இப் பதவிகள் 07 இற்கு மாத்திரமே என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(இ) நிலையான சொத்து அறிக்கை ஒன்று பேணப்பட்டுவருவதுடன் அதில் காணப்படும் குறைபாடுகளை சரிசெய்து கணக்காய்வின் பொருட்டு முன்வைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) 2018 ஆம் ஆண்டிற்கான பொருட் கணக்கெடுப்பு 2019 செப்ரெம்பர் 07 ஆம் திகதி நடாத்தப்பட்டுள்ளதுடன் அறிக்கையினை சரியான முறையில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வின் பொருட்டு சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதிகாரம், பணிகள் மற்றும் செயற்பாடுகள்

(அ) ஆணைக்குழு 18 துறைசார் பயிற்சி திட்டங்கள் மற்றும் 08 மாகாண பயிற்சி திட்டங்கள் என்பவற்றிற்குரிய தொழிற்பயிற்சி திட்டங்களை தயாரித்துள்ளது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் பின்னூட்டல் தரவு சேகரிப்பு செயற்பாட்டிற்கு கீழ்வருவன உள்ளடங்குகின்றன.

i பாடநெறி தராதர அங்கீகாரம்.

ii இப் பயிற்சி திட்டத்திற்கு இணங்க உள்கட்டுமான வசதிகளின் பொருட்டு நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன.

iii இப் பின்னூட்டல் தகவல் சேகரிப்பானது 02 மாதங்களிற்கு ஒருமுறை ஆணைக்குழுவின் தலைமையில் நடைபெறும் தேசிய தொழிற்தகைமை நிர்வாக குழு (Steering Committee) கூட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. இக் கூட்டத்திற்கு அமைச்சினை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து தொழிற்பயிற்சி நிறுவகங்களின் பிரதிநிதிகள் பங்குபற்றுகின்றனர். எதிர்காலத்தில் இதனை மிகவும் செயற்திறன் மிக்க ஒன்றாக மாற்றுவதற்கு பூரணமாக்கப்பட்ட அனைத்து தொழிற்பயிற்சி திட்டங்களையும் ஆரம்பித்து வைக்கும் (launching) வேலைத்திட்டமானது செயற்படுத்தப்படுவதுடன் இது தொடர்பான பின்னூட்டல் தகவல்களின் முன்னேற்றம் தொடர்பாக மேற்கூறப்பட்ட தேசிய தொழிற்தகைமை நிர்வாக குழு கூட்டத்தில் விசாரிக்கப்படுகின்றது. .

(ஆ) பதிவு செய்யப்பட்டுள்ள பயிற்சி மத்திய நிலையங்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய தரவுத்தளம் ஒன்று இவ் ஆணைக்குழுவினால் பேணப்பட்டு வருவதுடன் அந்த www.tvec.gov.lk என்ற இணையத்தளத்தில் Information on Registered Training Centers என மக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு தகவல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அதில் இதுவரையில் பதிவுசெய்யப்பட்டுள்ள 2709 நிறுவகங்கள் பற்றிய தகவல்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பயிற்சி மத்திய நிலையம் ஒன்றின் பதிவு இரண்டு வருடங்களிற்கு மாத்திரம் எல்லைப்படுத்தப்பட்டுள்ளதுடன் மீண்டும் இரண்டு வருடங்களிற்கு ஒருதடவை புதுப்பித்தலினை மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள பயிற்சி மத்திய நிலையங்களின் பதிவானது காலாவதியாவதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் அந்தந்த நிறுவகங்களிடம் பதிவினை புதுப்பிப்பதற்காக விண்ணப்பிக்குமாறு நேரகாலத்துடன் மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, கோரிக்கை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் மீண்டும் பதிவினை புதுப்பிக்கும் செயன்முறையானது மேற்கொள்ளப்படுகின்றது.

2018.06.31 ஆம் திகதியன்று பதிவு செல்லுபடியாக காணப்பட்ட தொழிற்பயிற்சி மத்திய நிலையங்களின் எண்ணிக்கை 807 ஆகும் ளுளுனீ 2017 ஆம் ஆண்டில் கணக்காய்வு அத்தியட்சகரின் அறிக்கையில் உதவி கணக்காய்வு அத்தியட்சகர் மூலம் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு இணங்க மேற்கெகாள்ளப்பட்டு அவை 2018 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டுள்ளதுடன் 2018.06.03 ஆம் திகதி காணப்பட்ட செல்லுபடியாகக்கூடிய பதிவினை கொண்ட நிறுவகங்களின் எண்ணிக்கை 807 இலிருந்து 2018.12.31 ஆம் திகதியாகும் போது 1096 வரையில் பயிற்சி நிறுவகங்களின் கூடுதல் எண்ணிக்கைக்கு TVEC பதிவினை வழங்குவதற்கு முடிந்துள்ளது. அதற்கிணங்க செல்லுபடியாகக்கூடிய பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவகங்களின் எண்ணிக்கை 2019.06.30 ஆம் திகதியாகும் போது 1314 வரையில் மேலும் அதிகரித்துள்ளது. அது 62% அதிகரிப்பு முன்னேற்றமாகும். பதிவு காலம் காலாவதியாகி மீண்டும் TVEC பதிவின் பொருட்டு விண்ணப்பிக்காத பயிற்சி நிறுவகங்களின் பொருட்டு பதிவு செய்தல் சட்டபூர்வமான தேவைப்பாட்டின் தொடர்பாக தெரிவிக்கும் கடிதங்கள் இது வரையில் 919 அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 244 நிறுவகங்கள் தங்போது மூடப்பட்டுள்ளமை ஆனது கண்டறியப்பட்டுள்ளது. பதிவு செய்தல் தொடர்பாக விண்ணப்பித்ததன் பின்னர் அதனை வழங்கும் நிமித்தம் நிறுவகத்திற்கு சென்று மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டில் அத்தியவசியமான நிபந்தனைகள் அந் நிறுவகங்களால் பூர்த்தி செய்யப்பட்டு காணப்படாமையின் காரணமாக பதிவு செய்யப்படாத 470 நிறுவகங்கள் தொடர்பான தகவல்கள் தொகுதியில் காணப்படுகின்றன.

அதற்கிணங்க, ஆணைக்குழுவில் பதிவுசெய்தல் தொடர்பாக தரவு தொகுதி ஒன்று பேணப்படுவதுடன் பதிவு செய்யப்படாத நிறுவகங்களை பதிவு செய்வதற்கான முறையொன்று பின்பற்றப்படுகின்றது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆயினும், பதிவு செய்வதற்கான நிபந்தனைகளை பூர்த்தி செய்யாது நடாத்திச் செல்லப்படும் நிறுவகங்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கையினை எடுப்பதற்கு அவசிய சட்ட ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் இன்மையினால் TVEC பதிவினை பெற்றுக்கொள்ளாமல் நடாத்திச் செல்லப்படும் பயிற்சி நிறுவகங்கள் தொடர்பாக தற்போது நடவடிக்கை எடுப்பதற்கான வசதியீனமானது ஆணைக்குழுவிடம் காணப்படுகின்றது. இது தொடர்பாக உரிய நடவடிக்கையாக ஆணைக்குழு சட்டமூலத்தினை திருத்துவதற்கு யோசனை முன்மொழியப்பட்டுள்ளது.

மேலும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஆகிய ஊடகங்களின் மூலம் அவ்வப்போது மக்களை தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்படுகின்றது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டிற்கு இணங்க ஆணைக்குழுவின் சொத்துகள் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் செயற்திறன் மிக்கதாகவும் காலப்பகுதியினுள் உரிய சட்ட ஏற்பாடுகளிற்கு அமைவாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படாமை

  இவ் உடன்படிக்கையானது 2016.11.30 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டு 2016.12.31 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆயினும், இந் நிறுவகம் வேலையினை நிறைவு செய்து இறுதி பற்றுச்சீட்டினை முன்வைத்திருப்பது 2016.02.13 ஆம் திகதியாகும். அதற்கிணங்க வேலையினை முடிவுறுத்துவதற்கு 44 நாட்கள் தாமதமாகியது. அதற்காக தாமத கட்டணமாக ரூபா 144,658 அறவிடப்பட்டது. ஆயினும், கணக்காய்வின் மூலம் தாமத காலமாக காட்டப்பட்டுள்ள காலப்பகுதியினை கணக்கிட்டு இருப்பது உரிய ஒப்பந்த நிறுவகத்தினால் 2017.05.23 ஆம் திகதி அவர்கள் வேலையினை நிறைவு செய்துள்ளதாக சான்றுப்படுத்திய கடிதத்தின் திகதியின் அடிப்படையிலேயாகும். அதற்கிணங்க, இது உண்மை என வேலை நிறைவு செய்யப்பட்ட திகதியான 2016.02.13 ஆம் திகதியிலிருந்து 2017.05.23 ஆம் திகதி வரையிலான கடிதம் வழங்கப்பட்ட காலத்தில் இவ் ஒப்பந்தத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேலையினை மதிப்பிடுதல் போன்ற ஏனைய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மூலம் காட்டப்பட்ட குறித்த பிழைகளை சரிசெய்வதற்கு செலவழிந்த காலப்பகுதி என குறிப்பிடுகின்றேன். இதற்கிணங்க, உண்மையாக வேலை முடிவுறுத்தப்பட்டு கொடுப்பனவு தொடர்பாக இறுதியான பற்றுச்சீட்டு முன்வைக்கப்பட்ட திகதியானது தாமத காலமாக கணக்கிடப்பட்டுள்ளது. இது 44 நாட்கள் என குறிப்பிடுகின்றேன்.

03 ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) KF-7354 என்ற மருட் வகையினை சேர்ந்த மோட்டார் வாகனமானது திருத்தப்படவேண்டிய நிலைமையில் காணப்பட்டதுடன் அதற்கு அவசிய உதிரிப்பாகங்களின் பற்றாக்குறை மற்றும் அதிக விலை ஆகியவற்றின் காரணமாக வாகனமானது அகற்றும் செயற்பாடு தொடர்பாக தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய நியமிக்கப்பட்ட குழு மூலம் வழங்கப்பட்ட சிபார்சுகளை உள்ளடக்கிய கடிதத்தின் பிரதி ஒன்று இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. (இணைப்பு 01)

(ஆ) இம் மூன்று நிலையான வைப்புகளினதும் பெறுமதியானது 2019.08.21 ஆம் திகதியன்று இடம்பெற்ற ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டு ஊழியர் கடன் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

(இ) 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ள 5 வகைகளிற்குரிய ரூபா 744,800 பெறுமதியான அனைத்து அதாவது 6800 புத்தகங்களும் தேசிய தொழிற்தகைமை (NVQ) தொடர்பாக ஆங்கில் மொழியினை அறிமுகம் செய்யும் போது அச்சிடப்பட்ட ஆங்கில மொழி புத்தகங்களாகும். ஆயினும், ஆங்கில மொழியின் பொருட்டு NVQ வழங்கப்படாமல் இருப்பதற்கு குறிப்பிட்ட காலப்பகுதியில் எடுத்த கொள்கை ரீதியிலான தீர்மானத்தினால் இவ் ஆங்கில புத்தகங்களிற்கான கேள்விகள் குறைவடைந்தன. அதனால் இவ் ஆங்கில புத்தகங்கள் ஆணைக்குழுவின் அனுமதியின் கீழ் அரச தொழிற்பயிற்சி மத்திய நிலையங்களின் பொருட்டு இலவசமாக வழங்குவதற்கான செயன்முறையொன்று எதிர்காலத்தில் தயாரிக்கப்படும்.

ரூபா 554,845 பெறுமதியான 10 வகைகளிற்குரிய ஏனைய 554 புத்தகங்கள் ஒவ்வொரு வருடங்களிற்குமான தொழிலாளர் சந்தை தகவல், தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வழிகாட்டி (TVET Guide) மற்றும் Skill Report வெளியீடு என்பனவாகும். இவை உரிய பங்காளிகளிற்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. தொழிற்பயிற்சி துறையில் அலுவலர்கள், ஆராய்ச்சியாளர்கள் வெவ்வேறான உதவிகளை வழங்கும் நிறுவகங்கள் இவ் வெளியீட்டினை பெற்றுக்கொள்வதற்கு வருகை தருவதனால் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்தல் மற்றும் பயன்படுத்துதல் என்பவற்றின் பொருட்டு கருத்திற்கொள்ளப்படக்கூடிய எண்ணிக்கையான பிரதிகள் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

(ஈ) தொழிற்பயிற்சி துறையில் ஆங்கிலத்தினை ஊக்குவித்தல் தொடர்பாக நடாத்தப்பட்ட செயலமர்வுகளில் தலைவர் அவர்களின் வாய்மூல ஆலோசனையின் அடிப்படையில் இப் புத்தகங்கள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. இவ்வாறான நிலைமைகளை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(உ) இதுவரையில் பணிப்பாளர் நாயகம் மூலம் கணக்கீட்டு தரவுத்தளம் அழிவடைந்தமை தொடர்பாக விசாரணையினை நடாத்துவதற்கு அவசிய குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டு இங்கு காட்டப்பட்டுள்ளவாறு செயற்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(ஊ) இக் கட்டிடத்தில் கடமையாற்றுதல் ஆபத்தானது என அலுவலர்கள் தொடர்ச்சியாக கூறியமையினால் 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் திகதியன்று மத்திய பொறியியலாயளர் அலுவல்கள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தின் அறிக்கையானது பெற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கிணங்க, 8 ஆவது மாடியில் கடமைகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான சூழ்நிலையானது காணப்படவில்லை என்பதுடன் எட்டாவது மாடியானது மீண்டும் மறுசீரமைப்பு செய்யப்படல் வேண்டும் எனவும் அவ் அறிக்கையில் சுட்டடிக்காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க, அமைச்சிற்கு சொந்தமான இக் கட்டிடத்தின் எட்டாவது மாடியினை நாங்கள் கைவிட்டு சென்றுள்ளதுடன் அதற்கு பதிலாக எமக்கு 06 ஆவது மாடியில் அலுவலக சூழல் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, அமைச்சின் 02-03/03/01/2019 ஆம் இலக்க 2019.01.08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் எட்டாவது மாடியிலுள்ள அலுவலக சூழலின் பகுதி ஒன்று அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அங்கு ஒரு பகுதியில் எமது ஆவணங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

ஆர்.டீ.எஸ்.குமாரரத்ன
பணிப்பாளர் நாயகம்

பிரதிகள் - செயலாளர் - கைத்தொழில் மற்றும் வணிக செயற்பாடுகள், நீண்ட நாட்கள் இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு (அறிந்து கொள்வதற்காக)

கணக்காய்வு அதிகாரி - அரச கணக்காய்வு பிரிவு (அறிந்து கொள்வதற்காக)

பிரதி பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணை) - மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (அறிந்து கொள்வதற்காக

Tertiary and Vocational Education Commission
(Ministry of National Policies, Economic Affairs, Resettlement and Rehabilitation,
Northern Province Development, Vocational Training and Skills Development and Youth Affairs)
'Nipunatha Piyasa', 354/2, Elvitigala Mawatha,
Colombo 05, Sri Lanka
Tel; +94 (0)11 7608000, Fax: +94 (0)11 2555007
email: info@tvec.gov.lk
Web: www.tvec.gov.lk